# புதிய தமிழ் இலக்கணம்

## நான்கு ஐந்து ஆறும் படிவங்கட்கு

### இரண்டாம் பிரிவு

[அரசியலார் வெளியிட்ட புதிய பாடத்திட்ட
அமைப்பின்படி எழுதப்பெற்றது]

ஆசிரியர் :
வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர்
E. R. உயர்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி | 2/27, பிராட்வே, ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1955 [விலை ரூ. 1-6-0

முதற் பதிப்பு—நவம்பர், 1954
இரண்டாம் (திருத்திய) பதிப்பு—அக்டோபர், 1955

Kabeer Printing Works, Madras (3020)

# முன்னுரை

தமிழ் ஒரு இனியமொழி. அது நமது தாய்மொழி. நமது தாய்மொழியைப் பொன்னேபோற் போற்றிப் பயிலவேண்டுவது மக்களின் கடமை. ஆதலின், தமிழ் மக்களாகிய நாமும் நமது தாய்மொழியைப் போற்றிப் பயிலப் பெரிதுங் கடமைப் பட்டுள்ளோம்.

நமது நாடு பிறநாட்டார் ஆட்சியிலிருந்தவரை நமது மொழி தனக்குரிய முதலிடம் பெருதிருந்தது. நாடு தன்னுட்சி பெற்றது ; நாட்டு மொழியாகிய தமிழும் முதன்மொழியாயிற்று. இது மகிழ்ச்சிக் குரியதே.

நமது அரசியலார் கல்வித் துறையில் சில திருத்தங்கள் செய்யத் தொடங்கித் தமிழை முதன்மொழியாக்கி அதன் பயிற்சிக்கெனப் புதியனவாகப் பாடதிட்டங்கள் வகுத்துள்ளனர். அவற்றுள், இலக்கணப் பாடதிட்டம் பொதுமைய முறையில் அமைந்ததாகும்.

பொதுமைய முறையென்பது ஒரு பொருளை அடிப் படையாகக் கொண்டு அதனை ''ாணவர்களின் தகுதிக்கும் வகுப்புக்கும் ஏற்ப விரித்து விளக்கிச் செல்லுதல். இம் முறையில், கீழ் வகுப்பிற் கற்பிக்கப்பெற்ற பொருள்கள் சில பல விவரத்துடன் மேல் வகுப்பிற் கற்பிக்கப்படும் ;

வகுப்பு உயரவுயரப் பொருள்களின் விவரங்களும் விளக்கமும் படிப்படியாக மிகும்.

ஆதலின், அரசியலார் அம் முறையை யொட்டி, நான்கு, ஐந்து, ஆறும் படிவங்களில் தமிழை முதன் மொழியாகக்கொண்ட மாணவரனைவரும் பயிலுதற் கெனப் பொதுவாக ஒரு பாட முறையும், தமிழை இரண்டாவது மொழியாகவுங் கொள்ளும் மாணவர்கள் அழுந்திப் பயில்வதற்கெனச் சிறப்பாக ஒரு பாட முறையும் அமைத்துப் பொதுத் தமிழை 'முதற் பிரிவு' எனவும் சிறப்புத் தமிழை 'இரண்டாம் பிரிவு' எனவும் வழங்கியுள்ளனர். அவற்றுள், சென்ற 1954-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெளியான இரண்டாம் பிரிவு பாடதிட்டத்திற் கிணங்க, நான்கு ஐந்து ஆறும் படிவங்கட்கென ஒருசேர எழுதப் பெற்றதாகும் இப் புதிய தமிழ் இலக்கணம்.

இதனில், விதிகள் தெளிவாக விளக்கப் பெற் றுள்ளன; உதாரணங்களும் பயிற்சிகளும் நிரம்பத் தரப்பட்டுள்ளன. இலக்கண விதிகளும் விளக்கமும் மனத்தில் நன்கு பதிவதற்குச் சூத்திரங்கள் பெரிதும் உதவுமாதலின் முக்கியமான நன்னூற் சூத்திரங்கள் ஆங்காங்கே சேர்க்கப் பெற்றுள. ஒரு பொருளைப் பற்றிய விளக்கவுதாரணங்களை நன்குணர்ந்துகொண்ட பின்னர் அது பற்றிய சூத்திரத்தைப் படிப்பின் அது இனிது விளங்குமாதலின் அம்முறை பற்றிச் சூத்திரங் கள் விளக்க வுதாரணங்களின் பின்னே அமைக்கப் பட்டுள.

மாணவ மாணவியர்க்கு அழுத்தமான இலக்கண அறிவு செவ்விதின் அமையவேண்டு மென்பது கருதிச் சிறந்த முறையில் இவ்விலக்கண நூலை எழுதியுள்ளேனு தலின் இஃது அவர்கட்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகின்றேன்.

மேலைச்சிந்தாமணி,
திருச்சிராப்பள்ளி

ம. பெரியசாமிப் பிள்ளை,
ஆசிரியர்

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|

## நான்காம் படிவம்

I எழுத்து :

| | | |
|---|---|---|
| எழுத்தின் சாரியைகள் | ... | 1 |
| மாத்திரை | ... | 2 |
| சார்பெழுத்து | ... | 3 |
| போலி | ... | 9 |

II சொல் :

| | | |
|---|---|---|
| வடமொழி ஆக்கம் | ... | 13 |
| தத்திதாந்த நாமம் | ... | 15 |
| பெயர்ச்சொல் : | ... | 16 |
| ஆகு பெயர் | ... | 16 |
| வேற்றுமைப் பொருள்கள் | ... | 18 |
| வினைச்சொல் : | ... | 27 |
| முற்றுவினை | ... | 27 |
| எச்சவினை | ... | 38 |
| வினையெச்சங்களின் முடிபு | ... | 42 |
| இடைச்சொல் : | ... | 44 |
| உரிச்சொல் : | ... | 48 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| III பொது : | | | |
| | தொகைநிலைத் தொடர் | ... | 51 |
| | தொகாநிலைத் தொடர் | ... | 54 |
| | குறிப்பும் வெளிப்படையும் | ... | 56 |
| | திணை பால் இட வழுவமைதிகள் | ... | 58 |
| IV புணர்ச்சி : | | | |
| | எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி | ... | 63 |
| | இயல்பு புணர்ச்சி | ... | 70 |
| | வடமொழிப் புணர்ச்சி | ... | 73 |
| V யாப்பு : | | | |
| | அசை | ... | 77 |
| | நால்வகைப் பா | ... | 82 |
| VI அணி | | | |
| | உவமையணி | ... | 86 |
| | உருவகவணி | ... | 89 |
| | வேற்றுப்பொருள் வைப்பணி | ... | 90 |

எண் பொருள்

## ஐந்தாம் படிவம்


I எழுத்து :

எழுத்துக்களின் பிறப்பு ... 93
மெய்ம்மயக்கம் ... 94

II சொல் :

பெயர்ச்சொல் :
விளி ஏலாத பெயர்கள் ... 96
விளியேற்கும்போது மாறுபடும் முறை ... 96
ஆகுபெயர் ... 97
வினைச்சொல் :
'செய்யும்' என்னும் முற்று ... 100
பொது வினை ... 101
எச்சத் திரிபு ... 103
உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று ... 103
இடைச்சொல் : ... 105
உரிச்சொல் : ... 108

III பொது :

தொகையிற் பொருள் சிறந்து நிற்கும் இடம் ... 108
மரபு ... 110
கால மரபு வழுவமைதிகள் ... 110
ஒருபொருட் பன்மொழி ... 113
உபலட்சணம் ... 115

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|

IV புணர்ச்சி :

உயர்திணைப் பெயர்கள் முன்வல்லினம் ... 116
உயிரீற்றில் இயல்பாக நிற்பவை ... 119

V யாப்பு :

சீர் பிரித்து வாய்பாடு கூறுதல் ... 122
தளையும் அதன் வகையும் ... 123
ஆசிரிய விருத்தம் ... 132

VI அணி :

வேற்றுமையணி ... 135
வஞ்சப் புகழ்ச்சியணி ... 135
நிரனிறையணி ... 136

VII பொருளிலக்கணம் :

அகப்பொருளும் புறப்பொருளும் ... 138

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|

## ஆறும் படிவம்


I எழுத்து :

ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ... 141
எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு. ... 143
மெய்ம்மயக்கம் ... 146

II சொல் :

ஓரெழுத் தொருமொழி ... 151
இலக்கணை ... 152
பெயர்ச்சொல் :
விளி வேற்றுமையில் அமையும் விகாரங்கள்.. 154
ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள் ... 158
வினைச்சொல் :
ஐம்பால் வினைமுற்று ... 160
ஆக்கவினை ... 163
இடைச்சொல் : ... 164

III பொது :

இடைப் பிற வரல் ... 165
அறுவகை வினா ... 166
எண்வகை விடை ... 167
அடைமொழி ... 168
பொருள்கோள் ... 169

IV புணர்ச்சி :

மெய்யீற்றில் இயல்பு ... 178

| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| | எகர வினாவின் முன்னும் சுட்டின் முன்னும் நாற்கணம் | ... 180 |
| | செய்யுளுக்கேற்ற சிறப்பு விதிகள் சில | ... 181 |
| | இரண்டாம் வேற்றுமைப் பெயர் | ... 183 |
| V | யாப்பு : | |
| | சீர்பிரித்துத் தளைகூறுதல் | ... 185 |
| | எதுகை மோனை வகைகள் | ... 188 |
| | கட்டளைக் கலித்துறை | ... 192 |
| | பாவினங்கள் | ... 196 |
| VI | அணி : | |
| | பிறிது மொழிதல் | ... 197 |
| | கருத்துடை யடைமொழி | ... 197 |
| VII | பொருள் : | |
| | அகப்பொருள் | ... 198 |
| | புறப்பொருள் | ... 202 |

# இரண்டாம் பிரிவு

## நான்கு, ஐந்து, ஆறும் படிவங்கட்கு

## நான்காம் படிவம்

## I எழுத்து

### எழுத்தின் சாரியைகள்

**1.** எழுத்துக்களை உச்சரித்தற்கு உதவியாக அவற்றைச் 'சார்ந்து இயைந்து வருதற்குரிய சில இடைச் சொற்கள்' உண்டு. அவை 'எழுத்துச் சாரியை' எனப்படும். எழுத்துக்களுக்கு வரும் சாரியைகளாவன, **அ, காரம், கான், கரம்** என்பன.

இவற்றுள், 'அ' என்னும் சாரியை மெய்யெழுத்துக்களுக்கும், 'காரம்' என்பது உயிர்நெடில்களுக்கும், 'கான்' என்பது அவற்றுள் ஐகார ஔகாரங்களுக்கும், 'கரம்' என்பது உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் ஆகிய இருவகைக் குறில்களுக்கும் வரும்.

அன், ஆன் முதலிய மொழிச்சாரியை வேறு இருத்தலின், இவைகள் எழுத்துச் சாரியை எனப்பட்டன.

மெய்கள் சாரியை பெற்றேயும், உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறாமலேயும், மற்றவை, ஏற்ற பெற்றி, சாரியை பெற்றும் பெறாமலும் வரும். ஐகார ஔகாரங்கள் 'கான்' சாரியையுடன் 'காரம்' என்பதையும், இருவகைக் குறிலும் 'கரம்' என்னும் சாரியையுடன் 'காரம்', 'கான்' என்பவைகளையும் சாரியையாகப் பெறும். குறிலோடு 'கான்' சாரியை சேரும்போது இடையில் ஆய்தம் தோன்றும். [மெய்கள் புள்ளிவைத்தெழுதப்பட்டிருப்பினும் அவைகளை க், ங், ச் எனவும்

உயிர்மெய் நெடில்களைக் காகாரம் ஙாகாரம் சாகாரம் எனவும் கூறுதல் மரபன்று.]

### உதாரணம்

க, ங, ச—க், ங், ச் எனும் மெய்கள் அகரச் சாரியை பெற்றன.

ஆகாரம், ஐகாரம், ஔகாரம்—ஆ, ஐ, ஔ எனும் உயிர் நெடில்கள் 'காரம்' எனும் சாரியை பெற்றன.

ஐகான், ஔகான்—ஐகார ஔகாரங்கள் 'கான்' சாரியை பெற்றன.

| | |
|---|---|
| அகரம், அகாரம், அஃகான்<br>உகரம், உகாரம், உஃகான்<br>ககரம், ககாரம், கஃகான்<br>மகரம், மகாரம், மஃகான் | உயிர்க்குறிலும், உயிர் மெய்க்குறிலும் 'கரம்' என்பதுடன் 'காரம்' 'கான்' எனும் சாரியைகளையும் பெற்றன. |

ஆய்தம் தனியே வாராமையால் அதனை இடையில் வைத்து முன்னே அகர உயிரும் பின்னே 'கேனம்' என்னும் சாரியையும் தந்து அஃகேனம் என வழங்குவதறிக.

அஃகேனம் என்பதை 'அக்கன்னா' எனச் சிலர் கூறுவது தவறு.

ந. சூ. மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐ ஔ கானும் இருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற. ௧

## மாத்திரை

**2.** மாத்திரை என்பது எழுத்துக்களை ஒலித்தற்கு வேண்டிய கால அளவு. [மாத்திரை—அளவு.] ஒரு முறை கண்ணிமைத்தற்காவது கை நொடித்தற்காவது வேண்டிய காலம் ஒரு மாத்திரை எனப்படும்.

உயிரளபெடைக்கு மூன்று மாத்திரையும் நெடிலுக்கு இரண்டு மாத்திரையும் குறிலுக்கும் ஐகாரக் குறுக்கத்துக்கும் ஔகாரக் குறுக்கத்துக்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி ஒரு மாத்திரையும் ஆம். மெய்யெழுத்துக்

கும் குற்றியலிகரத்துக்கும் குற்றியலுகரத்துக்கும் ஆய்தத்துக்கும் தனித்தனி மாத்திரை அரை. மகரக் குறுக்கத்துக்கும் ஆய்தக் குறுக்கத்துக்கும் தனித்தனி மாத்திரை கால் ஆகும்.

உயிர்மெய்யெழுத்துக்கு அதிலுள்ள உயிர் மாத்திரையே மாத்திரையாம்; மெய் மாத்திரை தோன்றாது. எனவே, உயிர்மெய்க் குறிலுக்கு ஒரு மாத்திரையும் நெடிலுக்கு இரண்டு மாத்திரையும் ஆம்.

இனிச் "செருஅஅய் வாழிய நெஞ்சு" என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரை ஒலித்தலும் உண்டு. இஃது ஈரளபெடை எனப்படும்.

குறிப்பு :—இசையிலும் விளியிலும் பண்டமாற்றிலும் புலம்பலிலும் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச் சொன்ன மாத்திரையளவைக் கடந்து நீண்டு ஒலிக்கும்.

ந. சூ. மூன்றுயி ரளபிரண் டாம்நெடில் ஒன்றே
குறிலோ டையௌக் குறுக்கம் ஒற்றள
பரையொற் றிஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை. உ

## சார்பெழுத்து

**3.** தமிழில் உள்ள எழுத்துக்கள் முதலெழுத்தெனவும் சார்பெழுத்தெனவும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும். முதலெழுத்தென்பவை முதன்மையான எழுத்துக்கள். அவை உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாக முப்பதாம். சார்பெழுத்தென்பவை முதலெழுத்துக்களின் சார்பிறால் உளவாகும் எழுத்துக்கள். [சார்பு—துணை, சேர்க்கை.]

சார்பெழுத்துக்கள் உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் எனப் பத்து வகைப்படும்.

ந. சூ. உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
பஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்.

## உயிர்மெய்

4. உயிர்மெய் என்பது உயிரெழுத்து மெய்யெழுத்தோடு கூடுதலால் உளதாகும் எழுத்து.

பதினெட்டு மெய்யோடு பன்னிரண்டுயிரும் க்+அ =க, ங்+ஆ=ஙா, ச்+இ=சி என்றிங்ஙனம் தனித் தனியே கூடுதலால் உளவாகும் உயிர்மெய் யெழுத்துக்கள் (18×12=216) இருநூற்றுப் பதினாறாகும். அவை க முதல் னௌ இறுதியாக உள்ளவை.

## ஆய்தம்

5. ஆய்தம் என்பது ஒருவகை நுணுகிய ஓசையுள்ள எழுத்து. அது வரிவடிவில் ஃ இங்ஙனம் மூன்று புள்ளி வடிவமாக எழுதப்படும்.

இவ்வாய்தம் குற்றெழுத்துக்கு முன்னும் உயிரோடு கூடிய வல்லெழுத்துக்கள் ஆறன் பின்னுமாக மொழிக்கு இடையில் வரும்; மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வராது.

இது முற்றாய்தம்; அஃதாவது ஓசை குறையாத ஆய்தம்.

(உ - ம்.) எஃகு, கஃசு, அஃகான், பஃது, பஃறி.
[கஃசு - கா்பலம், பஃது - பத்து, பஃறி - ஓடம்.)

குறிப்பு:—ஆய்தம் தனியே வராது முன்னும் பின்னும் தனக்குச் சார்பாகவுள்ள சில எழுத்துக்களின் துணைபற்றி வருதலால் சார்பெழுத்தாயிற்று.

## அளபெடை

**6.** அளபெடை என்பது எழுத்துக்கள் தமக்குரிய ஒலியளவில் மிகுவது. அஃதாவது உயிரெழுத்தும் மெய் யெழுத்தும் தத்தம் மாத்திரையளவில் மிகுந்தொலித்தல். [அளபு - அளவு ; எடை - எடுத்தல், மிகுதல்.]

அளபெடை, உயிரளபெடை எனவும் ஒற்றள பெடை எனவும் இருவகைப்படும்.

## உயிரளபெடை

**7.** உயிரளபெடை என்பது உயிர் தனக்குரிய மாத்திரையளவின் மிகுந்தொலித்தல்.

செய்யுளில் ஓசை குறையும்போது மொழியின் முதல் இடை கடை இம் மூவிடத்திலுமுள்ள நெடில் தனக்குரிய ஒலியளவின் மிக்கொலிக்கும். நெடில்கள் அளபெடுத் தமைக் கறிகுறியாக அவற்றின் இனமாகிய குறில் வரி வடிவிற் காட்டப்படும்.

நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரையின் மிக்கு அளபெடுக்கும்போது ஒரு மாத்திரை மிகுந்தால் ஒரு குறிலும் இரண்டு மாத்திரை மிகுந்தால் இரு குறிலுமாக இங்ஙனம் அக்குறில்கள் அமைக்கப்படும்.

### உதாரணம்

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்.

உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

இச் செய்யுட்களில், முறையே, மொழிக்கு முதல் இடை கடை மூன்றிடத்திலும் நெடில் அளபெடுத்திருத்தல் காண்க.

## ஒற்றளபெடை

8. ஒற்றளபெடை என்பது ஒற்றெழுத்து தனக்குரிய மாத்திரையளவின் மிகுந்தொலித்தல்.

செய்யுளில் ஓசை குறையும்போது ங ஞ ண ந ம ன வ ய ல ள என்னும் பத்து மெய்யும் ஆய்தமும் மொழிக்கு இடையிலும் இறுதியிலும் அளபெடுக்கும். அரை மாத்திரை அளவுள்ள ஒற்று அதின் மிகுந்து ஒரு மாத்திரை ஒலித்தால் அதற்கறிகுறியாக ஒரு ஒற்று அமைக்கப் படும்.

ஒற்றளபெடையை உச்சரிக்கும்போது ஊன்றி யொலிக்கவேண்டும்.

### உதாரணம்

எங்ங் கிறைவ னுளன் என்பாய் மனனேயான்
எங்ங் கெனத்திரிவா ரின்.

இலங்ங்கு வெண்பிறைசூ டீசன் அடியார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்.

எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

இவற்றில் மொழிக்கு இடை இறுதிகளில் வந்துள்ள ஒற்றுக்களையும் ஆய்தத்தையும் ஊன்றி யொலித்து அவை ஒற்றள பெடையாதல் கண்டுகொள்க.

## குற்றியலுகரம்

9. குற்றியலுகரம் என்பது குறுகிய இயல்புடைய உகரம்; அஃதாவது தனக்குரிய ஓசை குறுகி வரும் உகரம்.

தனி நெடிலும், பிறவெழுத்துக்களோடு தொடர்ந்து வரும் ஆய்தம் உயிர் வலி மெலி இடை எனும் எழுத்துக் களும் ஈற்றுக் கய லெழுத்தாகத் தொடர்ந்து வரும் மொழியின் இறுதியில் வல்லின மெய்யோடு கூடி நிற்கும் உகரம் குற்றியலுகரமாம்.

குற்றியலுகரம் தனக்கு அயலெழுத்தை நோக்கி, நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத் தொடர்க் குற்றியலுகரம் என ஆறு வகைப்படும்.

### உதாரணம்

| | |
|---|---|
| ஆறு<br>சேறு | நெடிற்றொடர்க் குற்றியலுகரம். |
| எஃகு<br>வெஃகு | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். |
| அரசு<br>துரிசு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். |
| பாட்டு<br>கூத்து | வன்றொடர்க் குற்றியலுகரம். |
| பந்து<br>பொருந்து | மென்றொடர்க் குற்றியலுகரம். |
| மார்பு<br>சால்பு | இடைத்தொடர்க் குற்றியலுகரம். |

## குற்றியலிகரம்

**10.** குற்றியலிகரம் என்பது குறுகிய இயல்புடைய இகரம்; அஃதாவது தனக்குரிய ஓசை குறுகி வரும் இகரம்.

வருமொழி முதலில் யகரம் வர நிலைமொழி யீற்றி லுள்ள குற்றியலுகரம் திரிந்ததனாலாகிய இகரமும், அசையாக வருகின்ற ‘ மியா ’ என்னும் இடைச் சொல்லி லுள்ள இகரமும் குற்றியலிகரம் ஆகும்.

(உ - ம்.) வீடு + யாது = வீடி யாது.
பரிசு + யாது = பரிசி யாது.
எஃகு + யாது = எஃகி யாது.
கேள் + மியா = கேண் மியா.
சொல் + மியா = சொன் மியா.

## ஐகாரக் குறுக்கம்

**11.** *ஐகாரக் குறுக்கம் என்பது ஓசை குறுகிய ஐகாரம். அஃதாவது இரண்டு மாத்திரை ஒலிக்கவேண்டிய 'ஐ' எனும் நெடில் அவ்வளவிற்குறுகி யொலித்தல்.*

*ஐகாரம் தன் பெயரைக் குறிக்கும் இடமும் அள பெடுக்கும் இடமும் தவிர, மொழிக்கு முதல் இடை கடை யாகிய மூவிடங்களிலும் தனக்குரிய ஓசையிற் குறுகும்.*

**(உ-ம்) ஐயன், பையன், வலையன், எருமை.**

## ஔகாரக் குறுக்கம்

**12.** ஔகாரக் குறுக்கம் என்பது ஓசை குறுகிய ஔகாரம். அஃதாவது இரண்டு மாத்திரை ஒலிக்கவேண் டிய 'ஔ' எனும் நெடில் அவ்வளவிற் குறுகி யொலித்தல்.

ஔகாரமும் தன்னைக் குறிக்குமிடமும் அளபெடுக்கு மிடமும் தவிர, மொழிக்கு முதலில் தனக்குரிய ஓசையிற் குறுகும். [ஔகாரம் மொழிக் கிடையிலும் இறுதியிலும் வராது.]

**(உ-ம்.) ஔவை, ஔவியம், கௌவல், மௌவல்.**

[ஔவியம் — பொறாமை. மௌவல் — வனமல்லிகை.]

## மகரக் குறுக்கம்

**13.** மகரக் குறுக்கம் என்பது ஓசை குறுகிய மகரம். அஃதாவது அரை மாத்திரை ஒலிக்கவேண்டிய 'ம்' எனும் மெய்யெழுத்து அவ்வளவிற் குறுகி யொலித்தல்.

மகரம், (ளகர லகரம் திரிந்த) ணகர னகர மெய்களின் முன்னும், (வருமொழி முதலில் நின்ற) வகர உயிர்மெய் யின் பின்னும் வரின் தனக்குரிய அரை மாத்திரையிற் குறுகும்.

**(உ-ம்.) "மருண்ம்," "போன்ம்," வரும் வள்ளல், தரும் வளவன்.**

**இவற்றுள், மருளும் என்பது 'மருண்ம்' எனவும், போலும் என்பது 'போன்ம்' எனவும் திரிந்து நின்றன.**

## ஆய்தக் குறுக்கம்

**14.** ஆய்தக் குறுக்கம் என்பது ஓசை குறுகிய ஆய்தம். அஃதாவது அரை மாத்திரை ஒலிக்கவேண்டிய ஆய்தம் அவ்வளவிற் குறுகி யொலித்தல்.

ஆய்தம், தனிக் குறிலடுத்த லகர ளகர வீற்றுப் புணர்ச்சியில் வருமொழி முதலிலுள்ள தகரம் திரிந்ததனு லாகியதாயின், தனக்குரிய அரைமாத்திரையிற் குறுகும்.

(உ - ம்.) *அல் + திணை = அஃறிணை*, பல் + தொடை = பஃறொடை, முள் + *தீது* = முஃடீது, கள் + *தீது* = கஃடீது.

இவற்றுள், 'முள் *தீது*' முட்டீது எனவும், 'கள் *தீது*' கட்டீது எனவும் வரும்.

குறிப்பு :—குற்றியலிகரம் முதலிய ஆறு ஒலிக் குறுக்கங் களையும் நுணுக்கமாக உச்சரித்துச் செவி கருவியாக உணர்தல் வேண்டும்.

## போலி

**15.** போலி என்பது ஒன்று மற்றொன்று போல நிற்பது. இங்கே, அது போலி யெழுத்தைக் குறிக்கும்.

ஒரு சொல்லில் ஓரெழுத்து நிற்குமிடத்தில் அதற் கீடாக மற்றொரு எழுத்து வரினும் அச் சொல்லின் பொருள் வேறு படாதிருப்பின் அங்ஙனம் வரும் எழுத்து போலி யெழுத்து எனப்படும்.

போலியெழுத்து . முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி யென மூன்று வகைப்படும்.

## முதற்போலியும் இடைப்போலியும்

**16.** முதற்போலியாவது சொல்லின் முதலில் போலி யெழுத்து நிற்பது; இடைப் போலியாவது சொல்லின் இடையில் போலி யெழுத்து நிற்பது.

*அகர ஐகாரங்கள்* முதற்போலியாகவும் இடைப் போலியாகவும் வரும். அங்ஙனம் வரும்பொழுது அவை ச ஞ ய எனும் மூன்றெழுத்துக்களுக்கு முன்னர் நிற்கும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| பசல் — பைசல் | | அகரத்திற்கு ஐகாரம் முதற் போலி. |
| மஞ்சு — மைஞ்சு | | |
| மயல் — மையல் | | |
| புரசை — புரைசை | | அகரத்திற்கு ஐகாரம் இடைப் போலி. |
| இலஞ்சி — இலைஞ்சி | | |
| அரயர் — அரையர் | | |

ந. சூ. அ ஐ முதலிடை ஒக்கும் சஞயமுன்.

**17.** சில இடங்களில் ஐகாரம் யகரம் ஆகிய இவற்றின் பின்னர் நகரத்திற்கு ஞகரம் இடைப்போலியாக வரும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| மைந் நின்று | — மைஞ் ஞின்று | நகர ஞகர இடைப் போலி செய்யுளிலும் உலக வழக்கிலும் வந்தது. |
| கைந் நின்ற | — கைஞ் ஞின்ற | |
| ஐந் நூறு | — ஐஞ் ஞூறு | |
| செய்ந் நின்று | — செய்ஞ் ஞின்று | |
| நெய்ந் நின்று | — நெய்ஞ் ஞின்று | |
| சேய் நலூர் | — சேய் ஞலூர் | |

இங்கே கூறிய நகரம் தொடர்மொழியில் நிற்பதென்பதை மேலே காட்டிய உதாரணங்களினின்று கண்டுகொள்க.

ந. சூ. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே.

## இறுதிப் போலி

**18.** இறுதிப் போலியாவது சொல்லின் இறுதியிலே போலி யெழுத்து நிற்பது.

சில அஃறிணைப் பெயர்களின் இறுதியில் உள்ள மகரத்துக்கு னகரம் போலியாக வரும். [இப் பெயர்கள் இரு குறிலும் ஒரு மகர ஒற்றுமாக அமைந்திருக்கும்.]

உதாரணம்

| | | |
|---|---|---|
| நிலம் — நிலன் | | |
| நலம் — நலன் | | |
| அகம் — அகன் | மகரத்திற்கு னகரம் இறுதிப் போலியாக வந்தது. | |
| குணம் — குணன் | | |
| கலம் — கலன் | | |
| அறம் — அறன் | | |

ந. சூ. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன உளவே. சு

## இன்னும் சில போலிகள் வருமாறு

### முதற்போலி

நாயிறு — ஞாயிறு
நேயம் — ஞேயம் } நகரத்திற்கு ஞகரம் போலி.

நண்டு — ஞெண்டு — நகரத்துக்கு ஞகரமும் அகரத்துக்கு எகரமும் போலி.

### இடைப்போலி

நீந்தினன் — நீஞ்சினன்
உய்ந்தனன் — உய்ஞ்சனன் } நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் போலி.

### இறுதிப்போலி

வண்டு — வண்டர்
இடக்கு — இடக்கர் } குற்றியலுகரத்துக்கு, 'அர்' என்பது போலி.

பந்தல் — பந்தர்
குடல் — குடர் } லகரத்துக்கு ரகரம் போலி.

திறம் — திறல்
பக்கம் — பக்கல் } மகரத்துக்கு லகரம் போலி.

மதில் — மதின்
செதில் — செதின் } லகரத்துக்கு னகரம் போலி.

முதலிடை யிறுதிப் போலிகள் கலந்து வருதல்.

ஐந்து — அஞ்சு
மைந்து — மஞ்சு } — சொல் முழுதும் போலி.

பித்து — பிச்சு } இடையிலும் இறுதியிலும்
வைத்த— வைச்ச } தகரத்துக்குச் சகரம் போலி.

குறிப்பு :—பழம் என்பதைப் பனம் எனவும் விளக்கு என்பதை விழக்கு எனவும் பவளம் என்பதைப் பவழம் எனவும் இங்ஙனம் சிறுபான்மை வழங்குவன போலி ஆகா; பிழைபடக் கூறுவன.

## பயிற்சி

I. 1. எழுத்துக்களுக் குரிய சாரியைகள் எவை?

2. க், ப், ற், ஈ, ஊ, ஐ, ஔ இவ்வெழுத்துக்களுக் குரிய சாரியையோடு இவற்றை உச்சரிக்க.

3. இ, உ, ப, ம, ய, வ—இவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் என்னென்ன சாரியை வரும்? அவற்றை அச் சாரியைகளோடு ஒலித்துக் காட்டுக.

4. 'அஃகேனம்' என்பது யாது? அது ஏன் இவ்வாறு கூறப்படுகிறது?

II. 1. மாத்திரை என்பது யாது?

2. உயிரளபெடை, நெடில், குறில், மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், இவை ஒவ்வொன்றுக்கும் மாத்திரை எவ்வளவு?

3. உயிர்மெய்யெழுத்துக்களுக்கு மாத்திரை எவ்வளவு? எங்ஙனம்?

4. ஈரளபெடை என்பது யாது?

III. 1. 'சார்பெழுத்து' என்பதன் பெயர்க் காரணத்தை விளக்குக.

2. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

3. உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் இவை சார்பெழுத்தாதல் எங்ஙனம்?

4. கீழ்வருஞ் செய்யுட்களிலுள்ள முதலெழுத்தையும் சார்பெழுத்தையுங் குறிக்க. சார்பெழுத்து இன்ன வகையைச் சார்ந்தது என்பதையும் கூறுக.

1. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்.

2. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

IV. 1. போலி என்றால் என்ன?

2. முதற்போலி இடைப்போலி கடைப்போலி இவற்றை விளக்குக. இவை ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணம் தருக.

3. கீழ்க்காண்பவற்றுள் போலியுள்ள சொற்களைக் குறிக்க. அவற்றில் இன்னபோலி அமைந்துளது என்பதையும் கூறுக.

அரசன், அரையர், மையல், புரைசை, ஐஞ்ஞூறு, முகன், அறம், மறன், குலம், புலன், குணன், நலம், ஞாயிறு, இடக்கர், சிறகர், வண்டு, குடர், பந்தர், சாம்பல், பக்கல், திறம், செதின், மஞ்சு, ஐந்து, பிச்சு, ஞேயம், நீஞ்சினன்.

# II சொல்

## வடமொழி ஆக்கம்

**19.** வடமொழி ஆக்கமாவது, ஆரியச் சொல் தமிழில் வந்து கலக்கும்போது தமிழ்மொழியின் ஒலிக்கும் நடைக்கும் இலக்கண விதிக்கும் ஏற்பத் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களை ஏற்ற பெற்றியடைந்து வட சொல்லாக வழங்கி வருதல்.

### தோன்றல்

**20.** ஆரியமொழி தமிழில் வடசொல்லாக வரும் பொழுது, ரகரத்தை முதலாகவுடைய சொல்லுக்கு அ இ உ எனும் மூன்று குறிலும், லகரத்தை முதலாகவுடைய சொல்லுக்கு இ உ எனும் இரண்டு குறிலும், யகரத்தை முதலாகவுடைய சொல்லுக்கு உ எனும் ஒரு குறிலும் மொழிக்கு முதலாகி அவற்றின் முன்னே வரும்.

### உதாரணம்

| ஆரியச் சொல் | வடசொல் |
|---|---|
| ரங்கம் | அரங்கம் |
| ராம : | இராமன் |
| ரோம : | உரோமம் |

ரவ்விற்கு அ முதல் முக்குறிலும் வந்தன.

| | |
|---|---|
| லாப : | இலாபம் |
| லகு : | இலகு |

லவ்விற்கு இ உ எனும் இரு குறில் வந்தன.

| | |
|---|---|
| யம : | இயமன் |
| யக்ஷ : | இயக்கன் |

யவ்விற்கு இ எனும் ஒரு குறில் வந்தது.

## திரிதல்

**21.** இடையில் இரண்டெழுத்துக்கள் இணைந்து கூட்டெழுத்தாக நடக்கும் ஆரியச்சொல் வடசொல்லாகும் பொழுது, இகர உகர அகரங்கள் அக் கூட்டெழுத்தோடு சேர்ந்து அதன் உருவத்தை வேறுபடுத்தும்; மேலும், இணைந்து முன்னின்ற ரகத்திற்குப் பின் உகரமும் வரும்.

### உதாரணம்

| ஆரியச் சொல் | வடசொல் |
|---|---|
| வாக்யம் | வாக்கியம் |
| பத்மம் | பதுமம் |
| ரத்நம் | அரதனம் |
| கர்த்தா | கருத்தா |
| அர்த்த : | அருத்தம் |

## கெடுதல்

**22.** மெய்யெழுத்தை முதலாகவுடைய சில ஆரியச் சொல் வடசொல்லாக வரும்பொழுது அம்மெய் கெடும்.

உதாரணம்

| ஆரியச்சொல் | வடசொல் |
|---|---|
| ஸ்தோத்திரம் | தோத்திரம் |
| ஸ்துதி: | துதி |
| ஸ்தலம் | தலம் |
| ஸ்தானம் | தானம் |
| ஜ்ஞாநம் | ஞானம் |

இன்னும் சில விகாரங்கள் வருமாறு :—

| ஆரியம் | வடசொல் | ஆரியம் | வடசொல் |
|---|---|---|---|
| ரத்நம் | இரத்தினம் | சபா | சபை |
| சக்ரம் | சக்கரம் | கருணா | கருணை |
| வாக் | வாக்கு | ஹர: | அரன் |
| உத்சவ: | உற்சவம் | ஹரி: | அரி |
| பக்தி: | பத்தி | ஸ்தாலம் | தாலம் |
| விசேஷ: | விசேடம் | ஸ்தாபக: | தாபகன் |

பிறவும் இவ்வாறு வருவான் கண்டுகொள்க.

## தத்திதாந்த நாமம்

**28.** தத்திதாந்த நாமம் என்பது வடமொழியில் வழங்கும் பெயர்ச்சொற்களுள் ஒருவகைப் பெயர். 'தத்தி தாந்த நாமம்' என்னும் தொடர் 'தத்திதத்தை அந்தத்திலுடைய பெயர்' என்று பொருள்படும். 'தத்திதம்' என்பது வடமொழியிலுள்ள விகுதிகளுள் ஒருவகை.

ஒரு இயற்பெயர் சிறிது திரிந்து தன் பொருளோடு இயைபுடைய வேறொரு பொருளை உணர்த்தின் அது தத்திதாந்தப் பெயர் எனப்படும்.

உதாரணம்

| இயற்பெயர் | தத்திதாந்தம் |
|---|---|
| தசரத: | தாசரதி |
| சனக: | சானகி |
| துருபத: | திரௌபதி |
| லோக: | லௌகிகம் |
| வேத: | வைதிகம் |
| சிவ: | சைவன் |

தத்திதாந்தப் பெயர்களுக்குத் 'தசரதன் மகன் தாசரதி', 'சனகன் மகள் சானகி', 'துருபதன் மகள் திரௌபதி' என்றிங்ஙனம் விரித்துப் பொருள் காண்க.

### பயிற்சி

1. ஆரியச் சொல் தமிழில் வரும்போது என்னென்ன விகாரங்களை அடையும்? வகைக்கு மும்மூன்றுதாரணம் தருக.

2. கீழ் வருபவற்றுள் ஆரியச் சொல் வடசொல் இவற்றைக் குறிக்க.

இரவி, ரங்கம், துதி, ஸ்தானம், துலாம், சக்ரம், சக்தி, அரன், பந்தி, தாபகர், நட்டம், கஷ்டம், வருடம், கணம், மீனாக்ஷி, பங்கயம், பிச்சை, ரக்தம், இலக்குமணன்.

3. தத்திதாந்த நாமம் என்றால் என்ன?

4. கீழ்க் காணும் பெயர்களுள் இயற்பெயர், தத்திதாந்தப் பெயர் இவற்றை முறைப்படுத்துக:—

ரகு, தாசரதி, இராகவன், மிதிலை, மைதிலி, பாஞ்சாலம், துருபதன், பாஞ்சாலி, துரௌபதி, தசரதன், வைணவன், சிவன், விஷ்ணு, கேகயன், வேதம், கைகேயி, வைதிகம், மனு, மானவன், கோசலம், கௌசல்யை, பர்வதம், பார்வதி.

## பெயர்ச்சொல்

### ஆகுபெயர்

**24.** ஆகுபெயர் என்பது ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குப் பெயராகி வருவது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், கருத்தா, உவமை முதலியவற்றுள் ஒன்றன் இயற்பெயர் அதனை முடிக்க வருஞ் சொல்லோடு பொருந்தாத பொழுது, அவ்வியற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகுபெயராகக் கொள்ளப்படும்.

அது பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், குணவாகு பெயர்,

தொழிலாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர் என்றிங்ஙனம் பல வகைப்படும்.

### உதாரணம்

1. மல்லிகை மலர்ந்தது—பொருளாகு பெயர்: இது 'மல்லிகை யரும்பு மலர்ந்தது' எனப் பொருள்படுதலால், 'மல்லிகை' என்னும் பொருளின் (செடியின்) பெயர், அதன் சினை (உறுப்பு) ஆகிய அரும்புக்கு ஆகுபெயராயிற்று.

2. ஊர் கூடிற்று—இடவாகு பெயர்: இது 'ஊரிலுள்ள மக்கள் கூடினர்' எனப் பொருள்படுதலால், 'ஊர்' என்னும் இடத்தின் பெயர் அதிலுள்ள மக்களுக்கு ஆகுபெயராயிற்று.

3. கார் விளைந்தது—காலவாகுபெயர்: இது 'கார் நெல் விளைந்தது' எனப் பொருள்படுதலால், 'கார்' என்னும் மழைக் காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகு பெயராயிற்று.

4. வெற்றிலை நட்டான்—சினையாகு பெயர்: இது 'வெற்றிலைக் கொடி நட்டான்' எனப் பொருள்படுதலால், 'வெற்றிலை' என்னும் சினையின் பெயர் அதன் முதற் பொருளாகிய கொடிக்கு ஆகுபெயராயிற்று.

5. வெள்ளை யடித்தான்—குணவாகுபெயர்: இது 'வெள்ளை நிறமுள்ள சுண்ணும்படித்தான்' எனப் பொருள்படுதலால், 'வெள்ளை' என்னும் நிறத்தின் பெயர் அந் நிறத்தை யுடைய சுண்ணும்புக்கு ஆகுபெயராயிற்று.

6. பொங்கல் உண்டான்—தொழிலாகு பெயர்: இது 'பொங்குதலாலாகிய சோற்றை உண்டான்' எனப் பொருள் படுதலால், 'பொங்கல்' என்னும் தொழிலின் பெயர் அத் தொழிலை அடைந்துள்ள சோற்றுக்கு ஆகுபெயராயிற்று.

7. கம்பனைப் படியுங்கள்—கருத்தாவாகுபெயர்: இது 'கம்பன் இயற்றிய இராமாயணத்தைப் படியுங்கள்' எனப் பொருள்படுதலால், 'கம்பன்' என்னும் கருத்தாவின் பெயர் கம்பன் இயற்றிய நூலுக்கு ஆகுபெயராயிற்று.

8. மயிலே, ஒரு கீதம் பாடுக—உவமையாகு பெயர்: இது 'மயில்போலும் (அழகிய) நங்காய், ஒரு (இனிய) கீதம் பாடுவாயாக' எனப் பொருள்படுதலால், 'மயில்' என்னும்

உவமையின் பெயர் மயில்போன்ற நங்கைக்கு ஆகுபெய ராயிற்று.

## பயிற்சி

I. ஆகுபெயர் என்றால் என்ன?—விளக்கமாகக் கூறுக.

II. கீழ்க்காணும் வாக்கியங்களில் ஆகுபெயராகவுள்ள சொற் களைக் குறிக்க ; அவை இன்ன ஆகுபெயரெனவும் கூறுக.

1. வள்ளி முல்லை சூடினாள்.
2. முருகன் துவையல் உண்டான்.
3. அணுகுண்டு ஒரு போர்க்கருவி என்பது நாடறிந்தது.
4. வண்ணான் வெள்ளை கொணர்ந்தான்.
5. வேலையாட்கள் மருக்கொழுந்து நடுகின்றனர்.
6. அவர்கள் நேற்றுக் கார் நட்டனர்.
7. மக்கள் அனைவரும் திருவள்ளுவர் கற்கவேண்டும்.
8. கண்ணே, உன் மதிபோன்ற முகம் வாடியதேன்?

## வேற்றுமைப் பொருள்கள்

**25.** வேற்றுமையாவது தன்னியல்பாயுள்ள பெயர்ச் சொல், அதற்குரிய பொருளோடு கருத்தாப் பொருள், செயப்படு பொருள், கருவிப் பொருள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வேறுபடுத்துவது.

**26.** வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பன.

## முதல் வேற்றுமை

**27.** முதல்வேற்றுமையாவது பெயர்ப்பொருளைக் கருத்தாப் பொருளாக வேறுபடுத்துவது. [கருத்தா - எழு வாய்.] இதற்குத் தனியாக உருபில்லை ; பெயர் திரிபின்றி எழுவாயாக்வரின் அதுவே முதல்வேற்றுமை யுருபாகக் கொள்ளப்படும். இவ்வெழுவாய் வினை பெயர் வினா ஆகியவற்றைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

### உதாரணம்

முருகன் வருகிருன். — வினை கொண்டது.
அவன் கந்தன். — பெயர்கொண்டது.
நீ யார்? — வினுக் கொண்டது.

குறிப்பு :—எழுவாய் இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படும். தானே நேராகக் காரியத்தைச் செய்பவன் இயற்றுதற் கருத்தா; பிறரை ஏவி அவராற் காரியத்தைச் செய்விப்பவன் ஏவுதற்கருத்தா. தச்சன் கோயில் கட்டினுன் - தச்சன் : இயற்றுதற் கருத்தா. அரசன் கோயில் கட்டினுன் - அரசன் : ஏவுதற் கருத்தா.

ந.சூ. எழுவா யுருபு திரிபில் பெயரே ;
வினைபெயர் வினுக்கொளல் அதன்பய னிலையே. எ

## இரண்டாம் வேற்றுமை

**28.** இரண்டாம் வேற்றுமையாவது பெயர்ப் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது. [செயப்படுபொருள் - தொழிற்படுபொருள்.] இரண்டாம் வேற்றுமையின் உருபு 'ஐ' ஆகும்.

செயப்படுபொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலியனவாகப் பல வகைப்படும்.

கருத்தாவாற் செய்யப்படும் பொருள் செயப்படு பொருள் என்க.

### உதாரணம்

வீட்டைக் கட்டினுன் — ஆக்கப்படு பொருள்.
மரத்தை வெட்டினுன் — அழிக்கப்படு பொருள்.
புகழைப் பெற்ருன் — அடையப்படு பொருள்.
குறும்பை விட்டான் — நீக்கப்படு பொருள்.
காளையைப் போன்ருன் — ஒப்புமைப் பொருள்.
செல்வத்தை உடையவன்— உடைமைப் பொருள்.
கல்வியை விரும்பினுன் — விரும்பப்படு பொருள்.

ந. சூ. இரண்டா வதனுரு வையே ; அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும். அ

## மூன்றும் வேற்றுமை

**29.** மூன்றும் வேற்றுமையாவது பெயர்ப் பொருளைக் கருவிப் பொருளும் கருத்தாப் பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளுமாக வேறுபடுத்துவது. மூன்றுவதன் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன ; கொண்டு, உடன் என்பவை சொல்லுருபுகள்.

### உதாரணம்

கோடரியான் விறகு பிளந்தான்—கருவிப்பொருள்.
கொற்றனுல் மாளிகை கட்டப்பட்டது—இயற்றுதற் கருத்தா.
அரசனுல் மாளிகை கட்டப்பட்டது—ஏவுதற் கருத்தா.
தாயோடு மகன் வந்தான்—உடனிகழ்ச்சிப் பொருள்.

குறிப்பு :—கருவியும் முதற்கருவி எனவும் துணைக்கருவி எனவும் இருவகைப்படும். முதற்கருவி என்பது காரியமாக மாறுவது. துணைக்கருவி என்பது முதற்கருவி காரியப்படு மளவும் அதற்குத் துணையாய் நிற்பது. பஞ்சினுல் நூல் நூற்றுன்—பஞ்சு : முதற்கருவி. கதிரால் நூல் நூற்றுன்—கதிர் : துணைக்கருவி.

முதல் வேற்றுமைக் கருத்தா தன்னேடு திணை பால் இடங் களில் ஒத்த செய்வினையைக் கொண்டு முடியும். மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்படு பொருளோடு திணை பால் இடங்களில் ஒத்த செயப்பாட்டு வினையைக்கொண்டு முடியும். கருத்தா முதல் வேற்றுமையாக இருப்பின் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையில் வரும். கருத்தா மூன்றும் வேற்றுமை யாக இருப்பின் செயப்படு பொருள் முதல் வேற்றுமையில் வரும். (உ-ம்.) தச்சன் நாற்காலி செய்தான் ; தச்சனுல் நாற்காலி செய்யப்பட்டது.

ந. சூ. மூன்று வதனுருபு ஆல்ஆன் ஒடு ஓடு ;
கருவி கருத்தா உடனிகழ் வதன் பொருள். கூ

## நான்காம் வேற்றுமை

**30.** நான்காம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளை ஏற்றுக்கோடற் பொருளாக வேறுபடுத்துவது. நான்காவதற்குருபு 'கு' ஆகும். 'பொருட்டு,' 'நிமித்தம்' என்பவையும் குவ்வுருபின்மேல் 'ஆக' என்பதும் சொல்லுருபுகள்.

ஏற்றுக்கோடற் பொருள் கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை முதலியனவாகப் பலவகைப்படும். [ஏற்றுக்கோடல் - ஏற்றுக்கொள்ளுதல். நேர்ச்சி - நட்பு. தகவு - தகுதி. அதுவாதல் - ஒன்று மற்றொன்றாக ஆதல். பொருட்டு - நிமித்தம்.]

உதாரணம்

வறியோர்க்குச் சோறிட்டான் — கொடை.
எலிக்குப் பகை பூனை — பகை.
இராமனுக்கு நண்பன் குகன் — நேர்ச்சி.
அரசர்க்குத் தக்கது அரண்மனை — தகவு.
சோற்றுக்கு அரிசி வேண்டும் — அதுவாதல்.
கந்தனுக்குத் தமையன் கணேசன் — முறை.
காவிரிக்குத் தெற்குத் திரிசிரபுரம் — எல்லை.

'இதற்கு இது' என வரும் ஏற்றுக்கோடற் பொருள் காண்க.

ந. சூ. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே;
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல்
பொருளே. ௩௦

## ஐந்தாம் வேற்றுமை

**31.** ஐந்தாம் வேற்றுமையாவது பெயர்ப் பொருளை விகற்பித்தற் பொருளாக வேறுபடுத்துவது. [விகற்பித்தல் - இதனின் இது இத்தன்மைத்து எனக் கூறுதல்.] ஐந்தாவதன் உருபு இல் இன் என்பன. இல் இன் உருபுகளின்மேல் வரும் 'நின்று' 'இருந்து' என்பன சொல்லுருபுகள்.

விகற்பித்தற் பொருள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என நால்வகைப்படும்.

உதாரணம்

| | |
|---|---|
| ஊரின் நீங்கினான் | — நீங்கல். |
| பாலில் வெளிது கொக்கு | — ஒப்பு. |
| மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் | — எல்லை. |
| கல்வியிற் பெரியர் கம்பர். | — ஏது. |

நூ. ஐந்தா வதனுருபு இன்னும் இல்லும்;
நீங்கலொப் பெல்லை ஏதுப் பொருளே. கக

## ஆறும் வேற்றுமை

**32.** ஆறும்வேற்றுமையாவது பெயர்ப்பொருளைக் கிழமைப் பொருளாக வேறுபடுத்துவது. [கிழமைப் பொருள் - உரிமைப் பொருள்.] ஆறன் ஒருமைக்கு 'அது' 'ஆது' என்பனவும் பன்மைக்கு 'அ' என்பதும் உருபுகளாம். 'உடைய' என்பது சொல்லுருபாக வரும்.

கிழமை தற்கிழமை எனவும் பிறிதின் கிழமை எனவும் இருவகைப்படும். தற்கிழமையாவது 'கந்தனது கை' என்பதுபோலத் தன்னின் வேருகப் பிரிக்கமுடியாத பொருளின் சம்பந்தம். பிறிதின்கிழமையாவது 'கந்தனது ஆடை' என்பதுபோலத் தன்னின் வேருகிய பொருளின் சம்பந்தம்.

கிழமைப்பொருள் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின்ஆக்கம் என்னும் ஐந்து தற்கிழமைப் பொருளிலும், பொருள் இடம் காலம் என்னும் மூன்று பிறிதின்கிழமைப் பொருளிலும் வரும். [ஒன்றன் கூட்டம் - ஒருவகையான பொருளின் கூட்டம். பலவின் ஈட்டம் - பலவகையான பொருளின் கூட்டம். திரிபின் ஆக்கம் - ஒரு பொருள் மற்றொன்றாகத் திரிதலால் ஆவது.]

## உதாரணம்

| | | |
|---|---|---|
| பாலினது வெண்மை | — குணப் | பண்புத் தற்கிழமை. |
| பசுவினது வரவு | — தொழிற் | |
| முருகனது கால் | — உறுப்புத் தற்கிழமை. | |
| மக்களது தொகுதி | — ஒன்றன் கூட்டத் தற்கிழமை. | |
| படைகளது கூட்டம் | — பலவின் ஈட்டத் தற்கிழமை. | |
| நெல்லினது பொரி | — திரிபினாக்கத் தற்கிழமை. | |
| முருகனது மயில் | — பொருட் பிறிதின்கிழமை. | |
| முருகனது நிலம் | — இடப் பிறிதின்கிழமை. | |
| முருகனது நாள் | — காலப் பிறிதின்கிழமை. | |
| எனது கை, நினது பொருள் | — 'ஆது' உருபு. | |
| என கைகள், நின கால்கள் | — 'அ' உருபு. | |
| வள்ளியினுடைய பாட்டு | — 'உடைய' எனும் உருபு. | |

குறிப்பு :—'அ' உருபு வருமொழி பன்மையாக இருக்கும் போது மாத்திரம் வரும். மற்றைய 'அது' 'ஆது' உருபுகள் பெரும்பான்மை ஒருமையிலும் சிறுபான்மை பன்மையிலும் வரும். 'உடைய' என்பது ஒருமை பன்மை இரண்டிலும் ஏற்ற பெற்றி வரும்.

ந.சூ. ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம் ; பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின்ஆக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. கஉ

## ஏழாம் வேற்றுமை

**38.** ஏழாம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேறுபடுத்துவது. ஏழன் உருபு கண் கால் முதலியன. இடப்பொருள் இருகிழமையினும் பொருள் இடமாதல், இடம் இடமாதல், காலம் இடமாதல், சினை இடமாதல், குணம் இடமாதல், தொழில் இடமாதல் என ஆறுவகைப்படும்.

## உதாரணம்

| | | |
|---|---|---|
| மணியின் கண் ஒளி | — தற்கிழமை | பொருள் |
| மரத்தின் கண் பறவை | — பிறிதின்கிழமை | இடமாயிற்று. |
| ஊரின் கண் வீடு | — தற்கிழமை | இடம் |
| வானத்தின் கண் பறவை | — பிறிதின்கிழமை | இடமாயிற்று. |
| வாரத்தில் நாள் | — தற்கிழமை | காலம் |
| கோடையில் மல்லிகை | — பிறிதின்கிழமை | இடமாயிற்று. |
| கையில் விரல் | — தற்கிழமை | சினை |
| கையில் கடகம் | — பிறிதின்கிழமை | இடமாயிற்று. |
| கருமையில் அழகு | — தற்கிழமை | குணம் |
| இளமையில் கல்வி | — பிறிதின்கிழமை | இடமாயிற்று. |
| ஆடலில் நடிப்பு | — தற்கிழமை | தொழில் |
| ஆடலில் பாடல் | — பிறிதின்கிழமை | இடமாயிற்று. |

ந. சூ. ஏழன் உருபு கண்ணாதி யாகும்;
பொருள் முதலாறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப. கரு

ஏழன் உருபுகள் :—

ந. சூ. கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி
உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே.
கச

பக்கல், பாங்கர், முகம், மாடு, பால், இன் முதலானவைகளும் ஏழன் உருபாக வரும்.

குறிப்பு :—கண் கால் முதலியன ஏழாம் வேற்றுமையில் இடப்பொருளைக் குறிக்கும்போது மாத்திரம் அவைகளை ஏழன் உருபுகளாகக் கொள்ளுதல் வேண்டும்.

## எட்டாம் வேற்றுமை

**34.** எட்டாம் வேற்றுமையாவது பெயர்ப் பொருளை விளிப்பொருளாக 'வேறுபடுத்துவது. [விளித்தல்

அழைத்தல்.] இது விளித்தற்பொருளில் வருதலால் விளிவேற்றுமை எனவும் கூறப்படும்.

இவ் வேற்றுமையைப் பல பெயர்கள் ஏற்கும்; சில பெயர்கள் ஏலா.

எட்டன் உருபுகளாவன: விளியேற்கும் பெயரின் ஈறுதிரிதல், ஈறுகுன்றல், ஈற்றில் எழுத்து மிகுதல், இயல்பாகவே இருத்தல், ஈற்றயல் திரிதல் முதலிய விகாரங்களாம்.

முதல் வேற்றுமைக்கு வேறு உருபு இல்லாதவாறு போல எட்டாம் வேற்றுமைக்கும் வேறுருபில்லை. ஆயினும், பெயர்கள் விளியேற்கும்போது ஈறுதிரிதல் முதலிய விகாரங்களை அடைதலால் அவ்விவகாரங்களே எட்டன் உருபாகக் கொள்ளப்பட்டன. எனவே, முதல் வேற்றுமையின் விகாரமே எட்டாம் வேற்றுமை என்க. இவ் வேற்றுமையில் ஒரு பெயர் பல உருபுகளைக் கொள்ளுதலும் உண்டு.

### உதாரணம்

| | |
|---|---|
| அம்மா, சோறிடுக.<br>பிள்ளாய், சோறுண்க. | ஈறுதிரிதல் |
| தோழ, இங்குவா.<br>அன்ப, வீடு செல். | ஈறு குன்றல். |
| தாயே, பிச்சை இடு.<br>மகனே, என்னுடன் வா. | ஈறு மிகுதல் |
| தம்பி, இங்கு நில்.<br>தங்கை, இனிப் பாடு. | இயல்பு |
| சுவாமிகாள், அருள் புரிக.<br>நண்பர்காள், இங்கு வருக. | ஈற்றயல் திரிதல். |
| அப்பா, நானும் வருவேன்.<br>ஐயே, மெத்தக் கடினம். | ஈறு கெட்டு அயல் திரிதல். |
| ஐயாவே, இங்கு வருக.<br>அப்பாவே, காசு தருக. | ஈறுகெட்டு அயல் திரிந்து ஏ மிகுதல் |

'சிறாஅர், பள்ளி செல்வீர்' என அளபெடையும் சிறுபான்மை விளியுருபாக வரும்.

குறிப்பு :—முதல் வேற்றுமைக்கும் இயல்பாக நிற்கும் விளி வேற்றுமைக்கும் சொல்லால் வேற்றுமை இன்றேனும் பொருளால் வேற்றுமை உண்டு. இயல்பாக நிற்கும் விளி 'இயல்பு விளி' எனவும், அருகிலுள்ளோரை விளித்தல் 'அண்மைவிளி' எனவும், தொலைவிலுள்ளோரை விளித்தல் 'சேய்மைவிளி' எனவும், அழுகையில் விளித்தல் 'புலம்பல்விளி' எனவும் கூறப்படும். அண்மை விளிக்கு இயல்பும் இறுதியழிவும் சேய்மை விளிக்கு அளபெடையும் புலம்பல்விளிக்கு 'ஓ' வும் சிறப்புடைய உருபுகளாம்.

ந. சூ. எட்டன் உருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம் ; பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. கஎ

## பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்கள் எந்த வேற்றுமை? அவ்வேற்றுமையின் உருபையும் பொருளையும் குறிப்பிடுக.

1. அணில் நெல்லைக் கொறிக்கிறது.
2. முருகன் கோடரியால் விறகு பிளக்கிறான்.
3. பூனை பாலைக் குடிக்கிறது.
4. கந்தனுக்கு மூக்கு நீளமானது.
5. கண்ணன் கடையினின்று திரும்பி வீடு சென்றான்.
6. இயல்வது கரவேல்.
7. உறந்தையின்கண் சிறந்த அறங்கூறவையம் இருந்தது.
8. அன்பர்களே, இனி யான் பேசத் தொடங்குவேன்.
9. பாரிக்குச் சிறந்த நண்பர் கபிலர்.
10. அன்றாய், எனக்குத் தின்பண்டம் வேண்டும்.
11. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப்படும்.
12. நல்லார் இணக்கம் நன்மை தரும்.
13. பாரி முல்லைக்குத் தேரளித்த அருள் மிக்க வள்ளல்.
14. நன்றி மறப்பது நன்றன்று.

15. அரம்பையின்கீழ்க் கன்றும் உதவும் கனி.
16. ஆறு ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்.

## வினைச்சொல்

**35.** வினைச்சொல் முற்றுவினை எனவும் எச்சவினை எனவும் இருவகையாக வழங்கும்.

### முற்றுவினை

**36.** முற்றுவினையாவது பொருள் முற்றி (முடிந்து) நிற்கும் வினைச்சொல்.

(உ - ம்.) சாத்தன் உண்டான்.
கண்ணன் உறங்குகிறான்.
முருகன் உழுவான்.

உண்டான், உறங்குகிறான், உழுவான் என்னும் வினைமுற்றுக்கள் தம் பொருளை முடிக்க வேறு சொல்லை நோக்காது தாமே முடிந்து நிற்றல் காண்க.

### எச்சவினை

**37.** எச்சவினை என்பது குறைச் சொல்லாய்த் தன் பொருள் முடிவதற்கு வேறொரு சொல்லை வேண்டி நிற்கும் வினைச்சொல்.

(உ - ம்.) படித்த (பையன்); உழுத (மாடு).
வந்து (நின்றான்)? நின்று (பேசினான்).

படித்த, உழுத, வந்து, நின்று என்னும் எச்சவினைகள் குறைச் சொல்லாய்த் தம் பொருள் முடிவதற்கு வேறு சொற்களை வேண்டி நின்றமை காண்க.

**38.** வினைச்சொற்கள் தெரிநிலை வினை எனவும் குறிப்பு வினை எனவும் இரு பெரும் பிரிவாக வழங்கப் படும்.

## தெரிநிலை வினைமுற்று

**39.** தெரிநிலை வினையாவது செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினைச்சொல். [தெரி நிலை - தெரிய நிற்பது.]

தெரிநிலை வினைமுற்று, செய்பவன் (எழுவாய்), கருவி, இடம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய ஆறினையும் காட்டும். எனினும், இவ்வாறனுள் முற்றின் கண் மூன்றும் (பகுதியாற் செயலும் விகுதியால் எழுவாயும் இடைநிலையாற் காலமும்) எச்சத்தில் இரண்டும் (செயலும் காலமும்) வெளிப்படையாகத் தோன்றும்; மற்றையவை குறிப்பாகக் கொள்ளப்படும்.

(உ - ம்.) வனைகின்றான்; நெய்தான்; செல்வான்.

இவற்றுள், 'வனைகின்றான்' என்பதில் வனை என்னும் பகுதி யால் வனைதற் செயலும் ஆன் என்னும் விகுதியால் வினைமுதலா கிய குயவனும் கின்று என்னும் இடைநிலையால் நிகழ்காலமும் வெளிப்படையாகத் தோன்றுதல் காண்க. மண் தண்டம் சக்கரம் முதலிய கருவியும் வனையும் இடமும் பானை முதலிய செய்பொருளும் குறிப்பாக அறியப்படுவன ஆம். 'நெய்தான்' என்பதையும் மேற்காட்டியவாறு பகுத்து, ஆறு பொருளையும் உணர்ந்து கொள்க. 'செல்வான்' என்பது செயப்படுபொருள் இல்லாத வினையாதலின் அது செய்பொருள் ஒழிய மற்றைய ஐந்தையுமே காட்டும்.

ந. சூ. செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. கரு

## குறிப்பு வினைமுற்று

**40.** குறிப்பு வினையாவது செயலையும் காலத்தையும் குறிப்பாக உணர்த்தும் வினைச்சொல். குறிப்புவினை வினைக்குறிப்பு எனவும் கூறப்படும். வினையைக் குறிப் பாக் உடைமையின், வினைக்குறிப்பு எனப் பெயர் பெற்றது.

குறிப்புவினைமுற்று, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயரின் அடி

யாகத் தோன்றி, முற்று விகுதியினால் வினைமுதலை மாத்திரம் விளக்கும். தெரிநிலைவினைக்குக் கூறப்பட்ட மற்றைய கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்பவை குறிப்பாக உண்டெனக் கொள்க.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பொன்னன் | — பொருள் அடியாகப்பிறந்த | குறிப்பு | வினைமுற்று. | |
| உறையூரான் | — இடம் | ,, | ,, | ,, |
| ஆதிரையன் | — காலம் | ,, | ,, | ,, |
| (குறுங்)காலன் | — சினை | ,, | ,, | ,, |
| கரியன் | — குணம் | ,, | ,, | ,, |
| (கடு) நடையன் | — தொழில் | ,, | ,, | ,, |

இவை விகுதியினால் கருத்தாவை மாத்திரம் காட்டின. இவற்றுள், 'பொன்னன்' என்பது பொன்னையுடையனாயினான் என்றேனும் பொன்னையுடையனாகின்றான் என்றேனும் பொன்னையுடையனாவான் என்றேனும் விரித்துச் செயலையும் காலத்தையும் குறிப்பாக அறிந்துகொள்ளுமாறு நிற்றல் காண்க. மற்றைய வினைமுற்றுக்களும் இத்தன்மையன.

> ந. சூ. பொருள்முத லாறினுந் தோற்றிமுன் ஆறனுள்
> வினைமுதல் மாத்திரை விளக்கல்வினைக்
> குறிப்பே. கஎ

## வேறு, இல்லை, உண்டு

**41.** வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்றும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் வரும் ஒருவகைக் குறிப்புவினை முற்றுக்களாம்.

உதாரணம்

'வேறு'

| | | |
|---|---|---|
| அவன் | வேறு | படர்க்கை இடத்தில் ஐம்பாலிலும் வந்தது. |
| அவள் | ,, | |
| அவர் | ,, | |
| அது | ,, | |
| அவை | ,, | |

| | | |
|---|---|---|
| நீ | வேறு | முன்னிலை தன்மை இடங்களில் ஒருமை யிலும் பன்மையிலும் வந்தது. |
| நீர் | ,, | |
| யான் | ,, | |
| யாம் | ,, | |

இங்ஙனமே, **இல்லை, உண்டு** என்னும் முற்றுக்களையும் ஐம் பால் மூவிடங்களில் எழுவாயோடு பொருத்திக் காண்க.

**ந. சூ. வேறில்லை உண்டைம் பால்மூ விடத்தன.** கஅ

## யார், எவன்

**42.** யார், எவன் என்பனவும், முறையே, உயர் திணையிலும் அஃறிணையிலும் வரும் குறிப்பு வினை முற்றுக்களாம். இவற்றுள் 'எவன்' என்பது 'என்', 'என்னை', 'என்ன' என்றிங்ஙனம் திரிந்தும் வரும்.

(உ - ம்.) அவன் யார்
அவள் யார்
அவர் யார்
} யார் என்பது உயர்திணையில் வந்தது.

"தொடர்ப்பாடு எவன்"
"பயன் என்"
செய்தி என்னை
அது என்ன
அவை என்ன
} எவன் என்பதும் அதன் விகாரங்களும் அஃறிணையில் வந்தன.

## ஏவல் வினைமுற்று

**43.** ஏவல் வினைமுற்றுவது கட்டளைப் பொருளில் வரும் வினைமுற்று. [ஏவுதல் - கட்டளையிடுதல்.]

ஏவல்வினை ஒருமை பன்மைகளில் முன்னிலையிடத்திலும் எதிர்காலத்திலும் மாத்திரம் வரும். ஏவலொருமை வினைமுற்றுக்கு ஆய், இ என்பனவும் ஏவற் பன்மை வினைமுற்றுக்கு உம், மின், இர், ஈர், கள் என்பனவும் விகுதிகளாம்.

### உதாரணம்

| | |
|---|---|
| ஒருமை | உண்ணாய் ; கூறாய் ; செல்லாய். |
| | உண்ணுதி ; கூறுதி ; செல்லுதி. |
| பன்மை | உண்ணும் ; கூறும் ; செல்லும். |
| | உண்மின் ; கூறுமின் ; செல்லுமின். |
| | உண்ணுதிர் ; கூறுதிர் ; செல்லுதிர். |
| | உண்ணீர் ; கூறீர் ; செல்வீர். |
| | உண்ணுங்கள் ; கூறுங்கள் ; செல்லுங்கள். |
| | உண்மின்கள் ; கூறுமின்கள் ; செல்லுமின்கள். |

'கள்' என்பது விகுதிமேல் விகுதி.

குறிப்பு :—ஏவலொருமை வினைமுற்று ஆய், இ என்னும் விகுதி பெறாது பகுதி மாத்திரமாய் நின்று உண், கூறு, செல் என்றிங்ஙனம் ஓசை வேறுபாட்டாலும் கட்டளைப் பொருளை உணர்த்தும். இவ்வாறு வருவதை 'விகுதி குன்றிய ஏவலொருமை வினைமுற்று' எனக் கூறுதலும் உண்டு.

## வியங்கோள் வினைமுற்று

**44.** வியங்கோள் வினைமுற்றாவது ஒருவகை மரியாதைக் குறிப்பால் வரும் ஏவல்வினைமுற்றே. [வியம் ஏவல் : கோள் - கொள்ளுதல்.]

வியங்கோள் வினை க, ய, ர், இ, அ முதலிய விகுதிகளைப் பெற்று ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாக வரும். ஏவல் வினைபோல வியங்கோள் வினையும் எதிர் காலத்தில் மாத்திரம் வருதற் குரியது.

### உதாரணம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| படர்க்கை | அவன் | வாழ்க ; | வாழிய ; | வாழியர் ; | வாழி ; | வாழ. |
| | அவள் | ,, | ,, | ,, | ,, | ,, |
| | அவர் | ,, | ,, | ,, | ,, | ,, |
| | அது | ,, | ,, | ,, | ,, | ,, |
| | அவை | ,, | ,, | ,, | ,, | ,, |
| முன்னிலை | நீ | வாழ்க ; | வாழிய ; | வாழியர் ; | வாழி ; | வாழ. |
| | நீர் | ,, | ,, | ,, | ,, | ,, |

தன்மை { யான் வாழ்க ; வாழிய ; வாழியர் ; வாழி ; வாழ.
யாம் ,, ,, ,, ,, ,,

ந. சூ. ககரவொடு ரவ்வொடு ஈற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. கக

குறிப்பு :—வியங்கோள் வினைமுற்று வாழ்க, செழிக்க என வாழ்த்தற் பொருளிலும் அழிக, ஒழிக என வைதற் பொருளிலும், கூறுக, வரைக என விதித்தற்பொருளிலும், ஈக, அருள்க என் வேண்டுகோட்பொருளிலும் வரும்.

ஏவலுக்கும் வியங்கோளுக்கு மிடையே உள்ள வேறுபாடு—(1) ஏவல் விதித்தற் பொருளில் மாத்திரம் வரும் ; வியங்கோள் வாழ்த்தல், வைதல் முதலிய பல பொருள்களில் வரும். (2) ஏவல் முன்னிலையில் மாத்திரம் வரும் ; வியங்கோள் மூவிடத்திலும் வரும். (3) ஏவலில் ஒருமை பன்மை என்னும் பாகுபாடு உண்டு ; வியங்கோளில் அப்பாகுபாடு இல்லை.

## தெரிநிலை வினைமுற்றின் பகுப்பு

**45.** ஒரு பகுதியினின்று தோன்றும் தெரிநிலை வினைமுற்று ஐம்பால் மூவிடங்களில் முக்காலத்திலும் வருதலால் இருபத்தேழு வகைப்படும்.

### உதாரணம்

பகுதி – நில்

| | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| தன்மை | ஒருமை : | நின்றேன் | நிற்கிறேன் | நிற்பேன் |
| | பன்மை : | நின்றோம் | நிற்கிறோம் | நிற்போம் |
| முன்னிலை | ஒருமை : | நின்றாய் | நிற்கிறாய் | நிற்பாய் |
| | பன்மை : | நின்றீர் | நிற்கிறீர் | நிற்பீர் |
| படர்க்கை | ஆண்பால் : | நின்றான் | நிற்கிறான் | நிற்பான் |
| | பெண்பால் : | நின்றாள் | நிற்கிறாள் | நிற்பாள் |
| | பலர்பால் : | நின்றார் | நிற்கிறார் | நிற்பார் |
| | ஒன்றன்பால் : | நின்றது | நிற்கிறது | நிற்பது |
| | பலவின்பால் : | நின்றன | நிற்கின்றன | நிற்பன |

ஒன்றன் பாலிலும் பலவின்பாலிலும் வரும் எதிர்கால முற்றுக்கள் இக்காலத்தில் ' மாடு நிற்கும் ' ' மாடுகள் நிற்கும் '

எனச் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு முற்ருகவே வழங்கும். தெரிநிலை வினைமுற்று இருபத்தேழாம். எனவே, குறிப்பு வினை முற்று, காலம் விளங்காமையால், ஒன்பது வகைப்படும் என்க.

## பயிற்சி

I. 1. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று இவற்றின் பெயர்க் காரணத்தை விளக்குக. தெரிநிலை வினைமுற்றிலிருந்து எவ்வெவற்றை அறியலாம்?–உதாரணத்துடன் விளக்குக. குறிப்பு வினைமுற்ருல் அறியலாவது எது? குறிப்பு வினைமுற்று எவற்றிலிருந்து தோன்றும்?–உதாரணம் காட்டுக. ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவான குறிப்பு வினைகள் யாவை? யார், எவன்–இவை என்ன சொற்கள்.

2. கீழ்க்காணும் சொற்களில் தெரிநிலைவினை குறிப்பு வினை இவற்றைக் குறிக்க :

*உண்கிருன் ; உறங்குவான் ; மதுரையான் ; நெடுஞ்செவியன் ; வனைந்தான் ; ஓடுகின்ருன் ; என்னை ; யார் ; நெய்கிருன்; உழுதான் ; பொருளன் ; கரியன் ; (கடு)நடையன் ; என் ; இல்லை, உண்டு.*

II. 1. ஏவல் வினைமுற்ருவது யாது? ஏவல் ஒருமைக்கும் ஏவற் பன்மைக்கும் விகுதிகள் யாவை? வியங்கோள் - பெயர்க் காரணத்தை விளக்குக. வியங்கோள் வினைமுற்றின் விகுதிகள் யாவை? ஏவலுக்கும் வியங்கோளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

2. கீழ்க்காணும் சொற்களில் ஏவல், வியங்கோள் இவற்றைக் குறிப்பிடுக :

ஓங்குக ; உண் ; செழிக்க ; வாழிய ; வாராய் ; கூறுதி ; பாடுதிர் ; வாழ்க ; ஓடுமின் ; வாரும் ; படியுங்கள்.

III. தெரிநிலை வினைமுற்று இருபத்தேழு வகைப்படுதல் எங்ஙனம்? செல், தின் இப்பகுதிகளிலிருந்து அப்பகுப்பை விரித்தெழுதுக.

**46. தெரிநிலை வினைமுற்று, தன்வினை பிறவினை எனவும், செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்ருவினை எனவும், செய்வினை செயப்பாட்டு வினை எனவும் இங்ஙனம் பல வேறு வகைப்படும்.**

## தன்வினை, பிறவினை

**47.** தன்வினையாவது கருத்தா தானே செய்கின்ற வினை. பிறவினையாவது கருத்தா பிறராற் செய்விக்கும் வினை.

தன்வினை பிறவினையாவதற்கு வி, பி என்னும் விகுதிகளுள் ஏற்பதொன்றைத் தன்வினைப் பகுதியோடு சேர்க்கவேண்டும்.

உதாரணம்

| தன்வினை | பிறவினை |
|---|---|
| செய் | செய்வி |
| காண் | காண்பி |
| தருகிருன் | தருவிக்கிருன் |
| உண்பான் | உண்பிப்பான் |
| கற்ற | கற்பித்த |
| வாழ்ந்து | வாழ்வித்து |

**48.** சில வினைப்பகுதிகள் கு சு டு து பு று என்னும் விகுதிகளுள் ஏற்பதொன்றைப் பெற்றும், சில வினைப் பகுதிகள் மெல்லொற்று வல்லொற்ருகியும், மற்றுஞ் சில பகுதிகள் தம் ஒற்று இரட்டியும் பிறவினையாகும்.

உதாரணம்

| தன்வினை | பிறவினை | |
|---|---|---|
| போ | போக்கு | தன்வினை கு, சு, டு, து, பு, று, என்னும் விகுதிகளுள் ஒன்றைப் பெற்றுப் பிறவினை ஆயிற்று. |
| பாய் | பாய்ச்சு | |
| உருள் | உருட்டு | |
| நட | நடத்து | |
| எழு | எழுப்பு | |
| பயில் | பயிற்று | |
| தோன்று | தோற்று | தன்வினை மெல்லொற்று வல்லொற்ருகிப் பிறவினை ஆயிற்று. |
| திருந்து | திருத்து | |
| கலங்கு | கலக்கு | |
| பொருந்து | பொருத்து | |

| | | |
|---|---|---|
| உருகு | உருக்கு | தன்வினை ஒற்று இரட்டிப் பிறவினை ஆயிற்று. |
| பெருகு | பெருக்கு | |
| ஓடு | ஓட்டு | |
| கூடு | கூட்டு | |

## செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை

**49.** செயப்படுபொருள் குன்றியவினையாவது செயப்படுபொருள் இல்லாத வினைச்சொல்; செயப்படுபொருள் குன்றாவினையாவது செயப்படுபொருள் உள்ள வினைச்சொல். [குன்றிய - குறைந்த, இல்லாத; குன்றா - குன்றாத, குறையாத, உள்ள.]

### உதாரணம்

| | |
|---|---|
| கடைக்குச் சென்றான். வீட்டில் நுழைந்தான். | செயப்படுபொருள் குன்றியவினை |
| சோற்றை உண்டான். பாலைப் பருகினான். | செயப்படுபொருள் குன்றாவினை |

## செய்வினை, செயப்பாட்டுவினை

**50.** செய்வினையாவது கருத்தா செய்யும் தொழிலை நேரே உணர்த்தும் வினைச்சொல்; செயப்பாட்டுவினையாவது கருத்தாவின் செயலைச் செயப்படுபொருள் அடைதலை உணர்த்தும் வினைச்சொல்.

செய்வினையைச் செயப்பாட்டுவினை ஆக்குதற்குப் 'படு' 'உண்' என்னும் விகுதிகளுள் ஏற்பதொன்றைச் செய்வினைப் பகுதியோடு சேர்க்கவேண்டும். செயப்படுபொருள் குன்றாவினையே செயப்பாட்டு வினையாக மாற்றுவதற் குரியதாம்.

### உதாரணம்

#### செய்வினை

கொற்றன் வீட்டைக் கட்டினான். அணில் நெல்லைக் கொறிக்கிறது. பாண்டியன் கோவலனைக் கொன்றான். கண்ணகி மதுரையை எரித்தான்.

### செயப்பாட்டுவினை

கொற்றனால் வீடு கட்டப்பட்டது. அணிலால் நெல் கொறிக்கப்படுகிறது. பாண்டியனுற் கோவலன் கொலையுண்டான். கண்ணகியால் மதுரை எரியுண்டது.

## உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை

**51.** பெரும்பாலும் எல்லா வினைச்சொற்களும் உடன்பாட்டுவினை எனவும் எதிர்மறைவினை எனவும் இருவகையாக வழங்கும்.

உடன்பாட்டு வினையாவது தொழில் நிகழ்ச்சியை உணர்த்தும் வினைச்சொல். எதிர்மறை வினையாவது தொழில் நிகழாமையை உணர்த்தும் வினைச்சொல். [உடன்பாட்டுவினை விதிவினை எனவும், எதிர்மறைவினை மறைவினை எனவும் கூறப்படும்.]

இல், அல், ஆ என்பன எதிர்மறையை உணர்த்தும் விகுதிகள். இவை சொல்லின் இடையில் வருவதுபற்றி இடைநிலை எனவும் கூறப்படும்.

### உதாரணம்

#### உடன்பாட்டுவினை

| | |
|---|---|
| முருகன் | ஆடுகின்றுன். |
| கந்தன் | உண்கிறுன். |
| சீதை | படித்தாள். |
| வள்ளி | பாடுவாள். |
| வேலன் | வருவான். |
| சாத்தன் | உறங்குகிறுன். |
| கொற்றன். | வந்தான். |

#### எதிர்மறைவினை

| | |
|---|---|
| முருகன் | ஆடுகின்றுனலன். |
| கந்தன் | உண்கிறுனில்லை. |
| சீதை | படித்திலள். |
| வள்ளி | பாடாள். |

| | |
|---|---|
| வேலன் | வாரான். |
| சாத்தன் | உறங்கவில்லை. |
| கொற்றன் | வரவில்லை. |

குறிப்பு :—பாடான், வாரான் என்பவற்றில் 'ஆ' எனும் எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது. எதிர்மறை முக்காலத்துக்குப் பொதுவாகவும் வரும்.

## பயிற்சி

I. 1. தன்வினை பிறவினை இவற்றை விளக்குக.

2. தன்வினையை என்னென்ன வகையிற் பிறவினையாக்கலாம்?

3. கீழ்க்காண்பவற்றுள் தன்வினை பிறவினை இவற்றைக் குறிப்பிடுக; தன்வினையைப் பிறவினையாகவும் பிறவினையைத் தன்வினையாகவும் மாற்றுக:

உண்பி, செய், வருவித்தான்; போக்குவான்; கலங்கும்; வாடும்; காண்; உருட்டு; கூடுவான்; கூட்டுகின்றான்; பயிற்று; பாய்ச்சு; செலுத்து; ஆடு; பெருகு; வாழ்ந்தான்; தாழ்த்து.

II. கீழ்க்காணும் வினைகளுள் செயப்படுபொருள் குன்றிய வினை செயப்படுபொருள் குன்றாவினை இவற்றைக் காட்டுக:

வா; நிற்பான்; உண்டான்; உறங்குகிறான்; நுழைவான்; தின்றான்; பருகுவான்; ஆட்டு; வாழ்த்து.

III. 1. செய்வினை என்றால் என்ன? செயப்பாட்டு வினை என்றால் என்ன?

2. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குவது எங்ஙனம்?—உதாரணம் தருக.

3. கீழேயுள்ளவற்றில் செய்வினையைச் செயப்பாட்டு வினையாகவும் செயப்பாட்டு வினையைச் செய்வினையாகவும் மாற்றுக:

கட்டினான்; அடியுண்டான்; கொன்றான்; பிடித்தான்; கிளியால் பழம் தின்னப்படுகிறது; மாடு புல் மேயும்; ஆடு தழை தின்றது; அன்னையால் ஐயம் இடப்பட்டது.

IV. கீழ்க் காண்பவற்றுள் விதிவினையை மறைவினையாகவும் மறைவினையை விதிவினையாகவும் மாற்றுக :

பாடினான் ; உண்ணான்; படித்திலன் ; பேசுவான் ; தாரான் ; வரவில்லை ; செல்கிறான் ; வருவானலன் ; தந்த ; படித்து ; போ ; உறங்கற்க; எழு ; பருகுக.

## எச்சவினை

**52.** எச்சவினை பெயரெச்சம் எனவும் வினையெச்சம் எனவும் இரு வகைப்படும்.

## பெயரெச்சம்

**53.** பெயரெச்சம் என்பது பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைவினைச் சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடியும் எச்சவினை. [எச்சம் - எஞ்சி நிற்பது; அஃதாவது முடிக்குஞ் சொல். பெயரெச்சம் - பெயராகிய எச்சத்தை உடையது.]

இப் பெயரெச்சம் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டில் காலமுஞ் செயலும் தோன்றப் பெற்றுப் பால் காட்டும் விகுதியும் முடிக்குஞ் சொல்லாகிய (எச்சமாகிய) செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆகிய அறுவகைப் பெயரும் குறைந்து நிற்கும்.

செய்த, செய்கின்ற, செய்யும் என்பன பெயரெச்ச வாய்பாடுகள். செய்த என்பது இறந்தகால வாய்பாடு ; செய்கின்ற என்பது நிகழ்கால வாய்பாடு ; செய்யும் என்பது எதிர்கால வாய்பாடு.

பெயரெச்ச விகுதிகள் அ, உம் என்பன.

### உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உண்ட, | உண்கிற, | உண்ணும், | முருகன் | — | செய்பவன் |
| ,, | ,, | ,, | கலம் | — | கருவி. |
| ,, | ,, | ,, | இடம் | — | நிலம். |
| ,, | ,, | ,, | செயல் | — | செயல். |
| ,, | ,, | ,, | வேளை | — | காலம். |
| ,, | ,, | ,, | உணவு | — | செய்பொருள். |

'உண்ட', 'உண்கிற', 'உண்ணும்' என்பவை, முறையே, செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொற்கள். செய்த, செய்கின்ற எனும் வாய்பாட்டில் 'த்', 'கின்று' என்னும் இடைநிலைகள், முறையே, இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் காட்டும்; 'அ' என்பது பெயரெச்ச விகுதி. செய்யும் என்னும் வாய்பாட்டில் 'உம்' என்னும் விகுதியே எதிர்காலத்தைக் காட்டும். பாடு—வாய்பாடு; சொன்முறை.

ந. சூ. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. ௨௦

## வினையெச்சம்

**54.** வினையெச்சம் என்பது பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைவினைச் சொல்லாய் வினையைக் கொண்டு முடியும் எச்சவினை. [வினை எச்சம்—வினையாகிய எச்சத்தையுடையது.]

இவ் வினையெச்சம் செயலுங் காலமும் தோன்றப் பெற்றுப் பால்காட்டும் விகுதியும் முடிக்குஞ் சொல்லாகிய வினையும் குறைந்து நிற்கும்.

வினையெச்ச வாய்பாடுகள் பல ஆயினும், இறந்த காலத்துக்குச் 'செய்து' என்பதும் நிகழ்காலத்துக்குச் 'செய' என்பதும் எதிர்காலத்துக்குச் 'செயின்' என்பதும் சிறப்புடைய வாய்பாடுகளாகக் கொள்ளப்படும். [வாய்பாடு - சொன்முறை.]

வினையெச்ச விகுதிகளாவன உ, இ, ய், அ, இன், ஆல், கால் முதலியன.

| | | |
|---|---|---|
| சென்று (நின்றான்) | — உ விகுதி | இவை 'செய்து' என்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சம். |
| தேடிப் (பார்ப்பான்) | — இ விகுதி | |
| போய்ப் (பேசு) | — ய் விகுதி | |

| | | |
|---|---|---|
| அழைக்க (வந்தான்) — அ விகுதி | | |
| குளிக்கச் (செல்கிருன்) — அ விகுதி | இவை 'செய' எனும் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம். | |
| உண்ண (வருவான்) — அ விகுதி | | |

| | |
|---|---|
| உண்ணின் (பசி தீரும்) — இன் விகுதி | |
| உண்டால் (பசி தீரும்) — ஆல் விகுதி | இவை 'செயின்' எனும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். |
| உண்டக்கால் (பசி தீரும்) — கால் விகுதி | |

ந. சூ. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

**55.** ஒரு வினையெச்சமானது வினைமுற்று, மற்றொரு வினையெச்சம், பெயரெச்சம், தொழிற் பெயர், வினையாலணையும் பெயர் ஆகிய ஐவகை வினைச்சொற்களைக் கொண்டு முடியும்.

உதாரணம்

வந்து நின்ருன் — வினை முற்றைக் கொண்டது.
வந்து நின்று — வினையெச்சத்தைக் கொண்டது.
வந்து நின்ற — பெயரெச்சத்தைக் கொண்டது.
வந்து நிற்றல் — தொழிற் பெயரைக் கொண்டது.
வந்து நிற்பவன் — வினையாலணையும் பெயரைக்கொண்டது.

## தெரிநிலை வினையெச்ச வாய்பாடுகள்

**56.** செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் எனும் இவ்வொன்பது வாய்பாட்டால் வருவனவும், வான், பான், பாக்கு இம் மூன்று விகுதிகளைக் கொண்டு வருவனவும் இவை போன்றனவும் வினையெச்சங்களாம். மேலே காட்டிய இப் பன்னிரண்டு வாய்பாடுகளுள் முதலில் உள்ள ஐந்தும் அடுத்துள்ள ஒன்றும் இறுதியிலுள்ள ஆறும், முறையே, இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

இவற்றுள், 'செய்து' என்பது இடைநிலையாலும் மற்றவை விகுதியினுலும் காலங் காட்டும்.

[செய்பு - செய்து ; செய்யா - செய்து ; செய்யூ - செய்து ; செய்தென - செய்ததனால் ; செய - செய்ய ; செயின் - செய்யின் ; செய்யிய - செய்தற்கு ; செய்யியர் - செய்தற்கு ; (செய்)வான் - செய்ய ; (உண்)பான் - உண்ண ; (தின்) பாக்கு - தின்ன.]

உதாரணம்

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| 1. நடந்து போனான். | தேட வல்லன். | 1. தரிற் கொள்ளும். |
| 2. உண்குபு வந்தான். | | 2. பாடிய வந்தான். |
| 3. பெய்யாக் கொடுக்கும். | | 3. காணியர் வருவான். |
| 4. காணூ மகிழ்ந்தான். | | 4. கூறுவான் தொடங்கினார். |
| 5. உண்டெனச் சென்றான். | | 5. உண்பான் சென்றான். |
| | | 6. தின்பாக்குப் புகுந்தது. |

ந. சூ. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமும் முறைதரும். உஉ

இ (ன்) ன என்பதனால் இறந்தகாலத்திற்கு இ, ய், உம் என்பனவும், எதிர்காலத்திற்கு ஆல், கால், கு, கடை, வழி, இடத்து என்பனவும், எதிர்மறைக்கு மல், மை, மே என்பனவும், குறிப்பு வினையெச்சத்துக்கு அ, றி, ஆல் முதலியனவும் பிறவும் விகுதிகளாய் வருமெனக் கொள்க.

## வினையெச்சங்களின் முடிபு

**57.** மேலே கூறிய பன்னிரண்டு வாய்பாட்டு வினை யெச்சங்களுள் முதலிலுள்ள செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்னும் நான்கும் இறுதியிலுள்ள வான், பான், பாக்கு என்னும் விகுதிகளையுடைய மூன்றும் தம் தம் கருத்தாவின் வினையைக்கொண்டு முடியும்; நடுவிலுள்ள செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும் தத்தம் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிதலே யன்றிப் பிற கருத்தாவின் வினையை யும் கொண்டு முடியும்.

### உதாரணம்

1. முருகன் நடந்து சென்றான்.
2. கந்தன் உண்குபு வந்தான்.
3. மழை பெய்யாக் கொடுக்கும்.
4. மகன் தாயைக் காணூ மகிழ்ந்தான்.

1. புலி மானைக் கொல்வான் சென்றது.
2. சிறுவர் உண்பான் தொடங்கினர்.
3. வள்ளல் தருபாக்கு வருகின்றார்.

(முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்தன.)

1. சாத்தன் உண்டென மகிழ்ந்தான்.
   சாத்தன் உண்டென யான் மகிழ்ந்தேன்.
2. பொன்னன் உண்ண வருகிறான்.
   அவன் உண்ண நீ காண்பாய்.
3. முருகன் உண்ணின் மகிழ்வான்.
   வறியோர் உண்ணின் வள்ளல் மகிழ்வான்.
4. மைந்தன் உண்ணிய வருவான்.
   மைந்தன் உண்ணிய தாய் கொடுப்பான்.
5. மகன் உண்ணியர் செல்வான்.
   மகன் உண்ணியர் அன்னை தருவான்.

(இடையிலுள்ள ஐந்தும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிதலோடு வேறு கருத்தாவின் வினையையும் கொண்டு முடிந்தன.)

**ந. சூ.** அவற்றுள்,

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும்; பிறவுமேற் கும்பிற. உ௯

**58.** பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறைப் பொருளில் வந்தால், முறையே, எதிர்மறைப் பெயரெச்சம் எனவும் எதிர்மறை வினையெச்சமெனவும் கூறப்படும்.

## எதிர்மறைப் பெயரெச்சம்

**59.** எதிர்மறைப் பெயரெச்சமாவது தொழில் நிகழ்ச்சி இல்லாமையை உணர்த்தும் பெயரெச்சம். இதற்கு 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலையாக வரும்.

(உ - ம்.) நடவாத மாடு. ஓடாத குதிரை. } இவற்றில் 'த்' எழுத்துப் பேறு; 'அ' பெயரெச்ச விகுதி.

எதிர்மறைப் பெயரெச்சம் ஈற்றெழுத்துக் கெட்டு வந்தால், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்று கூறப்படும்.

(உ - ம்.) படியாப் பையன். ஓடாக் குதிரை. } இவற்றில் 'த' என்னும் ஈறு கெட்டது.

## எதிர்மறை வினையெச்சம்

**60.** எதிர்மறை வினையெச்சமாவது தொழில் நிகழ்ச்சி இல்லாமையை உணர்த்தும் வினையெச்சம்.

இதற்கு 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலையோடு மல், மே, து, மை முதலியவை விகுதிகளாக வரும்.

(உ - ம்.) உண்ணுமல் நின்றுன். படியாமே தூங்கினுன். பேசாது போனுன். } 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலையோடு மல், மே முதலிய விகுதிகள் வந்தன.

எதிர்மறை வினையெச்சம் ஈறு கெட்டு வந்தால், ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் என்று கூறப்படும்.

(உ - ம்.) உண்ணுச் சென்றுன். மேயா நின்றது. } இவற்றில் மல், மே என்பவை ஈற்றில் கெட்டன.

## பயிற்சி

1. பெயரெச்ச வாய்பாடு, விகுதி ஆகிய இவற்றைக் கூறுக.

2. பெயரெச்சம் எவ்வெப் பெயர்களைக் கொண்டு முடியும்? —உதாரணம் தருக.

3. முக்கால வினையெச்ச வாய்பாடுகளை விளங்கக் கூறுக.

4. வினையெச்ச விகுதிகள் யாவை?

5. தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும் வினையெச்சங்கள் எவை? தன் கருத்தாவோடு பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும் வினையெச்சங்கள் யாவை?

6. ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் இவற்றிற் குதாரணம் தருக.

7. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள பெயரெச்ச வினையெச்சங்களையும் அவற்றின் முடிபையும் குறிக்க:

(1) அறஞ்செய விரும்பு. (2) ஐயம் இட்டு உண். (3) ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய். (4) நின்று தளரா வளர்ந்த தெங்கு தாள் உண்ட நீரைத் தலையால் தரும். (5) காக்கை ஏறப் பனம் பழம் விழுந்தது. (6) நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க் கன்றும் உதவும் கனி.

## இடைச்சொல்

**61.** இடைச்சொல்லாவது தனித்து வழங்காது பெயர் வினைகளினிடமாக அவற்றின் பின்னேயாயினும் முன்னேயாயினும் வந்து வழங்கும் சொல்.

இடைச்சொற்கள் ஏ, ஓ, உம், மற்று, தான், மன், கொல் முதலியன.

## ஏகார இடைச்சொல்

**62.** 'ஏ' என்னும் இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருளில் வரும்.

உதாரணம்

1. இவர்களுள் கந்தனே முதன்மையாகத் தேறினன்—இதில், ஒரு கூட்டத்தாருள் ஒருவனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை.

2. முருகனே தின்றான்? இதில், வினவுதற் பொருள் தருதலால், வினா. இவ் வினா 'முருகன் தின்னவில்லை' எனும் பொருள்பட நிற்பின் எதிர்மறைப் பொருளாம்.

3. நிலமே நீரே தீயே வளியே வானே—இதில், நிலமும் நீரும் தீயும் வளியும் வானும் என எண்ணுப் பொருளில் வருதலால், எண்.

4. ஆறு ஏகாரம் மே—இதில், வேறு பொருள் இன்றி ஈற்றில் அசையாக நிற்றலால், ஈற்றசை.

5. பொன்னனே முதற் பரிசு பெற்றான்—இதில், தெளிவுப் பொருள் தருதலால், தேற்றம். [தேற்றம் - தெளிவு]

6. ஏயே இவளொருத்தி பேடியோ—இதில், வேறு பொருளின்றி இசை நிறைத்தற்காக வந்தமையின், இசைநிறை.

ஏகாரம் 'ஏ ஏ கழுதை' என இகழ்ச்சிப் பொருள்பட நிற்றலும் உண்டு.

ந. சூ. பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என வா றேகா ரம்மே. உச

## ஓகார இடைச்சொல்

**63.** 'ஓ' என்னும் இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என்னும் எட்டுப் பொருளைத் தரும்.

உதாரணம்

1. கண்ணா, நீ விளையாடுதற்கோ வந்தாய்—இதில், விளையாடுதற் 'கன்று; படித்தற்கு' வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால், ஒழியிசை. [ஒழி இசை - ஒழிந்த சொற்கள்.]

2. முருகா, நேற்றுப் பள்ளி சென்றாயோ?—இதில் வினாப் பொருளைத் தருதலால், வினா.

3. ஓ ஓ பெரியார்! ஓ ஓ கொடியார்!—இவற்றுள், முறையே, பெருமையாகிய உயர்வின் மிகுதியையும் கொடுமையாகிய இழி

வின் மிகுதியையும் காட்டுதலால், முன்னது உயர்வு சிறப்பு; பின்னது இழிவு சிறப்பு.

4. சாத்தனே சென்றான்—இதில், சாத்தன் சென்றிலன் எனப் பொருள் தரும்போது, எதிர்மறை.

5. அலியை நோக்கி, 'ஆணோ (அன்று), பெண்ணோ (அன்று)' என்பதில், அத்தன்மையின்மையைத் தெரிவித்தலால், தெரிநிலை. [தெரிநிலை - தெரிய நிற்பது]

6. அறிவில்லாமற் கெட்டவர்களை நோக்கி, 'ஓ ஓ அறிவில்லார்!' என்பதில், கழிந்ததற்கு (நடந்த செய்திக்கு) இரங்குதலாற், கழிவு.

7. "கண்காள் காண்மின்களோ"—இதில், 'கண்களே, காணுங்கள்' எனப் பொருள்பட்டு, ஓகாரம் வேறு பொருளின்றி அசைத்து நிற்றலால், அசைநிலை.

8. அவர்களுள் முருகனே வள்ளியை மணந்தான்—இதில், பலரினின்று ஒருவனைப் பிரித்தலால், பிரிப்பு.

ந. சூ. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே. உ௬

## உம்மை இடைச்சொல்

**64.** 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளைத் தரும். ['உம்' என்பது 'உம்மை' என வழங்கும். எச்சம் - எஞ்சிய பொருள். இது இறந்தது தழுவிய எச்சம், எதிரது தழுவிய எச்சம் என இருவகைப்படும். இறந்தது—முன்னே நடந்த செய்தி; எதிரது - இனி நடக்கும் செய்தி.]

### உதாரணம்

1. திருடினும் பொய் பேசுதலாகாது—இதில், திருடலாகாது எனப் பொருள்படுதலின், எதிர்மறை.

2. குறவரும் மருளுங் குன்று—இதில், 'மலைகளிற் பல காலும் ஏறிப் பழகிய குறவரும் மருளுங் குன்று' எனக்

குறவரின் உயர்வை விளக்குதலால், உயர்வு சிறப்பு. இவ்வும்மை குன்றின் உயர்வை விளக்குவதாகக் கொள்ளுதலும் உண்டு.

புலையனும் விரும்பாத உடல்—இதில், 'மாடு முதலிய விலங்குகளின் ஊனை உண்ணும் புலையனும் விரும்பாத உடல்' எனப் புலையனின் இழிவை விளக்குதலால், இழிவு சிறப்பு. இவ்வும்மை உடலின் இழிவை விளக்குவதாகக் கொள்ளுதலும் உண்டு.

3. பொன்னன் போரில் வெல்லினும் வெல்வான்—இதில் வெற்றியைப் பற்றித் துணிந்து சொல்லாமையால், ஐயம்.

4. ஆசிரியரும் வந்தார்—இதில், 'முன்னே மாணவர் வந்ததன்றி' என்னும் பொருள்தரின், இறந்தது தழுவிய எச்சம்; 'இனி மாணவரும் வருவர்' என்னும் பொருள் தரின், எதிரது தழுவிய எச்சம்.

5. மாணவர் யாவரும் வகுப்புக்கு வந்தனர்—இதில், முற்றுப் பொருளைத் தருதலால், முற்று. [முற்றுப் பொருள் குறைவில்லாமைப் பொருள்.]

6. கிள்ளி வளவன் வீரமும், வண்மையும், கல்வியும் செல்வமும் உடையவன்—இதில் எண்ணி நிற்றலின், எண் [எண் - எண்ணல் அளவை.]

7. அலியை நோக்கி, 'ஆணும் அன்று; பெண்ணும் அன்று' என்பதில், இன்னதெனத் தெரிவித்து நிற்றலின், தெரிநிலை.

8. வெள்ளாட்டின் பால் உணவும் ஆயிற்று—இதில், 'அதுவே மருந்தும் ஆயிற்று' எனப் பொருள் தருதலின், ஆக்கம்.

இனி, உம்மை 'மிகவும் பெரிது'; 'அவருள்ளும் இவன் நல்லன்' என அசைநிலைப் பொருளிலும் வரும்.

ந. சூ. எதிர்மறை சிறப்பையம் எச்சம் முற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை எட்டே. உசு

## 'மற்று' என்னும் இடைச்சொல்

**65.** மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசை நிலை, பிறிது என்னும் பொருள்களில் வரும்.

உதாரணம்

1. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை—இதில், **மற்று** என்பது கெடுப் பது என்னும் வினையை மாற்றிக் கெடுக்காது என்னும் வினை யைத் தருதலால், **வினைமாற்று**.

2. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து—இதில், **மற்று** என்பது, வேறு பொரு ளின்றி அசைத்து நிற்றலால், **அசைநிலை**.

3. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்—இதில், **மற்று** என்பது, வேறு என்னும் பொருளில் நிற்றலால், **பிறிது** என்னும் பொருளது.

இனி, இவ்விடைச் சொல் "மற்றிவளும் கோற்கண்ண ளாகுங் குனிந்து" என்ற இடத்திற் போலப் **பின்** என்னும் பொருளிலும் வரும்.

ந. சூ. வினைமாற் றசைநிலை பிறிதெனும் மற்றே. உஎ

## 'தான்' என்னும் இடைச்சொல்

**66.** தான் என்னும் இடைச்சொல் அசைநிலையிலும் தேற்றத்திலும் வரும்.

உதாரணம்

நீ **தான்** பார்—இதில், வேறு பொருளின்றி நிற்றலால், **அசைநிலை**.

அவன் **தான்** சொன்னான்—இதில், அவனே சொன்னான் எனத் தெளிவுப் பொருளைத் தருதலால், **தேற்றம்**.

## உரிச்சொல்

**67.** உரிச்சொல்லாவது குணத்தையுணர்த்தும் பெய ராகிச் செய்யுளில் வருதற்குரிய சொல். இதுவும் தனித்து வழங்காது பெயர் வினைகளைச் சார்ந்தே வரும்.

உரிச்சொற்கள் பலவகைப் பண்புகளையும் குறிப்பன வாய் ஒரு குணத்தை யுணர்த்தும் ஒரு சொல்லாகவும்

ஒரு குணத்தை யுணர்த்தும் பல சொல்லாகவும் பல குணத்தை யுணர்த்தும் ஒரு சொல்லாகவும் வரும்.

## ஒரு குணத்தை உணர்த்தும் ஓர் உரிச்சொல்

**68.** சாயல் என்பது 'மென்மை' என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் ஓர் உரிச்சொல்.

(உ - ம்.) "தமிழ் தழீஇய சாயலவர்"—இதற்கு 'இனிமை பொருந்திய மென்மை (யான உடம்பை) உடையவர்' என்பது பொருள். [தமிழ்—இனிமை, சாயல்—மென்மை.]

## ஒரு குணத்தை உணர்த்தும் பல உரிச்சொல்

**69.** சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் 'மிகுதி' எனும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.

'சால்' எனும் உரிச்சொல் சால எனத் திரிந்தது.

(உ - ம்.) சாலப்பலர் — நனிபேதை
உறுபுகழ் — அன்புகூர் மனம்
தவப் பல — கழிபே ருவகை

*சீர்சால் அகத்தியன்*

ந. சூ. சால உறுதவ நனிகூர் கழிமிகல். உஅ

## பல குணத்தை உணர்த்தும் ஓர் உரிச்சொல்

**70.** கடி என்னும் ஒரு உரிச் சொல் காவல், கூர்மை, மணம், ஒளி, அச்சம், உயர்வு, விரைவு, மிகுதி, புதுமை, ஒலித்தல், நீக்கல், திருமணம், கரிப்பு ஆகிய பல குணங்களை உணர்த்தும்.

### உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| கடி நகர் | — காவல் | கடி மார்பன் | — ஒளி |
| கடி வேல் | — கூர்மை | கடிப் பேய் | — அச்சம் |
| கடி மலர் | — மணம் | கடி யரண் | — உயர்வு |
| கடி சென்றான் | — விரைவு | கடி முரசு | — ஒலித்தல் |
| கடி காற்று | — மிகுதி | கடி மது | — நீக்கல் |
| கடி மணம் | — புதுமை | கடி வினை | — திருமணம் |
| கடி மிளகு | — கரிப்பு. | | |

கடி என்பது 'கடு' எனத் திரிந்து கடு மான், கடுங்காவல், கடு வெயில் எனவும் வரும்.

ந. சூ. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும். உகூ

[விரை - மணம்; வரைவு - நீக்கல்; மன்றல் - திருமணம்]

### பயிற்சி

I. கீழ்க் காண்பவற்றிலுள்ள ஏகார ஓகார உம்மை இடைச்சொற்களையும் மற்று எனும் இடைச்சொல்லையுங் குறிப்பிடுக. அவை ஒவ்வொன்றும் என்ன பொருளுடையது?

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. உம்மை எட்டே.
3. பத்தும் சார்பெழுத்தாகும்.
4. அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?
5. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.
6. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

II. கீழே காண்பவற்றுள் உள்ள உரிச்சொற்கள் யாவை? அவற்றின் பொருள் என்ன?

1. சீர்சால் வள்ளுவர்.
2. கடிநகர் புகுந்தான்.
3. சால அழகிது.
4. உறுசுவை உணவு.
5. தவப்பிஞ்சு.
6. அருள்கூர் உள்ளம்.
7. கடும் பகல்
8. கனி நனி சிறிது.

# III பொது

**71.** சொற்கள் ஒன்றேடொன்று பொருட் பொருத்த முறத் தொடர்ந்து நின்ருல் சொற்ருெடர் என்று கூறப் படும். அது தொகை நிலைத் தொடர் எனவும் தொகா நிலைத் தொடர் எனவும் இருவகைப்படும்.

## தொகைநிலைத் தொடர்

**72.** தொகைநிலைத் தொடராவது, வேற்றுமையுருபு பண்புருபு முதலியவை தொக்கு நிற்கச் சொற்கள் ஒன்றேடொன்று தொடர்ந்து நிற்றல்.

அது வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என ஆறு வகைப்படும்.

ந. சூ. வேற்றுமை வினைபண் புவமை உம்மை
அன்மொழி எனவத் தொகை ஆருகும். ௩௦

### வேற்றுமைத் தொகை

**73.** வேற்றுமைத் தொகையாவது, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமை யுருபுகளும் தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்தல்.

#### உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| மரம் வெட்டினான். | — இரண்டாம் | வேற்றுமைத் | தொகை |
| தலை வணங்கினான். | — மூன்ரும் | ,, | ,, |
| பள்ளி சென்ருன். | — நான்காம் | ,, | ,, |
| வீடு நீங்கினன். | — ஐந்தாம் | ,, | ,, |
| சாத்தன் வீடு. | — ஆரும் | ,, | ,, |
| காடு புகுந்தான். | — ஏழாம் | ,, | ,, |

குறிப்பு :—'பாற்குடம்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஆயினும், இதனை விரித்தால், பாலைக்குடம் என

விரிக்க இயலாமல் 'பாலை உடைய குடம்' என விரிக்கவேண்டியிருக்கிறது; அஃதாவது உருபைமட்டுமன்றி அதனை முடிக்கும் மற்றொரு சொல்லையும் விரிக்கவேண்டியுள்ளது. இங்ஙனம் வருவன 'உருபும் பயனும் உடன் தொக்கதொகை' என்று கூறப்படும். [பயன் - முடிக்கும் சொல்.] ஆகையால், 'பாற் குடம்' என்பது 'இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகை'யாம். பொற்குடம், நோய்மருந்து, மலையருவி, மலைக்குகை என்பவை, முறையே, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமைகளில் உருபும் பயனும் தொக்க தொகைக்கு உதாரணம் ஆம்.

## வினைத்தொகை

**74.** வினைத்தொகையாவது, காலங் காட்டும் இடைநிலையும் எச்சவிகுதியும் மறைந்திருக்கும் பெயரெச்சமாம். இது 'காலங்கரந்த பெயரெச்சம்' எனவும் கூறப்படும்.

(உ - ம்.) சுடு சோறு; தோய் தயிர்; ஊறுகாய்; பெய் மழை; குடி தண்ணீர்.

இவற்றுள், 'சுடு சோறு' என்பது சுட்ட சோறு, சுடுகின்ற சோறு, சுடும் சோறு என முக்காலத்திலும் விரிந்து பெயரெச்சமாக விளங்குதல் காண்க. மற்றவையும் இங்ஙனமே.

குறிப்பு:—வினைதொகையில் நிலைமொழி வினைப்பகுதியாகவும் வருமொழி பெயராகவும் இருக்கும்.

## பண்புத்தொகை

**75.** பண்புத்தொகையாவது, பண்பை விளக்கும் 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு நிற்பனவும் ஒரு பொருளுக்கு இருபெயராக வருவனவும் ஆம். [பண்பு - குணம்.]

| | | |
|---|---|---|
| (உ - ம்.) | கருங் குவளை<br>வெண்ணிலா | பண்புருபு தொக்கு நிற்பவை. |
| | தென்னமரம்<br>முல்லைக்கொடி | ஒரு பொருளுக்கு இரு பெயர் வந்தவை. |

இவ்வுதாரணங்களுள் முன்னவை இரண்டும் பண்புத் தொகை எனவும், பின்னவை இரண்டும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை எனவும் கூறப்படும். இருபெயரொட்டில் *சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.*

## உவமைத்தொகை

**76.** உவமைத்தொகையாவது, போல, புரைய, ஒப்ப முதலிய உவம உருபுகள் தொக்கு நிற்பது.

(உ - ம்.) மதிமுகம்; பவளவாய்; துடியிடை.

மதிமுகம் என்பது 'மதிபோன்ற முகம்' என விரியும். பிறவும் இங்ஙனமே. [மதி - சந்திரன்; துடி - உடுக்கை; இடை - இடுப்பு.]

## உம்மைத்தொகை

**77.** உம்மைத்தொகையாவது, எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவைகளாற் பெயர்கள் கூறப்படும்போது உம்மை இடைச்சொல் தொக்கு நிற்பது.

### உதாரணம்

செடி கொடி — இது 'செடியும் கொடியும்' என விரியும்.
கபில பரணர்—இது 'கபிலனும் பரணனும்' என விரியும்.
ஒன்றே கால் — இது 'ஒன்றும் காலும்' என விரியும்.
இவையெல்லாம் எண்ணலளவையில் வந்த உம்மைத் தொகை. பிறஅளவை உம்மைத்தொகைகள் வந்துழிக் காண்க.

## அன்மொழித்தொகை

**78.** அன்மொழித்தொகையாவது, வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகைகளுக்குப் புறத்தில் அவையல்லாத பிறமொழிகள் தொக்குநிற்றல்.

### உதாரணம்

1. பூங்குழல் — இது 'பூவையுடைய குழலை உடையாள்' என விரியும்.

2. ஆய்தொடி — இது 'ஆய்ந்ததொடியை அணிந்தவள்' என விரியும்.

3. பெருந்தகை — இது 'பெருமையாகிய தகைமையை உடையவன்' என விரியும். [தகை - தகைமை, குணம்]

4. மதிமுகம் — இது 'மதிபோன்ற முகத்தை உடையாள்' என விரியும்.

5. உயிர் மெய் — இது 'உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து' என விரியும்.

இவ் வுதாரணங்களில், முறையே, வேற்றுமைத் தொகை முதலிய ஐந்து தொகைகளினின்று ஆறுவது தொகையாகிய அன்மொழித்தொகை தோன்றுதல் காட்டப்பெற்றிருத்தல் உணர்க. இவற்றைப் 'பூங்குழல் வந்தாள்' 'ஆய்தொடி நகைத்தனள்' என்றிங்ஙனம் வாக்கியத்தில் அமைத்து அன்மொழித் தொகையாதல் கண்டு கொள்க. அன்மொழித் தொகையின் பெயர் கூறும்போது அது எந்தத்தொகையினின்று தோன்றியதோ அதனையுஞ் சேர்த்து 'வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை,' 'வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை' என்றிங்ஙனம் கூறுதல் மரபு.

குறிப்பு :—வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை இந் நான்கும் நிலைமொழியில் தொக்கு நிற்கு மெனவும், உம்மைத் தொகை நிலைமொழி வருமொழி இரண்டிலும் தொக்கு நிற்கு மெனவும், அன்மொழித் தொகை நிலைமொழி வருமொழி இரண்டுக்கும் புறத்தே தொக்கு நிற்கு மெனவும் அறிக.

## தொகாநிலைத் தொடர்

**79.** தொகாநிலைத் தொடராவது வேற்றுமையுருபு முதலியன தொக்கு நிற்காமல் சொற்கள் தொடர்ந்து நிற்றல்.

தொகா நிலைத் தொடர் வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த் தொடர்,விளித்தொடர், வேற்றுமைத்தொடர், இடைச்

சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என ஒன்பது வகைப்படும்.

### உதாரணம்

1. உண்டான் இராமன். } வினைமுற்றுத் தொடர்.
   கரியன் இராமன்.
2. படித்த பையன். } பெயரெச்சத் தொடர்.
   பெரிய பையன்.
3. உண்டு சென்றான். } வினையெச்சத் தொடர்.
   வலியச் சென்றான்.
4. இராமன் உண்டான்.— எழுவாய்த் தொடர்.
5. கந்தா, வா. — விளித் தொடர்.
6. பள்ளிக்குச் செல். — வேற்றுமைத் தொடர்.
7. இனி, உறங்கு. — இடைச்சொற் றொடர்.
8. நனி சிறிது. — உரிச்சொற் றொடர்.
9. வாரும் வாரும். — அடுக்குத் தொடர்.

இவற்றுள், முறையே, வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியும் வேற்றுமை (விரி) யும் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் நிலைமொழியாக நிற்க அவற்றோடு வருமொழி தொடர்தல் காண்க. வாரும் வாரும் என்பதில் ஒரே சொல் அடுக்கித் தொடர்ந்தது.

ந. சூ. முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப் பொருள்
ஆறுரு பிடையுரி அடுக்கிவை தொகாநிலை. ருக

குறிப்பு :—தொகைநிலைத்தொடரைத் 'தொகை' எனவும் தொகாநிலைத்தொடரைத் 'தொடர்' எனவும் சுருங்கக் கூறுதல் மரபு.

### பயிற்சி

1. தொகைநிலைத் தொடராவது யாது? அது எத்தனை வகைப்படும்?

2. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

3. அறஞ்செய விரும்பு; ஐயம் இட்டு உண்; இயல்வது கரவேல்; எண்ணெழுத் திகழேல்; இன்சொல் இன்பம் தரும்;

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் ; தேன்மொழி கிளிக்குப் பேச்சுக் கற்பித்தாள்—இவ்வாக்கியங்களில் உள்ள தொடர்களை 'அறம் செய', 'செய விரும்பு' என்றிங்ஙனம் பிரித்து, ஒவ்வொன்றும் இன்னதொடர் எனக் கூறுக.

## குறிப்பும் வெளிப்படையும்

**80.** சொற்கள் பொருளுணர்த்தும்போது குறிப்பு, வெளிப்படை என இரு வகையாகப் பொருள் உணர்த்தும்.

### குறிப்பு

**81.** குறிப்பால் பொருள் தரும் சொற்களாவன சிற்சில குறிப்புக்களால் பொருள் உணர்த்தும் சொற்கள்.

அவை, ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்பு, முதற் குறிப்பு, தொகைக்குறிப்பு, பிறகுறிப்பு முதலியனவாகும்.

#### உதாரணம்

1. ஒன்றொழி பொதுச்சொல்—இருதிணையிலும் ஆண் பெண் இரண்டிற்கும் பொதுவாக நிற்கும் சொல் அவற்றுள் ஒன்றை யொழித்து மற்றொன்றைக் காட்டுவது.

ஆயிரம் மக்கள் போருக்குச் சென்றனர் ; மாடுகள் உழுது திரும்பின—இவற்றில் மக்கள் எனும் பொதுப்பெயரும், சென்றனர் எனும் பொதுவினையும் 'போர்' என்னும் குறிப்பால் பெண்களை யொழித்து ஆண்களையும், மாடுகள் எனும் பொதுப் பெயரும் திரும்பின எனும் பொதுவினையும் 'உழுதல்' என்னும் குறிப்பால் பசுக்களை ஒழித்துக் காளைகளையும் காட்டின.

2. விகாரம்—செய்யுள் விகாரச் சொற்கள். மரை மலர்—இதில் தாமரை என்பதன் முதற்குறை விகாரமாகிய மரை என்னும் சொல் 'மலர்' என்னுங் குறிப்பால் தாமரையைக் காட்டிற்று.

3. தகுதி—தகுதி வழக்குச் சொல்.

திருமுகம் படித்தான்—இதில், திருமுகம் என்னும் சொல் 'படித்தான்' என்னும் குறிப்பால் ஓலை (கடிதம்) என்பதைக் காட்டிற்று. [தகுதி வழக்கு - கற்றோரும் மற்றோரும் இவ்வாறு சொல்வது தகுதி எனக் கொண்டு வழங்குவது.]

4. ஆகுபெயர்—ஒன்றன் பெயர் மற்றொன்றுக்கு ஆகுவது.

வெள்ளை உழுதது—இதில், வெள்ளை என்னும் நிறத்தின் பெயர் 'உழுதது' என்னுங் குறிப்பால் வெள்ளை நிறமுள்ள மாட்டைக் காட்டிற்று.

5. அன்மொழித்தொகை—அல்லாத மொழி தொக்கு நிற்பது.

பொற்றொடி வந்தாள்—இதில் பொற்றொடி என்னும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் 'வந்தாள்' என்னுங் குறிப்பால் பொன்னாலாகிய தொடியையுடைய பெண்ணைக் காட்டிற்று.

6. வினைக்குறிப்பு—வினையைக் குறிப்பாக உடையது.

இவன் முன் வறியன்—இதில், வறியன் என்னும் சொல் 'முன்' என்னுங் குறிப்பால் பெயர்ப்பொருளை யொழித்து 'வறியனாயிருந்தான்' என்னும் வினைக்குறிப்புப் பொருளைக் காட்டிற்று.

7. முதற் குறிப்பு—முதலில் உள்ள சொற்களின் குறிப்பு.

ஆத்திசூடி படிக்கிறாள்—இதில், ஆத்தி சூடி என்னும் சொற்கள் 'படிக்கிறாள்' என்னும் குறிப்பால் அச்சொற்களை முதலிலே யுடைய நூலைக் காட்டின.

8. தொகைக் குறிப்பு—எண்களின் தொகையினாலாகிய குறிப்பு.

ஐவரோடு குந்தி வந்தாள்—இதில், ஐவர் என்னும் தொகைச் சொல் 'குந்தி' என்னும் குறிப்பால் பஞ்சபாண்டவரை உணர்த்திற்று.

9. பிற குறிப்பு—(மேலே சொன்னவையல்லாத) வேறு பல வழிகளால் வரும் குறிப்பு.

கல்லைக் கடிக்க நன்கு சமைத்தாய்; பாயா வேங்கை; பூவா வஞ்சி—இவற்றில், கல்லைக் கடிக்க என்னும் குறிப்பால் 'நன்கு சமைக்கவில்லை' என்பதும், பாயா என்னும் குறிப்பால் 'வேங்கை மரம்' என்பதும், பூவா என்னும் குறிப்பால் 'வஞ்சி நகர்' என்பதும் உணர்த்தப்பட்டன.

## வெளிப்படை

மேலே காட்டிய குறிப்புச் சொற்கள் போலன்றி, எளிதில் பொருள் வெளிப்பட வரும் மற்றைய எல்லாச் சொற்களும் **வெளிப்படையாம்.**

(உ - ம்.) நிலம், நீர், தீ, காற்று, வான், மரம், செடி, காய், கனி, வந்தான், உண்டான், சென்றான், படி, பாடு, சால, நனி, மற்று, இனி முதலியன.

ந. சூ. **ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி**
**ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே**
**முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்**
**குறிப்பிற் றருமொழி அல்லன வெளிப்படை.** ௬௨

### பயிற்சி

1. குறிப்பால் பொருள் தரும் சொற்கள் எத்தனை வகைப் படும்? ஒவ்வொரு வகைக்கும் இரண்டிரண்டுதாரணம் தருக.

2. கீழ்க் காண்பவற்றுள் உள்ள குறிப்பு வெளிப்படை இவற்றைக் குறிக்க. குறிப்பாயின் அது இன்னவகை யெனக் கூறுக :

உவர்க்கட லன்ன செல்வரும் உளர்; முல்லை மலர்ந்தது; பறவாக் கொக்கு; கால் கழுவி வந்தான்; மா பலா வாழை இவை முக்கனி எனப்படும்; கொன்றைவேந்தன் படிக்கின்றான்; ஊர் மகிழ்ந்தது; மல்லிகை அரும்பியது.

## திணை பால் இட வழுவமைதிகள்

### வழாநிலை

**82.** சொற்கள் தொடர்ந்து வாக்கியமாகுங்கால் முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் *திணை பால் இடம் காலம் முதலியவற்றில் மாறுபடாது ஒத்துநிற்றல்* **வழாநிலை** எனப்படும். [வழாநிலை - பிழைபடாத நிலைமை.]

### உதாரணம்

1. கண்ணன் வந்தான்—உயர்திணை ஆண்பாற் பெயர்ச்சொல் அத் திணைபால் வினைகொண்டு முடிந்தது.

2. நங்கை சென்றாள்—உயர்திணைப் பெண்பாற் பெயர்ச்சொல் அத் திணைபால் வினைகொண்டு முடிந்தது.

3. நீ உண்டாய்—முன்னிலை ஒருமைப் பெயர் முன்னிலையொருமை வினைகொண்டு முடிந்தது.

### வழு

**83.** வாக்கியத்தில் முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் பொருந்தாது, மாறுபட்டு நிற்றல் வழு எனப்படும். [வழு - பிழை, இலக்கணக் குற்றம்.]

(உ - ம்.) அவள் வந்தது - திணைவழு; கந்தன் வந்தாள் - பால்வழு; நான் சென்றான் - இடவழு; நாளைப் போனான் - காலவழு.

### வழுவமைதி

**84.** முடிக்கப்படுஞ் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் திணைபால் முதலியவற்றில் பொருத்தமின்றி மாறிநின்று வழுவாகக் காணப்படினும் சில இடங்களிற் சிற்சில காரணத்தால் அவ்வாறிருக்கலாம் எனக் கல்வியறிவுடையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைந்திருத்தல் வழுவமைதி எனப்படும். [வழு அமைதி - வழு (ஏற்றுக்கொள்ளப்பட்டு) அமைந்திருத்தல்.]

திணை பால் இடம் காலம் மரபு இவைகள் வழுவமைப்பாய் இருப்பின், முறையே, திணைவழுவமைதி, பால்வழுவமைதி, இடவழுவமைதி, காலவழுவமைதி, மரபுவழுவமைதி எனக் கூறப்படும்.

### திணை வழுவமைதி

**85.** உயர்திணை எழுவாயோடு சம்பந்தப்பட்டு அதனோடு தொடர்ந்து எழுவாயாக நிற்கும் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறும்

அவ்வுயர்திணையோடு சார்த்திக் கூறப்படும்போது உயர்திணை முடிபைப் பெறும்.

| | | |
|---|---|---|
| முருகன் பொன் | பெரியன்—பொருள் | இங்கே, உயர்திணை யெழுவாயின் பயனிலை யோடு அஃறிணை எழுவாயும் முடிந்துள்ளமை காண்க. |
| முருகன் நாடு | பெரியன்—இடம் | |
| முருகன் வாழ்நாள் | பெரியன்—காலம் | |
| முருகன் கை | பெரியன்—சினை | |
| முருகன் அன்பு | பெரியன்—குணம் | |
| முருகன் கொடை | பெரியன்—தொழில் | |

பொன் என்னும் அஃறிணை எழுவாய் முருகன் என்னும் உயர்திணை எழுவாயின் பயனிலையாகிய பெரியன் எனும் குறிப்பு வினைமுற்றைக்கொண்டு முடிதலால் வழுவாகித் தொடர்புபற்றிச் சார்த்தி முடிக்கப்படுதலால் வழுவமைதியாயிற்று. சார்த்தி முடிக்கப்படாவிடின் 'முருகனுக்குப் பொன் பெரிது' எனத் தன் முடிபு கொள்ளும். பிறவும் அன்ன.

இனிக், 'கிணறு நீர் ஊறிற்று' 'மாடு கோடு கூரிது' என அஃறிணையோடு அஃறிணையைச் சார்த்தின் அஃறிணை முடிபாதலுங் கொள்க.

ந. சூ. உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின. ௩௩

## திணைபால் வழுவமைதி

**86.** திணையும் பாலும் மகிழ்ச்சியினாலும், உயர்த்திக் கூறுதலினாலும், சிறப்பினாலும், சினத்தினாலும், இழித்துக் கூறுதலினாலும், வழுவிவரினும் வழுவமைதியேயாம்.

### உதாரணம்

**திணை வழுவமைதி :**

1. ஓர் பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பதில், மகிழ்ச்சியினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

2. 'பசுங்கிளியார் சென்றார்' என்பதில், உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

3. "தம் பொருள் என்ப தம் மக்கள்" என்பதில், சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

4. "ஏவவுஞ் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர் போ மளவு மோர் நோய்" என்பதில், செறலினால் உயர்திணை அஃறிணை யாயிற்று. [செறல் - கோபித்தல்.]

5. 'நாம் கடவுள் உடைமை' என்பதில், இழிவினால் உயர்திணை அஃறிணை யாயிற்று. [இங்கே இழிவு என்றது பணிவு.]

பால் வழுவமைதி :

1. தன் புதல்வியை 'என் அப்பன் வந்தான்' என்பதில், உவப்பினால் பெண்பால் ஆண்பாலாயிற்று.

2. ஒரு மனிதனை 'அவர் வந்தார்' என்பதில், உயர்வாகக் கூறுதலால் ஒருமைப்பால் பன்மைப்பால் ஆயிற்று. [இது உயர்வுப் பன்மை எனவும் மரியாதைப் பன்மை எனவும் கூறப் படும்.]

3. 'அப்பன் நீ அம்மை நீ' என்பதில், சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

4. "எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்" என்பதில், செறலினால் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

5. ஆண்மை இல்லாதவனை நோக்கி இவன் 'பெண்' என்பதில், இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

இனிப், புதல்வனை 'அப்பன்' என்றும், புதல்வியை 'அம்மை' என்றும் இயல்பாக வழங்கும் வழுவமைதியும் கொள்க.

ந. சூ. உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே.
ரு௯௪

## பால் இட வழுவமைதி

**87.** ஒருமைப் பாலில் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓர் இடத்தில் பிற இடச் சொல்லையும் யாதாயினும் ஓர் காரணம் பற்றித் தழுவிக் கூறுதலும் வழுவமைதியாம்.

## உதாரணம்

**பால் வழுவமைதி :**

1. 'வெயில் எல்லாம் மறைத்தது மேகம்'—இதில், வெயில் என்னும் ஒருமைப் பாலில் எல்லாம் என்னும் பன்மைப் பாற் சொல் மயங்கி வந்து 'வெயில் முழுதும்' என்னும் பொருளைத் தருதலால் வழுவமைதி யாயிற்று. இது 'ஒருமைப் பன்மை மயக்கம்' எனப்படும்.

2. 'இரண்டு காலும் வீங்கிற்று'—இதில், இரண்டு என்னும் பன்மைப் பாலில் வீங்கிற்று என்னும் ஒருமைப்பாற் சொல் மயங்கி வந்து 'தனித்தனி வீங்கிற்று' என்னும் பொருளைத் தருதலால் வழுவமைதியாயிற்று. இது 'பன்மை யொருமை மயக்கம்' எனப்படும்.

**இடவழுவமைதி :**

1. 'மாணவன் இவை செய்வேனே'—இதில், யான் எனச் சொல்லவேண்டிய தன்மையில் 'மாணவன்' எனப் படர்க்கைச் சொல் வந்தது. இதற்கு மாணவனாகிய யான்' என்பது பொருள். இது தன்மைப் படர்க்கை எனப்படும்.

2. "எம்பியை ஈங்குப் பெற்றேன்"—இதில், தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனை நோக்கிக் கூறுதலால், நின்னை எனச் சொல்லவேண்டிய முன்னிலையில் 'எம்பியை' யெனப் படர்க்கைச்சொல் வந்தது. இதற்கு 'எம்பியாகிய உன்னை' என்பது பொருள். இது முன்னிலைப்படர்க்கை எனப்படும்.

**ந. சூ. ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே.** ௩௬

### பயிற்சி

1. வழுவமைதி என்றால் என்ன ?

2. கீழ்க் காண்பவற்றிலுள்ள வழுவமைதியைக் குறிக்க; அது இன்ன வழுவமைதி எனவும் கூறுக :

(1) நம்பி காது நெடியன். (2) யானை கோடு கூரிது. (3) பயனற்ற சொல்லை விடாது பேசும் ஒருவனைப் பார்த்து

‘ இந் நாய் குரைக்கிறது ’ எனல். (4) தன் புதல்வியை ‘ வா, அம்மா ’ என அழைத்தல். (5) இரண்டு கண்ணுஞ் சிவந்தது. (6) “ ஆழ்க தீயதெல்லாம் ”. (7) சாத்தன் தாய் தன் மகனை நோக்கிச் “ சாத்தன் தாய் இவை தாரேனே ’ எனல். (8) “ எம்பியை யீங்குப் பெற்றேன் என் னெனக் கரிய தென்றான்.”

# IV புணர்ச்சி

## எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி

**88.** எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டலாகிய அளவுப் பெயர்களும் பிற பெயர்களும் வருமொழியாக வரின், நிலைமொழியாக நிற்கும் ஒன்று முதல் எட்டு வரை உள்ள எண்களுள் முதலிலுள்ள ஒன்று இரண்டு என்னும் எண்கள் முதற் குறில் நீளும் ; மூன்று ஆறு ஏழு இவை முதல் நெடில் குறுகும் ; ஆறும் ஏழும் அல்லாத மற்றைய ஆறெண்களின் ஈற்றிலுள்ள உயிர் மெய்யும் ஏழு என்பதன் ஈற்றிலுள்ள உயிரும், ஏற்குமிடங்களில், கெடும்.

### உதாரணம்

| | |
|---|---|
| ஆறு + மூன்று = அறு மூன்று<br>ஏழு + மூன்று = எழு மூன்று<br>ஆறு + பலம் = அறு பலம்<br>ஏழு + பலம் = எழு பலம்<br>ஆறு + நாழி = அறு நாழி<br>ஏழு + நாழி = எழு நாழி<br>ஆறு + சாண் = அறு சாண்<br>ஏழு + சாண் = எழு சாண்<br>ஆறு + சீர் = அறு சீர்<br>ஏழு + சீர் = எழு சீர் | எண்ணல் எடுத்தல் முதலிய அளவுப் பெயரும் பிற பெயரும் வர ஆறும் ஏழும் முதல் குறுகின. |

ஏழு + கடல் = ஏழ் கடல்—ஏழன் ஈற்றுயிர் கெட்டது.

மற்றையவற்றிற்கு உதாரணம் பின்னே அந்தந்த எண்ணின் சிறப்பு விதியிற் காண்க.

## "ஒன்று", "இரண்டு"

**89.** ஈற்றெழுத்தாகிய உயிர்மெய் கெட்டு நின்ற 'ஒன்று' என்னும் எண்ணினது னகர மெய் ரகரம் ஆகும்; ஈற்றுயிர் மெய் கெட்ட 'இரண்டு' என்னும் எண்ணினது ணகர மெய்யும் ரகர மெய்யினது அகர வுயிரும் கெடும்; அங்ஙனம் உளவாகிய அவ்விரண்டு ரகர மெய்யின்மேலும் உகரம் வரும்.

### உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| ஒன்று | + ஆயிரம் | = ஓராயிரம் | 'ஒன்று' என்பது முதல் நீண்டு ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் ரகரமாயிற்று. |
| ,, | + கலம் | = ஓர் கலம் | |
| ,, | + நாள் | = ஓர் நாள் | |
| ,, | + யானை | = ஓர் யானை | |
| இரண்டு | + ஆயிரம் | = ஈராயிரம் | 'இரண்டு' என்பது முதல் நீண்டு ஈற்றுயிர்மெய்யும் ணகரமெய்யும் அகரவுயிரும் கெட்டது. |
| ,, | + கலம் | = ஈர் கலம் | |
| ,, | + நாள் | = ஈர் நாள் | |
| ,, | + யானை | = ஈர் யானை | |
| ஒன்று | + ஆயிரம் | = ஒராயிரம் | முதல் நீளாமல் ரகர மெய்யின்மேல் உகரம் பெற்று வந்தன. |
| ,, | + பலம் | = ஒரு பலம் | |
| ,, | + நாள் | = ஒரு நாள் | |
| ,, | + வழி | = ஒரு வழி | |
| இரண்டு | + ஆயிரம் | = இராயிரம் | |
| ,, | + பலம் | = இரு பலம் | |
| ,, | + நாள் | = இரு நாள் | |
| ,, | + வழி | = இரு வழி | |

குறிப்பு:—முதல் நீண்ட விடத்து உகரம் வராதெனவும் உகரம் வருமிடத்து முதல் நீளா தெனவுங் கொள்க.

நசகூ. ஒன்றன் புள்ளி ரகரம் ஆக,
இரண்டன் ஒற்றுயிர் ஏக உவ் வருமே. ஙசு

## " மூன்று "

**90.** இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற 'மூன்று' என்னும் எண்ணின் னகரமெய் கெடுதலும் வருமொழி முதலில் வந்த மெய்யாகத் திரிதலும் ஆகும்.

### உதாரணம்

| | |
|---|---|
| மூன்று + ஆயிரம் = மூவாயிரம்<br>மூன்று + உலகம் = மூவுலகம் | உயிர் வர முதல் குறுகாமல் ஈற்றுயிர் மெய்யும் னகர மெய்யும் கெட்டன. |
| மூன்று + தமிழ் = முத்தமிழ்<br>மூன்று + நூல் = முந்நூல்<br>மூன்று + வடம் = முவ்வடம் | மெய்வர முதல் குறுகி ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் வந்த மெய்யாகத் திரிந்தது. |

குறிப்பு :—முதல் குறுகுதல் மெய்வருமிடத்து எனவும் அவ்விடத்து னகரமெய் வரு மெய்யாகத் திரியு மெனவும் னகர மெய் கெடுதல் உயிர் வருமிடத்து எனவும் அவ்விடத்து முதல் குறுகாதெனவுங் கொள்க.

**ந. சூ. மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும். ௩௭**

## " நான்கு "

**91.** இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற 'நான்கு' என்னும் எண்ணின் னகர மெய் லகர மெய்யாகவும் றகர மெய்யாகவும் திரியும்.

### உதாரணம்

| | |
|---|---|
| நான்கு + ஆயிரம் = நாலாயிரம்<br>நான்கு + வகை = நால்வகை | உயிரும் இடையினமும் வர ஈறு கெட்டு னகரம் லகர மாயிற்று. |
| நான்கு + பொருள் = நாற்பொருள்<br>நான்கு + சந்தி = நாற்சந்தி | வலிவர ஈறு கெட்டு னகரம் றகரமாயிற்று. |
| நான்கு + மாடம் = நான்மாடம்<br>நான்கு + நாழி = நானாழி | மெலி வர ஈறு கெட்டு னகரம் திரியாது நின்றது. |

குறிப்பு :—னகரமெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவும், றகரமாகத் திரிவது வல்லினம் வரு

மிடத்தெனவும், மெல்லினம் வருமிடத்துத் திரியாது நிற்குமென வுங் கொள்க.

**ந. சூ. நான்கன் மெய்யே லறவா கும்மே.** ௩அ

## "ஐந்து"

**92.** இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற 'ஐந்து' எனும் எண்ணின் நகரமெய் வருமொழி முதலில் வருகின்ற மெய் யாகத் திரிதலும் அதற்கினமாகத் திரிதலும் திரியாது கெடுதலும் ஆகும்.

### உதாரணம்

ஐந்து + மூன்று = ஐம்மூன்று—நகரமெய் வருமெய்யாகத் திரிந்தது.

ஐந்து + பால் = ஐம்பால்—நகரமெய் வருமெழுத்துக்கு இனமாயிற்று.

ஐந்து + ஆறு = ஐயாறு
ஐந்து + வகை = ஐவகை } நகர மெய் கெட்டது.

குறிப்பு :—நகர மெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்தெனவும் இனமாகத்திரிவது வல்லினம் வருமிடத் தெனவும் கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவுங் கொள்க.

**ந. சூ. ஐந்தனொற் றடைவதும் இனமும் கேடும்.** ௩௯

## "எட்டு"

**93.** இறுதி உயிர்மெய் கெட்டு நின்ற 'எட்டு' எனும் எண்ணின் டகரமெய் நாற்கணமும் வர ணகரமாகத் திரியும்.

நாற்கணம்—உயிர், வல்லினம், மெல்லினம், இடை யினம்.

### உதாரணம்

எட்டு + ஆறு = எண்ணாறு ; எட்டு + குணம் = எண்குணம் ;
எட்டு + மூன்று = எண்மூன்று; எட்டு + வகை = எண்வகை.

**ந. சூ. எட்டன் உடம்பு ணவ்வாகும் என்ப.** ௪௦

## "ஒன்பது" முன் 'பத்து'

**94.** 'ஒன்பது' என்னும் எண் முன் 'பத்து' என்னும் எண் வரின், நிலைமொழியின் 'பது' என்பது கெட்டு, முதலுயிரோடு தகரமெய் சேர்ந்து, நின்ற னகரம் ணகரமாகவும், வருமொழியாகிய 'பத்து' நூறாகவும் திரியும்.

ஒன்பது + பத்து = தொண்ணூறு.

## "ஒன்பது" முன் 'நூறு'

**95.** 'ஒன்பது' என்னும் எண் முன் 'நூறு' என்னும் எண் வரின், நிலைமொழியின் 'பது' என்பது கெட்டு, முதலுயிரோடு தகரமெய் சேர்ந்து, நின்ற னகரம் ளகரமாகவும், வருமொழியாகிய 'நூறு' ஆயிரமாகவும் திரியும்.

ஒன்பது + நூறு = தொள்ளாயிரம்.

குறிப்பு:—தொள்ளாயிரம் என்பது இக்காலத்தில் தொளாயிரம் எனவும் வழங்கும்.

## 'ஒன்று' முதலியவற்றின்முன் 'பத்து'

**96.** 'ஒன்று' முதல் 'எட்டு' ஈறுகவுள்ள எண்களின் முன்னே 'பத்து' என்னும் எண் வரின் அதன் இடையில் நின்ற தகரமெய் கெடுதலும் ஆய்தமாதலும் ஆகிய இரு விதியையும் ஏற்கும்.

### உதாரணம்

| | | |
|---|---|---|
| ஒன்று | + பத்து = | ஒருபது, ஒருபஃது. |
| இரண்டு | ,, | இருபது, இருபஃது. |
| மூன்று | ,, | முப்பது, முப்பஃது. |
| நான்கு | ,, | நாற்பது, நாற்பஃது. |
| ஐந்து | ,, | ஐம்பது, ஐம்பஃது. |
| ஆறு | ,, | அறுபது, அறுபஃது. |
| ஏழு | ,, | எழுபது, எழுபஃது. |
| எட்டு | ,, | எண்பது, எண்பஃது. |

ந. சூ. முதலிரு நான்காம் எண்முனர்ப் பத்தின்
இடையொற் றேகல் ஆய்தம் ஆகல்
எனவிரு விதியும் ஏற்கும் என்ப. சக

## ‘ஒருபது’ முதலியவை முன் ‘ஒன்று’ முதலியன

97. ஒருபது முதல் எண்பது வரையுள்ள எண்களின்முன் ஒன்று முதல் ஒன்பதெண்ணும் அவற்றையடுத்த பிற பெயரும் வரின், நிலைமொழி யீற்றுக்கு அயலில் தகரமெய் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒருபது | + | ஒன்று | = | ஒருபத்தொன்று. |
| இருபது | + | இரண்டு | = | இருபத்திரண்டு. |
| முப்பது | + | மூன்று | = | முப்பத்துமூன்று. |
| நாற்பது | + | நான்கு | = | நாற்பத்துநான்கு. |
| ஐம்பது | + | ஐந்து | = | ஐம்பத்தைந்து. |
| அறுபது | + | ஆறு | = | அறுபத்தாறு. |
| எழுபது | + | ஏழு | = | எழுபத்தேழு. |
| எண்பது | + | எட்டு | = | எண்பத்தெட்டு. |
| இருபது | + | இரண்டுபடி | = | இருபத்திரண்டுபடி. |
| முப்பது | + | மூன்றுமுழம் | = | முப்பத்துமூன்றுமுழம். |

பிறவற்றையும் இங்ஙனமே ஒட்டிக்கொள்க.

## பத்தின் முன் இரண்டு

98. பத்து என்பதன் முன் இரண்டு என்பது வருமொழியாக வரின் அதன் ஈற்றிலுள்ள ‘து’ என்னும் உயிர்மெய் கெட்டு நடுநின்ற தகர மெய் னகர மெய்யாகத் திரியும்.

உதாரணம்

பத்து + இரண்டு = பன்னிரண்டு.

குறிப்பு:—இவ்விதி உம்மைத் தொகைக்கே.

ந. சூ. இரண்டு முன்வரின் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்று னவ்வாகும் என்ப. சஉ

## பத்தின்முன் ஒன்று மூன்று முதலியன

**99.** பத்தின்முன் இரண்டொழிந்த ஒன்று முதல் எட்டீறுகிய எண்கள் வரின் அதன் ஈற்றுயிர்மெய் கெட்டு, '**இன்**' என்னும் சாரியை தோன்றும்.

### உதாரணம்

பத்து + ஒன்று = பதினொன்று. பத்து + ஐந்து = பதினைந்து.
பத்து + மூன்று = பதின்மூன்று. பத்து + ஆறு = பதினாறு.
பத்து + நான்கு = பதினான்கு. பத்து ஏழு = பதினேழு.
பத்து + எட்டு = பதினெட்டு.

பத்து + ஒன்பது = பத்தொன்பது எனப் பொதுவிதி பெற்று வருதலையும் ஈண்டே கொள்க. இவையெல்லாம் உம்மைத் தொகைகளே.

## பத்து, ஒன்பது இவற்றின்முன் ஆயிரம் முதலியன

**100.** பத்தின் முன்னும் ஒன்பதின் முன்னும் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயரும் பிறபெயர்களும் வரின் 'இன்' சாரியை தோன்றும்; சாரியை தோன்றும்போது 'பத்து' என்பதன் ஈற்றுயிர்மெய் கெடும்.

### உதாரணம்

பத்து + ஆயிரம் = பதினாயிரம். பத்து + கலம் = பதின்கலம்.
பத்து + பலம் = பதின்பலம். பத்து + மடங்கு = பதின் மடங்கு.

ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்.
ஒன்பது + பலம் = ஒன்பதின் பலம்.
ஒன்பது + கலம் = ஒன்பதின் கலம்.
ஒன்பது + மடங்கு = ஒன்பதின் மடங்கு.

பத்தாயிரம் ஒன்பதாயிரம் பத்துக் கலம் ஒன்பது கலம் என்றிங்ஙனம் பொதுவிதி பெற்று வருதலும் ஈண்டே கொள்க.

## ஒன்று முதலியன இரட்டித்து வருதல்

**101.** ஒன்றுமுதல் பத்தீருகிய எண்களுள் ஒன்பதொழிந்த மற்றைய ஒன்பதெண்களும் இரட்டித்து வரின், நிலைமொழியின் முதலெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்கள் நீங்க, வருமொழி முதலில் உயிர்வரின் வகர மெய்யும் மெய்வரின் அம்மெய்யும் மிகும்.

*உதாரணம்*

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று. |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு. |
| மூன்று | + | மூன்று | = | மும்மூன்று. |
| நான்கு | + | நான்கு | = | நந்நான்கு. |
| ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து. |
| ஆறு | + | ஆறு | = | அவ்வாறு.. |
| ஏழு | + | ஏழு | = | எவ்வேழு |
| எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு. |
| பத்து | + | பத்து | = | பப்பத்து. |

குறிப்பு:—ஒன்றொன்று இரண்டிரண்டு என்றிங்ஙனம் வருதலையும், 'வேறு + வேறு = வெவ்வேறு'; 'பாதி + பாதி = பப்பாதி' என்றிங்ஙனம் வருதலையும் ஈண்டே கொள்க.

ந. சூ. ஒன்ப தொழித்தவெண் ணொன்பதும் இரட்டின்
முன்ன தின் முன்னல வோட உயிர்வரின்
வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி. சாரு

# இயல்பு புணர்ச்சி

## அகரவீறு

**102.** பல சில என்னும் இவ்விரு சொல்லும் தமக்கு முன் தாமே வருமாயின் இயல்பாகும்.

பல + பல = பல பல
சில + சில = சில சில } தம்முன் தாம் வந்தன.

பற்பல, பலப்பல, பல்பல, சிற்சில, சிலச்சில, சில்சில பலசில, சிலபல என்றிங்ஙனம் வருதலையும் ஈண்டே கொள்க.

## ஆகார வீறு

**103.** ஆகார வீற்றுச் சொற்களாகிய ஆ, மா, ஆமா, மியா என்பவற்றின் முன்னும் ஆகாரவீற்றுப் பலவின் பால் வினைமுற்றின் முன்னும் வல்லின மெய் மிகாது இயல்பாகும்.

| | |
|---|---|
| ஆ + குறிது = ஆ குறிது<br>மா + பெரிது = மா பெரிது<br>ஆமா + சிறிது = ஆமா சிறிது | ஆ மா என்னும் பெயர்கள். |

கேண்மியா + சாத்தா = கேண்மியா சாத்தா — மியா என்னும் இடைச்சொல்.

(புல்) உண்ணா + புலிகள் = உண்ணா புலிகள் — முற்று.

குறிப்பு :—இவை யெல்லாம் அல்வழிப் புணர்ச்சி.

ந. சூ. அல்வழி ஆமா மியா முற்று முன்மிகா. சச

## இகர ஐகார வீறு

**104.** இகர ஐகாரங்களின் முன்னர் வரும் வல்லின மெய் இயல்பாகும்.

### உதாரணம்

| | |
|---|---|
| புலி + சிறிது = புலி சிறிது<br>யானை + பெரிது = யானை பெரிது | எழுவாய்த் தொடரில் இயல்பு. |
| செடி + கொடி = செடிகொடி<br>இலை + தழை = இலை தழை | உம்மைத் தொகையில் இயல்பு. |
| எரி + துரும்பு = எரி துரும்பு<br>இறை + கிணறு = இறை கிணறு | வினைத்தொகையில் இயல்பு. |

ஆடித் திங்கள், தேடிப் பிடித்தான், கிளி சிறிது—கிளிச் சிறிது என்றிங்ஙனம் மிக்கும் விகற்பித்தும் வருதலையும் ஈண்டே கொள்க.

குறிப்பு :—இவையெல்லாம் அல்வழிப் புணர்ச்சி.

ந. சூ. அல்வழி இ ஐ முன்ன ராயின்
இயல்பும் மிகலும் விகற்பமு மாகும். சரு

## குற்றியலுகரத்தின் முன் வல்லினம்

[அல்வழி]

**105.** வன்றொட ரொழிந்த மற்றைய நெடிற்றொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், மென்றொடர், இடைத் தொடர் ஆகிய இவ் வைந்து தொடர்க் குற்றியலுகரத் தின் முன் வரும் வல்லினம் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாம்.

### உதாரணம்

சோறு + குழைகிறது = சோறு குழைகிறது—நெடிற்றொடர்.
எஃகு + பெரிது = எஃகு பெரிது—ஆய்தத்தொடர்.
விறகு + காய்கிறது = விறகு காய்கிறது—உயிர்த் தொடர்.
மென்று + தின்னு = மென்று தின்னு—மென்றொடர்.
மார்பு + பெரிது = மார்பு பெரிது—இடைத்தொடர்.

[வன்றொடரில் 'எழுத்துச் சிறிது' 'படித்துப் பார்' என அல்வழியில் மிகும்.]

ந. சூ. வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி. சகூ

## குற்றியலுகரத்தின் முன் வல்லினம்

[வேற்றுமை]

**106.** இடைத்தொடரும் ஆய்தத் தொடரும் ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் உயிர்த்தொடர்களும் ஆகிய இவற்றின் முன் வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாம்.

### உதாரணம்

மார்பு + பெருமை = மார்பு பெருமை—இடைத்தொடர்.
எஃகு + சிறுமை = எஃகு சிறுமை —ஆய்தத்தொடர்.
சோறு + தின்றான் = சோறு தின்றான் —நெடிற்றொடர்.
வரகு + கதிர் = வரகு கதிர் —உயிர்த்தொடர்.

வீடு—வீட்டு, வயிறு—வயிற்று என்றிங்ஙனம் ஒற்று இடையில் மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கட்கு

முன் வரும் வல்லினம் 'வீட்டுச்சுவர்' 'வயிற்றுக் கடுப்பு' எனவும், 'மூட்டுப் பூச்சி' 'வெளிற்றுப் பனை' எனவும், வன்றொடர் போல இரு வழியிலும் மிகு மெனவும் கொள்க.

ந. சூ. இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா
வேற்றுமை சஎ

எனவே, அறுவகைக் குற்றியலுகரங்களுள் இடைத்தொடர் ஆய்தத்தொடர் ஒற்றிடையே மிகாத நெடிலுயிர்த் தொடர்கள் ஆகிய இந்நான்கன் முன்னும், வேற்றுமை அல்வழி இரண்டிலும் வரும் வல்லினமெய்கள் மிகா வெனவும், மென்றொடர்முன் வேற்றுமையில் மிகும் அல்வழியில் மிகாவெனவும், வன்றொடர் முன் இருவழியிலும் மிகும் எனவும் அறிக.

குறிப்பு :—ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற மென்றொடர்க் குற்றியலுகரம் 'அங்குக் கண்டான்' 'ஆண்டுச் சென்றான்' என்றிங்ஙனம் வலிமிக்கும், காலப் பொருளுணர நின்ற மென்றொடர்க் குற்றியலுகரம் 'அன்றுகண்டான்' 'பண்டு பேசினான்' என்றிங்ஙனம் வலி மிகாமலும் வருதலையும் ஈண்டே கொள்க.

# வடமொழிப் புணர்ச்சி

## தீர்க்க சந்தி, குண சந்தி, விருத்தி சந்தி

**107.** வடமொழித் தொடர்கள் தமிழில் வரும்பொழுது அவ் வடநூற் புணர்ச்சியையே பெற்றுவரும். புணர்ச்சி விகாரத்தை வடநூலார் 'சந்தி' என்பர். அது, உயிர் முன் உயிர் வருகையில், *தீர்க்கசந்தி*, *குணசந்தி*, *விருத்தி சந்தி* என மூவகைப்படும்.

### தீர்க்கசந்தி

1. *அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவற்றுள் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங்கெட, ஓர் ஆகாரம் தோன்றும்.*

**உதாரணம்**

இராம + அவதாரம் = இராமாவதாரம்.
பரம + ஆனந்தம் = பரமானந்தம்.
சபா + அலங்காரம் = சபாலங்காரம்.
கருணா + ஆகரன் = கருணாகரன்

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவற்றுள் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங்கெட, ஓர் ஈகாரந் தோன்றும்.

**உதாரணம்**

கவி + இந்திரன் = கவீந்திரன்.
மகீ + இந்திரன் = மகீந்திரன்.
கிரி + ஈசன் = கிரீசன்.
நதீ + ஈசன் = நதீசன்.

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவற்றுள் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங்கெட, ஓர் ஊகாரம் தோன்றும்.

**உதாரணம்**

குரு + உதயம் = குரூதயம்.
சிந்து + ஊர்மி = சிந்தூர்மி.
சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்.
சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

## குணசந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களுள் ஒன்று வரின், அவ்விரண்டுங்கெட ஓர் ஏகாரம் தோன்றும்.

**உதாரணம்**

நர + இந்திரன் = நரேந்திரன்.
தேவ + ஈசன் = தேவேசன்.
தரா + இந்திரன் = தரேந்திரன்.
சபா + ஈசன் = சபேசன்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களுள் ஒன்று வரின், அவ்விரண்டுங்கெட, ஓர் ஓகாரம் தோன்றும்.

உதாரணம்

சூரிய + உதயம் = சூரியோதயம்.
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்.
மகா + உற்சவம் = மகோற்சவம்.
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

## விருத்தி சந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களுள் ஒன்றுவரின், அவ்விரண்டுங் கெட, ஓர் ஐகாரம் தோன்றும்.

உதாரணம்

பரம + ஏகாந்தி = பரமைகாந்தி.
ஞான + ஐசுவரியம் = ஞானைசுவரியம்.
தேவதா + ஏகத்துவம் = தேவதைகத்துவம்.
தேவதா + ஐக்கியம் = தேவதைக்கியம்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஓகார ஔகாரங்களுள் ஒன்றுவரின், அவ்விரண்டுங் கெட, ஓர் ஔகாரம் தோன்றும்.

உதாரணம்

வன + ஓடதி = வனௌடதி.
பரம + ஔடதம் = பரமௌடதம்.
மகா + ஓடதி = மகௌடதி.
மகா + ஔதாரியம் = மகௌதாரியம்.

பயிற்சி

1. *கீழ்க் காண்பவற்றைச் சந்தி சேர்த்தெழுதி விதியுங் கூறுக.*

ஆறு + மூன்று ; ஏழு + சீர் ; ஒன்று + ஆயிரம் ; மூன்று + தமிழ் ; மூன்று + உலகம் ; நான்கு + ஆயிரம் ; நான்கு + சந்தி ;

ஐந்து + மூன்று ; எட்டு + ஆறு ; ஒன்பது + பத்து ; ஒன்பது + ஆயிரம் ; மூன்று + பத்து ; எட்டு + பத்து ; இருபது + இரண்டு ; பத்து + இரண்டு ; பத்து + எட்டு ; பத்து + ஆயிரம் ; ஒன்று + ஒன்று ; மூன்று + மூன்று.

2. கீழ்க் காண்பவை எவ்வாறு புணரும் ? விதி காட்டுக :

கத்தின + கழுதைகள் ; அரிய + செயல் ; உண்ப + சிலர் ; பல + பல ; ஆ + சிறிது ; மா + குறிது ; ஒடா + கழுதைகள் ; பூனை + சிறிது ; இலை + தழை ; முளி + தயிர் ; இறை + கூடை ; ஒரு + கால் ; இரு + கண் ; இது + சிறிது; விறகு + கட்டு; வரகு + கதிர் ; பத்து + பாட்டு ; கந்தனே + சென்றான் ; நீயே + பேசினாய் ; முருகா + பாடு.

3. கீழே காட்டியவை எவ்வாறு புணரும் ? அவை ஒவ்வொன்றும் என்ன சந்தி ?

மச்ச + அவதாரம் ; கதா + ஆயுதம் ; கிரி + ஈசன் ; மகீ + இந்திரன் ; குரு + உபதேசம் ; தேவ + இந்திரன் ; சபா + ஈசன் ; ஞான + உதயம் ; மகா + உற்சவம் ; ஞான + ஐசுவரியம் ; லோக + ஏகன் ; பரம + ஔடதம் ; மகா + ஔதாரியம்.

# V யாப்பு

**108.** யாப்பென்பது செய்யுள். செய்யுட்களாவன, தோல் தசை என்பு நரம்பு முதலிய தாதுக்களால் உயிருக் கிடமாகப் படைக்கப்பட்ட உடம்பு போலப், பல சொற் களால் பொருளுக்கிடமாகக் கல்வியறிவும் செய்யுளியற்று மாற்றலும் உடைய புலவரால் அழகு பெறச் செய்யப் படுவனவாம்.

ஆகவே, சொல் எழுத்தால் உளதாகு மாதலின், எழுத்து, சொல், பொருள், அணி என்னும் நான்கும் செய்யுளில் அமைந்திருக்கும்.

[அதனால், தமிழிலக்கணமும் எழுத்திலக்கணம்,

சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐந்து வகைப்படுதல் காண்க.]

யாப்பு, செய்யுள், பா, பாட்டு, கவி என்பன ஒரு பொருட் சொற்கள்.

ந. சூ. பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள். ௪௮

**109.** செய்யுளின் உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாம்.

## எழுத்து

**110.** எழுத்துக்களாவன உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம் முதலிய எழுத்துக்கள்.

## அசை

**111.** அசையாவது எழுத்துக்களின் இசைத் தொடர்ச்சியை அசைக்கும் பொழுது பிரிந்து வருகின்ற எழுத்தாலாகிச் சீர்க்கு உறுப்பாக நிற்பது. [அசைக்கப் படுவது அசை.]

அவ்வசை நேரசை எனவும் நிரையசை எனவும் இரு வகைப்படும்.

**112.** நேரசையாவது ஒரு குறிலாயினும் நெடிலா யினும் தனித்தாவது ஒற்றடுத்தாவது வருவது. [நேர் - தனிமை.]

(உ - ம்.) ஆ ழி ; வென் வேல்.

இவற்றுள், ஆ - தனி நெடிலசை ; ழி - தனிக் குறிலசை ; வென் - குறில் ஒற்றடுத்த அசை ; வேல் - நெடில் ஒற்றடுத்த அசை.

**113.** நிரையசையாவது குறிலிணை யாயினும் குறி னெடி லாயினும் தனித்தாவது ஒற்றடுத்தாவது வருவது.

[நிரைதல் - இணைதல் ; குறிலிணை - இணைந்து வரும் இரு குறில் ; குறினெடில் - இணைந்து வருங் குறிலும் நெடிலும்.]

(உ - ம்.) பனி ; நிலம் ; நிலா ; குழாம்.

இவற்றுள் பனி—குறிலிணை தனித்து வந்த நிரையசை ; நிலம்—குறிலிணை ஒற்றடுத்து வந்த நிரையசை ; நிலா—குறினெடில் தனித்து வந்த நிரையசை ; குழாம்—குறினெடில் ஒற்றடுத்து வந்த நிரையசை.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இச்செய்யுளிலுள்ள சீர்கள் ஏழு. அவைகளை 'மலர் மிசை—யே கினான்—மா ணடி—சேர்ந் தார்—நில மிசை—நீ டுவாழ்—வார்' என அசை பிரித்துப் படித்துச் சீர்க்கு உறுப்பாக நிற்கும் நேரசை நிரையசைகளைக் கண்டு கொள்க.

## சீர்

**114.** சீர் என்பது நேரசை நிரையசைகள் தனித்தாவது இரண்டேனும் மூன்றேனும் நான்கேனும் சேர்ந்தாவது இலயம்பட இசைத்துச் சீர்போன்று நிற்பது. [சீர் - தாளம் ; தாளவறுதி.]

**115.** சீர், தான் கொண்டு நிற்கும் அசையின் எண்ணிக்கைக் கேற்ப, ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர், நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.

**116.** ஓரசைச்சீராவது நேரசையேனும் நிரையசையேனும் தனித்து நின்று சீராய் வருவது. ஓரசைச் சீர் இரண்டு வகையாம்.

**உதாரண வாய்பாடு :**

நேர் - நாள் ; நிரை - மலர்.

குறிப்பு : குறிலும் நெடிலும் தனித்தும் ஒற்றடுத்தும் வரும் நேரசை நாள் என்னும் வாய்பாட்டாலும், குறிலிணையும் குறினெடிலும் தனித்தும் ஒற்றடுத்தும் வரும் நிரையசை மலர்

என்னும் வாய்பாட்டாலும் கூறப்படும். வாய்பாடு என்பது சொன்முறை. ஓரசைச் சீரை அசைச்சீர் எனக் கூறுதல் மரபு. அசைச்சீர் பெரும்பாலும் வெண்பாவின் இறுதியில் வரும்.

**117.** ஈரசைச் சீராவது இரண்டசைகள் கூடிச் சீராய் நிற்பது. ஈரசைச்சீர் நான்கு வகையாம்.

உதாரண வாய்பாடு :

| | |
|---|---|
| நேர் நேர்—தே மா<br>நிரை நேர்—புளி மா | இவை மாச்சீர் எனப்படும். |
| நிரை நிரை—கருவிளம்<br>நேர் நிரை—கூவிளம் | இவை விளச்சீர் எனப்படும். |

குறிப்பு :—தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்பவை ஈரசைச் சீரின் வாப்பாடுகள். ஈரசைச்சீர் இயற்சீர் எனவும் அகவற்சீர் எனவுங் கூறப்படும்.

**118.** மூவசைச்சீராவது மூன்றசைகள் கூடிச் சீராய் நிற்பது. அது, மேற்காட்டிய ஈரசைச்சீர்கள் நான்கன் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனியே கூடி வருதலால், எட்டு வகையாம்.

உதாரண வாய்பாடு :

| | |
|---|---|
| நேர் நேர் நேர் — தேமாங்காய்<br>நிரை நேர் நேர் — புளிமாங்காய்<br>நிரை நிரை நேர் — கருவிளங்காய்<br>நேர் நிரை நேர் — கூவிளங்காய் | இவை காய்ச்சீர் என்று கூறப்படும். |
| நேர் நேர் நிரை — தேமாங்கனி<br>நிரை நேர் நிரை — புளிமாங்கனி<br>நிரை நிரை நிரை— கருவிளங்கனி<br>நேர் நிரை நிரை — கூவிளங்கனி | இவை கனிச்சீர் என்று கூறப்படும். |

குறிப்பு :—தேமாங்காய் முதலியனவும் தேமாங்கனி முதலியனவும் மூவசைச்சீரின் வாய்பாடுகள். காய்ச்சீர் வெண்சீர் எனவும் கனிச்சீர் வஞ்சிச்சீர் எனவுங் கூறப்படும்.

**119.** நாலசைச்சீராவது நான்கசைகள் கூடிச் சீராய் நிற்பது. அது, மூவசைச்சீர்கள் எட்டன் இறுதியிலும்

நேரும் நிரையும் தனித்தனியே கூடி வருதலால், பதினாறு வகையாம். அவை தேமாந்தண்பூ முதலிய வாய்பாடு களாலும் தேமாந்தண்ணிழல் முதலிய வாய்பாடுகளாலும் கூறப்படும்.

குறிப்பு :—நாலசைச்சீர் செய்யுட்களிற் பயின்று வருத லில்லை ; சங்கச் செய்யுட்களிற் சிறுபான்மையாக வரும்.

## தளை

**120.** தளை என்பது நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை கூடுங்கால் உளதாகும் இசைப் பிணிப்பு. [தளை - பிணிப்பு, பந்தம்.]

அது வெண்டளை, ஆசிரியத்தளை, கலித்தளை, வஞ்சித்தளை என நால்வகைப்படும்.

## அடி

**121.** அடி என்பது இருசீர், முச்சீர், நாற்சீர் இங்ஙன மாகச் சீர்கள் பலவற்றைக் கொண்டு தளைகளை அடுத்து முடிவது. [அடி - அடுத்து முடிவது.]

அடி, தான் கொண்டு நிற்கும் சீருக்கு ஏற்றவாறு, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

**122.** குறளடி என்பது இரண்டு சீர்களைக் கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி. [குறள் - குறுகியது, சிறியது.]

(உ - ம்.) 1. அறஞ்செய விரும்பு.

2. உற்றக லாமுன்
கற்றகு ரங்கைப்
பற்றுமி னென்றான்
முற்றமு னிந்தான்.

இச்செய்யுட்கள் இரண்டனுள் முன்னது ஒரு குறளடியால் ஆகியது ; பின்னது நான்கு குறளடிகள் உள்ளது.

**123.** சிந்தடி என்பது மூன்று சீர்களைக் கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி. [சிந்து - குறளினுஞ் சிறிது நெடியது.]

(உ - ம்.) 1. கற்றனைத் தூறும் அறிவு.
2. ஒட்ட ராமனு ளத்தினில்
இட்டம் யாதுகொ லித்தொழில்
முட்டி லாமல்மு யன்றனன்
கொட்டி வீழுமி குத்தல்போல்.

இவை இரண்டனுள் முன்னது ஒரு சிந்தடியால் அமைந்தது; பின்னது நான்கு சிந்தடிகள் கொண்டது.

**124.** அளவடி என்பது நான்கு சீர்களைக் கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி. [அளவு - குறுகலும் நீளலு மின்றி அளவுபெற்று நிற்பது.]

(உ - ம்.) 1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

இவை இரண்டனுள் முன்னது ஒரு அளவடியால் ஆகியது; பின்னதில் நான்கு அளவடிகள் அமைந்துள்ளன.

**125.** நெடிலடி என்பது ஐந்து சீர்களைக்கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி. [நெடில் - நீண்டது.]

உதாரணம்

*திருவரங் காவுறை மார்பா திசைமுகன்சே விப்பக்கந்*
*திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்*
*திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்*
*திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே.*

இச்செய்யுளில் நான்கு நெடிலடிகள் அமைந்துள்ளன.

**126.** கழிநெடிலடி என்பது சீர்கள் ஆறும் அதற்கு மேலும் வர அவற்றைக்கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி. [கழி நெடில் - மிக நீண்டது.]

கழிநெடிலடி. அதிலுள்ள சீர்களின் தொகைக்குத் தக்கவாறு அறுசீர்க்கழிநெடிலடி, எழுசீர்க்கழிநெடிலடி என்றிங்ஙனங் கூறப்படும்.

### உதாரணம்

அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான் இமைப்பிலன் நயன மென்றான்.

இதனில் உள்ள அடிகள் நான்கும் அறுசீர்க்கழிநெடிலடிகள்.

## நால்வகைப் பா

127. தமிழ்ச் செய்யுட்கள் பாவும் பாவினமுமென இரு பெரும் பிரிவாகப் பிரிந்து வழங்கும். அவற்றுள் பாக்கள் நான்கு வகை; பாவினம் மூன்று வகை. நால்வகைப் பாக்களாவன வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன. மூவகைப் பாவினங்களாவன தாழிசை, துறை, விருத்தம் என்பன.

ஒவ்வொரு பாவுக்கும் வெண்டாழிசை வெண்டுறை வெளிவிருத்தம், ஆசிரியத்தாழிசை ஆசிரியத்துறை ஆசிரிய விருத்தம், கலித்தாழிசை கலித்துறை கலி விருத்தம், வஞ்சித்தாழிசை வஞ்சித்துறை வஞ்சி விருத்தம் என இம்மூவினம் உண்டு.

## பாக்களின் பொதுவிலக்கணம்

### வெண்பா

128. வெண்பாவானது குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா என்றிங்ஙனம் பல வகைப்படும். இவை அனைத்துக்கும் பொதுவாக உரிய சீர், தளை, அடி, முடிபு, ஆகியவை வருமாறு :

சீர் : மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர்.
தளை : வெண்டளை.
அடி : ஈற்றடி சிந்தடி ; மற்றைய அடி அளவடி.
முடிபு : நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சீர்கள்.

### உதாரணம்

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.
2. திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித் தலான்.
3. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநாம் என்று.

இம் மூன்று வெண்பாக்களிலும் ஈற்றடி சிந்தடியாகவும் மற்றைய அடிகள் அளவடியாகவும் வந்திருத்தலும், மாச்சீர் விளச்சீர் காய்ச்சீர் ஆகியவை அமைந்திருத்தலும், இறுதி நாள் மலர் முதலிய வாய்பாட்டுச் சீரால் முடிந்திருத்தலும் காண்க.

## ஆசிரியப்பா

**129.** ஆசிரியப்பாவானது நேரிசை யாசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா என்றிங்ஙனம் பலவகைப் படும். ஆசிரியப் பாக்களுக்குப் பொதுவாக உரிய சீர் தளை அடி முதலியன வருமாறு :

சீர் : மாச்சீர், விளச்சீர்.
தளை : ஆசிரியத்தளை.
அடி : சிந்தடி, அளவடி.
முடிபு : இறுதி ஏகாரத்தில் முடிதல்.

### உதாரணம்

1. பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர் ;

பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

2. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

இவ்விரு ஆசிரியப்பாக்களில் அளவடி யமைந்திருத்தலும், முதற்பாவின் ஈற்றயலடி சிந்தடியாக விருத்தலும், இரண்டிலும் மாச்சீர் விளச்சீர் முதலியன அமைந்திருத்தலும், இறுதி ஏகாரத்தில் முடிந்திருத்தலும் காண்க.

ஆசிரியப் பாவுக்கு அடிவரையறை இல்லை; மூன்றடி முதல் சில பல வடிகளில் வரும்.

## கலிப்பா

**180.** கலிப்பாவானது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றிங்ஙனம் பலவகைப்படும். கலிப்பாக்களுக்குப் பொதுவாக உரிய சீர் தளை அடி முதலியன வருமாறு :

சீர் : கலித்தளை தழுவிய வெண்சீர்.

தளை : கலித்தளை.

அடி : அளவடி, சிந்தடி, குறளடி.

முடிபு : பெரும்பாலும் ஏகாரத்தால் முடிதல்.

கலிப்பாவின் உறுப்புக்கள் தரவு தாழிசை அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்றிங்ஙனம் பலவாகும். ஆதலின், இங்கே, தரவும் தரவுகொச்சகமும் உதாரணமாகக் காட்டப்படும்.

## ஆறடித் தரவு

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்

அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே!

### தரவு கொச்சகம்

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முறுக்கிப்போய்
எல்லைநீர் வியங்கொண்மூ விடைநுழையும் மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

இவையிரண்டிலும் காய்ச்சீரும் அளவடி முதலியன வும் அமைந்திருத்தல் காண்க.

### வஞ்சிப்பா

**181.** வஞ்சிப்பா என்பது தனிச்சொல் சுரிதகம் என்பவற்றை இறுதி உறுப்புக்களாகக் கொண்டு, மும் மூன்று அடிகளையுடையதாக வரும் ஒரு வகைப் பா. வஞ்சிப்பாவுக்குரிய சீர் தளை முதலியன வருமாறு :

*சீர்* : *கனிச்சீர், மாச்சீர், விளச்சீர்.*
*தளை* : *வஞ்சித்தளை.*
*அடி* : *குறளடி, சிந்தடி, அளவடி.*
முடிபு : ஏகாரத்தால் முடிதல்.

### உதாரணம்

*வினைத்திண்பகை விழச்செற்றவன்*
*வனப்பங்கய மலர்த்தாளினை*
*தினைத்தன்பொடு தொழுதேத்தினர்*
*நாளும்*
*மயலார் நாற்கதி மருவார்*
*பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.*

இவ் வஞ்சிப்பாவில் *கனிச்சீர் மாச்சீர் விளச்சீர்களும் குறளடி சிந்தடி அளவடி ஆகியவையும் அமைந்துள்ளன. இறுதி ஏகாரத்தில் முடிந்துள்ளமையுங் காண்க.*

### பயிற்சி

1. *சீர்* என்பது யாது? அது எத்தனை வகைப்படும்? ஒவ்வொரு வகைக்கும் வாய்பாடு கூறுக.

2. அடியென்பதன் பெயர்க் காரணத்தை விளக்குக. அடி எத்தனை வகைப்படும்? ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் காட்டுக.

3. " பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

(1) இச் செய்யுளின் அடிகள் ஒவ்வொன்றும் என்ன அடி?

(2) இதிலுள்ள சீர்களை அசைபிரித்துக் காட்டி வாய்பாடு கூறுக.

4. வெண்பா ஆசிரியப்பா இவற்றின் பொதுவிலக்கணம் யாது?

5. கீழ்க்காண்பவை ஒவ்வொன்றும் என்ன பா?

(1) பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

(2) அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையோமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையு மிலமே.

# VI அணி

**182.** அணியாவது செய்யுளுக்கும் உரைநடைக்கும் அழகைக் கொடுப்பது. அணிகள் உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பு முதலியனவாகப் பலவகைப் படும்.

## உவமையணி

**183.** உவமையணி என்பது ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு ஒப்புமை தோன்றக் கூறுவது.

'மாம்பழம் தேன்போல இனிமையாக இருக்கிறது.' —இது உவமையணி பெற வந்த வாக்கியம். இதனில், மாம்பழத்தின் இனிமைக்குத் தேனின் இனிமை ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது. இதில், முக்கியமான பொருள் மாம்பழம்; ஆதலால், அது பொருள் என்றே கூறப்படும். பொருளை உபமேயம் எனக் கூறுதலுமுண்டு. மாம்பழத்துக்கு உவமை தேன்; ஆதலால், அது உபமானம். மாம்பழம் தேன் இவ்விரண்டுக்குமுள்ள பொதுவான தன்மை இனிமை; அதலால் அது பொதுத் தன்மை. போல என்பது உவம வுருபு. எனவே, உவமையணிக்கு உபமானம், உபமேயம், பொதுத் தன்மை, உவமவுருபு என நான்குறுப்புக்கள் உளவாகும்.

உவமையணியில், உவமவுருபு முதலியவை தொக்கு நிற்பது தொகையுவமை யெனவும் விரிந்து நிற்பது விரியுவமை யெனவுங் கூறப்படும்.

உவமையணி வண்ணம் வடிவம் தொழில் பயன் என்னும் இந் நான்கும் பற்றி வரும். அவை, முறையே, வண்ணவுவமை, வடிவவுவமை, தொழிலுவமை, பயனுவமை என்று கூறப்படும். [வண்ணம் - நிறம்.]

பவளவாய் - வண்ணவுவமை; பிறைநுதல் - வடிவவுவமை; பூனைபோற் பதுங்கினான் - தொழிலுவமை; மாரிபோல் வழங்கினான் - பயனுவமை.

(உ - ம்.) எய்யென வெழுபகை யெங்கு மின்மையால்
மொய்பெறு தினவுறு முழவுத் தோளினான்
வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்.

இதனில், தசரதன் தன் நாட்டைப் பாதுகாத்தலாகிய அரசாட்சிக்கு ஓர் ஏழை தன் வயலைப் பாதுகாத்தலாகிய செயல் உவமையாகச் சொல்லப்பட்டிருத்தலின், இது உவமையணி பெற்று வந்த செய்யுள். இவ்வுவமை தொழிலுவமை. மேலும், 'முழவுத்தோள்' என்பது வடிவ வுவமையாக வந்திருத்தலுங் காண்க.

## எடுத்துக்காட்டுவமை யணி

**184.** எடுத்துக்காட்டுவமை என்பது ஒரு செய்தியைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்ற உவமை.

இதனில், உபமான வாக்கியமும் உபமேய வாக்கியமும் உவமவுருபு கொடாமல் தனித்தனியாக அமைக்கப் பட்டிருக்கும்.

### உதாரணம்

அகர முதல வெழுத்தெல்லாம் ; ஆதி
பகவன் முதற்றே யுலகு.

இதனில், 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்பது உபமான வாக்கியம் ; 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என்பது உபமேய வாக்கியம். இவ்விரண்டுக்கு மிடையே 'போல' முதலிய உவமவுருபு இல்லாமை காண்க. இங்ஙனம் வருவதே எடுத்துக் காட்டுவமை யணி.

## இல்பொருளுவமை யணி

**185.** இல் பொருள் உவமை என்பது உலகில் இல்லாத பொருள் உவமையாகக் கூறப்படுதல்.

### உதாரணம்

கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடலர்த்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

இதனில், திருமாலை முகிலாகவும் கண் கை கால் முதலிய அவயவங்களைத் தாமரை மலராகவும் சங்கு சக்கரங்களைச் சந்திரனும் சூரியனுமாகிய இரு சுடராகவும் கருடனைச் செம்பொற் குன்றாகவும் கூறியுள்ளமை காண்க.

இவற்றுள், மேகத்தினிடம் தாமரை பூத்ததாகக் கூறியது இல்பொருளுவமையணியாம்.

## உருவகவணி

**186.** உருவக அணி என்பது உபமானத்தையும், உபமேயத்தையும் வேறு வேறுகக் கூருது உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றி இரண்டையும் ஒன்று படுத்திக் கூறுவது.

உருவக வணியில் பொருளுக்கும் உவமைக்கு மிடையே 'ஆகிய' முதலிய பண்புருபுகள் விரிந்தேனும் மறைந்தேனும் நிற்கும்.

கணவனுகிய சூரியன் வர மனைவியின் முகமாகிய தாமரை மலர்ந்தது - இது உருவக வணி பெற வந்த வாக்கியம். இதனில், சூரியன் தாமரை ஆகிய உவமைப் பொருள்கள் உவம வுருபு கொடுத்து வேறு வேறுகக் கூறப்படாது கணவன் மனைவியின் முகம் என்னும் உவமிக்கப்படு பொருள்களோடு ஒன்றுபடக் கூறப்பட்டிருத்தலும், சூரியனது மலர்விக்குந்தன்மையும் தாமரையினது மலருந்தன்மையும், முறையே, கணவன் முகம் இவற்றில் ஏற்றிக் கூறப்பட்டிருத்தலும் காண்க. இதுவே உருவகித்தல் என்பது.

## முற்றுருவகம்

**187.** முற்றுருவகம் என்பது உவமிக்கப்படும் பொருள்கள் பலவும் உருவகிக்கப்பெற்றிருப்பது.

### உதாரணம்

> அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியால் உண்டு.

இதற்கு, 'அருளாகிய அன்பின் குழந்தை பொருளாகிய செல்வச் செவிலியால் வளரும்' என்பது பொருள். இதனில், குழந்தை, செவிலி ஆகிய உவமைப் பொருள்கள் இரண்டும் அருள் பொருள் ஆகிய உவமிக்கப்படு பொருள்கள் இரண்டனேடும் ஒன்றுபடுத்தி 'அருளாகிய குழந்தை' 'பொருளாகிய செவிலி' என உருவகிக்கப்பட்டிருத்தல் காண்க.

## ஏகதேச உருவகம்

**188.** ஏகதேச வுருவகம் என்பது உவமிக்கப்படு பொருள்களுள் ஒன்று உருவகிக்கப் பெற்றும் மற்றொன்று உருவகிக்கப் பெருமலும் நிற்பது.

### உதாரணம்

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவ னடிசேரா தார்.*

இதற்கு, 'இறைவனது திருவடிகளைத் தியானிப்பவர் அவற்றைத் தெப்பமாகக் கொண்டு பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பர்' என்பது பொருள். இதனில் உவமிக்கப்படு பொருள்கள் இரண்டனுள் பிறவி பெருங்கடலாக உருவகிக்கப் பெற்றதற்கேற்ப இறைவனடி தெப்பமாக உருவகிக்கப் பெருமை காண்க.

## வேற்றுப்பொருள் வைப்பணி

**189.** வேற்றுப் பொருள் வைப்பு என்பது கூறக் கருதும் பொருளை உறுதிப்படுத்தற்கு வேறொரு பொருளை எடுத்துக் கூறுதல்.

எனவே பொதுப் பொருளாற் சிறப்புப் பொருளையும் சிறப்புப்பொருளாற் பொதுப் பொருளையும் சாதித்தல் வேற்றுப் பொருள் வைப்பணி என்க. சாதித்தல்—உறுதிப்படுத்தல்.

### உதாரணம்

1. புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த ஒளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்.

இச் செய்யுளிற் சிறப்புப் பொருளாகக் கூறப்பட்டது கதிரவன் காலையிற் றோன்றி மாலையில் மறைதல்; பொதுப் பொருளாகக் கூறப்பட்டது உயிர்கள் பிறந்து இறத்தல். உயிர்

னது பிறப்பிறப்பாகிய பொதுப் பொருள் சூரியன் தோன்றி மறைதலாகிய சிறப்புப் பொருளாற் சாதிக்கப்பட்டவாறு காண்க.

2. நிறைவாரி யைத்தாண்டி நின்றான் அனுமன்
அறைபெரியோர்க் கென்றோ வரிது.

இதனிற் சிறப்புப் பொருளாகக் கூறப்பட்டது அனுமன் கடலைத் தாண்டுதல்; பொதுப் பொருளாகக் கூறப்பட்டது பெரியோர்க்கு அரியதொன்றுமில்லை என்பது. அனுமன் கடலைத் தாண்டியமையாகிய சிறப்புப் பொருள் பெரியோர்க்கு யாதும் அரிதில்லை என்னும் பொதுப் பொருளாற் சாதிக்கப்பட்டவாறு காண்க.

## பயிற்சி

1. உவமையணி உருவகவணி இவைகள் அமையுமாறு ஒவ்வொரு வாக்கியம் கூறுக.

2. கீழ்க்காண்பவற்றுள் உள்ள அணிகள் யாவை?— விளக்குக.

(1) காந்தியடிகள் நமது நாடு தன்னாட்சி பெறுமாறு செய்தனர்; பெரியோர்க்கு அரியது யாது?

(2) புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(3) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

# ஐந்தாம் படிவம்

## I எழுத்து

### எழுத்துக்களின் பிறப்பு

(பொது)

**1.** எழுத்தின் பிறப்பாவது எழுத்தாகிய ஒலி தோன்றுதல்.

மக்களின் (ஒலித்தற்கு வேண்டும்) முயற்சியால் உடலினுள்ளிருந்து காற்று எழுப்ப, எழுகின்ற ஒலியானது, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கிடத்தையும் பொருந்தி, உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய இவற்றின் பலவேறு வகையான முயற்சியால் பலவகைப்பட்ட எழுத்துக்களாய் ஒலித்தலே எழுத்தின் பிறப்பு.

அங்ஙனம் பிறக்கும் எழுத்துக்கள் முதலெழுத்தெனவும் சார்பெழுத்தெனவும் இருவகைப்படும். முதலெழுத்துக்களாவன உயிரும் மெய்யும். சார்பெழுத்துக்களென்பவை முதலெழுத்தைச் சார்ந்து தோன்றுபவை. அவை உயிர்மெய் ஆய்தம் முதலாகப் பத்துவகைப்படும்.

**2.** முதலெழுத்துக்களின் பிறப்பு: மேலே கூறிய வண்ணம் பிறக்குங்கால், உயிரெழுத்தும் இடையின மெய்யெழுத்தும் கழுத்தை இடமாகக்கொண்டு பிறக்கும்; வல்லினமெய் மார்பை இடமாகக் கொள்ளும்; மெல்லின மெய்க்கு மூக்கு இடமாம்.

[உயிரும் வலி மெலி இடை ஆகிய மெய்யும் மேற்கூறியவாறு பிறத்தலை அவ்வவ்வெழுத்தை உச்சரித்துக் கண்டுகொள்க.]

ந. சூ. **அவ்வழி**
**ஆவி இடைமை இடம் மிடறாகும்**
**மேவும் மென்மைமூக் குரம்பெறும் வன்மை.** க

**3.** சார்பெழுத்துக்களின் பிறப்பு: சார்பெழுத்துக்களுள் ஆய்தவெழுத்துப் பிறத்தற்கு இடம் தலை; முயற்சி வாய்திறந்து ஒலித்தல். மற்றைய சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்தை ஒத்துப் பிறக்கும்.

ந. சூ. ஆய்தக் கிடந்தலை, அங்கா முயற்சி;
சார்பெழுத் தேனவும் தம்முத லனைய. உ

## மெய்ம்மயக்கம்

**4.** மெய்ம்மயக்கம் என்பது சொற்களினிடையில் மெய்யெழுத்துக்கள் பொருத்தமாக இணைந்து நிற்றல். அது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இருவகைப்படும்.

## உடனிலை மெய்ம்மயக்கம்

**5.** உடனிலை மெய்ம்மயக்கம் என்பது எழுத்துக்கள் தம்மொடு தாம் மயங்கி நிற்றல்.

பதினெட்டு மெய்களுள் ர ழ என்னும் இரண்டு தவிர மற்றைய பதினாறு எழுத்துக்களும் தம்மொடு தாம் கூடி நிற்கும்.

### உதாரணம்

மக்கள், இங்ஙனம், அச்சம், மஞ்ஞை, கூட்டம், எண்ணம், பித்தர், வெந்நீர், அப்பன், அம்மை, மெய்யன், மல்லல், தெவ்வர், வள்ளல், காற்று, நன்னெறி.

## வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

**6.** வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பது எழுத்துக்கள் (மேற்காட்டிய வண்ணம் தம்மொடு தாம் மயங்காது) பிற மெய்யோடு மயங்கி நிற்றல்.

பதினெட்டு மெய்களுள் க ச த ப என்னும் நான்கு தவிர மற்றைய பதினன்கெழுத்துக்களும் பிறமெய் களோடு கூடி நிற்கும்.

## உதாரணம்

கிழங்கு, பஞ்சு, மட்கலம், வண்டல், தந்தான், செம்பொன், பொய்கை, ஆர்வம், செல்வம், தெவ்யாது, வாழ்வு, கேள்வி, பயிற்சி, நன்செய்.

எனவே, பதினெட்டு மெய்யெழுத்துக்களுள் ர ழ என்னும் இரண்டும் தம்மொடு தாம் மயங்காவாய்த் தம்மொடு பிறவே மயங்குமென்பதும் க ச த ப என்னும் நான்கும் பிறமெய்யோடு மயங்காது தம்மொடு தாமே மயங்குமென்பதும் ஏனைய பன்னி ரண்டு மெய்களும் தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்கு மென்பதும் அறிக.

குறிப்பு :—உடனிலை மயக்கம் வேற்றுநிலை மயக்கமாகிய இவ்விரண்டும் தனிமொழி தொடர்மொழி இரண்டிலும் வரும்.

## பயிற்சி

1. உயிரெழுத்துக்களின் பிறப்பிடம் எது?

2. மெய்யெழுத்துக்களுள் ஒவ்வொரு இனமும் எதனை இடமாகக்கொண்டு பிறக்கும்?

3. எழுத்துக்களின் மயக்கம் என்றால் என்ன?

4. உடனிலை மெய்ம்மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இவற்றை உதாரணங் காட்டி விளக்குக.

5. உடனிலையாகவே மயங்கும் எழுத்துக்கள் எவை? வேற்றுநிலையாகவே மயங்கும் எழுத்துக்கள் எவை?

6. கீழ்க்காணும் மொழிகளுள் உடனிலை மெய்ம்மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இவற்றைக் குறிப்பிடுக.

பந்து, சென்றார், அச்சு, மருங்கு, கப்பம், பயிற்சி, நாட்டம், நுட்பம், வற்றல், கல்வி, புன்செய், தேர்வு, ஒன்பது, அன்னை, வன்னல், நல்வழி, தமக்கை, அஞ்ஞான்று, செய்கை, பார்வை, வாழ்க்கை, மன்றம், தெங்கு, பொய்யன், தோற்றம், கொண்டல், அஞ்சு, வங்கம், சென்றான், கங்குல், வெண்ணிலா, மயக்கம், வேற்றார், நல்குதல், வாழ்த்து, பார்த்தான், கொண்டான், மருந்து, தக்கார், செல்வர், வென்றார், தேர்வு.

# II சொல்

## பெயர்ச்சொல்

### விளி ஏலாத பெயர்கள்

7. பெயர்ச் சொற்களுட் சில பெயர்கள் விளி வேற்றுமை ஏற்று வரா.

அவை தன்மைப்பெயரும், முன்னிலைப் பெயரும், 'நு' என்னும் எழுத்தை முதலாகவுடைய கிளைப் பெயரும், எ ஏ யா என்னும் மூன்று வினு வெழுத்துக்களையும் அ இ உ இம்மூன்று சுட்டெழுத்துக்களையும் அடியாகக் கொண்டு ஐம்பாலிலும் வரும் வினுப்பெயர் சுட்டுப் பெயர்களும் தாம் தான் முதலிய பெயர்களும் ஆகும்.

விளி ஏலா எனக்கூறிய பெயர்கள் வருமாறு :—

யான், யாம், நாம்—தன்மைப் பெயர்கள்.

நீ, நீர், எல்லீர்,—முன்னிலைப் பெயர்கள்.

நுமன், நுமள், நுமர்—கிளைப் பெயர்கள்.

| | |
|---|---|
| எவன், எவள், எவர், எது, எவை<br>ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை<br>யாவன், யாவள், யாவர், யாது, யாவை | வினுப் பெயர்கள். |
| அவன், அவள், அவர், அது, அவை<br>இவன், இவள், இவர், இது, இவை<br>உவன், உவள், உவர், உது, உவை | சுட்டுப் பெயர்கள். |

தான், தாம், பிறன், பிறர் முதலியன—பிற பெயர்கள்.

ந. சூ. நுவ்வொடு வினுச்சுட் டுற்ற னளர
வைதுத் தாம் தான் இன்னன விளியா. ௩

### விளி ஏற்கும்போது மாறுபடும் முறை

8. பெயர்கள் விளி வேற்றுமையை ஏற்கும்பொழுது ஈறு திரிதல், ஈறு குன்றல், ஈறு மிகுதல், இயல்பாதல், ஈற்றயல் திரிதல் ஆகிய மாறுபாடுகளை அடையும். மேலும்,

ஒரே பெயர் மேற்கூறிய மாறுபாடுகளில் பலவற்றை அடைதலும் உண்டு.

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| அம்மை | — | அம்மா | ஈறு திரிதல். |
| அன்னை | — | அன்னாய் | |
| தம்பி | — | தம்பீ | |
| அரசன் | — | அரச | ஈறு குன்றல். |
| நண்பன் | — | நண்ப | |
| அன்பன் | — | அன்ப | |
| தாய் | — | தாயே | ஈறு மிகுதல். |
| மகன் | — | மகனே | |
| நண்பர் | — | நண்பரீர் | |
| தந்தை | — | தந்தை | இயல்பு. |
| நம்பி | — | நம்பி | |
| நங்கை | — | நங்கை | |
| பிள்ளைகள் | — | பிள்ளைகாள் | ஈற்றயல் திரிதல். |
| புலவர் | — | புலவிர் | |
| தோழர்கள் | — | தோழர்காள் | |
| ஐயன் | — | ஐயா - ஈறுகெட்டு அயல் திரிதல். | |
| இராமன் | — | இராமாவோ - ஈறுகெட்டு அயல் திரிந்து ஓ மிகுதல். | |

## ஆகுபெயர்

9. ஆகுபெயர் என்பது ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்குப் பெயர் ஆவது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், அளவை, சொல், தானி, கருவி, காரியம், கருத்தா முதலியவற்றுள் ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்ட முறைப்படி பெயராகி வருவதே ஆகுபெயர் என்க.

அளவை, எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என நால்வகைப்படும். தானி - தானத்தில் உள்ளது. (தானம் - இடம்). கருவி - காரணம்.

## உதாரணம்

1. தாமரைப் பாதம் - பொருளாகுபெயர் : 'தாமரை' என்னும் முதற்பொருளின் (கொடியின்) பெயர் அதன் சினைப் பொருளுக்கு (மலருக்கு) ஆயிற்று.

2. இடைப்பாடி வாங்கினான்—இடவாகு பெயர் : 'இடைப் பாடி' என்னும் ஊரின் பெயர் அவ்வூரில் நெய்யப்படும் ஆடைக் காயிற்று.

3. கார் அறுத்தது—காலவாகுபெயர் : 'கார்' என்னும் மழைக்காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் நெல்லுக் காயிற்று.

4. வெற்றிலை நட்டான்—சினையாகுபெயர் : 'வெற்றிலை' என்னும் சினையின் பெயர் அதன் கொடிக்காயிற்று.

5. வெள்ளை உழுதது—குணவாகுபெயர் : 'வெள்ளை' என்னும் நிறத்தின் (குணத்தின்) பெயர் அந்நிறத்தையுடைய மாட்டுக் காயிற்று.

6. பொங்கல் உண்டான்—தொழிலாகுபெயர்: 'பொங்கல்' என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலையடைந்த உணவுப் பொருளுக்காயிற்று.

7. கால் நோகிறது—எண்ணலளவை யாகுபெயர் : 'கால் ($\frac{1}{4}$)' என்னும் எண்ணுப் பெயர் அவ்வளவைக் கொண்ட உறுப்புக்காயிற்று.

8. ஒரு பலம் வாங்கி வா—எடுத்தலளவை யாகுபெயர் : 'பலம்' என்னும் நிறுத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட ஒரு பொருளுக்காயிற்று.

9. உண்பது நாழி—முகத்தலளவை யாகுபெயர் : 'நாழி' என்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட அரிசிக்காயிற்று.

10. உடுப்பது நான்கு முழம்—நீட்டலளவை யாகுபெயர் : 'முழம்' என்னும் நீட்டலளவைப் பெயர் அவ்வளவுள்ள துணிக் காயிற்று.

11. அவன் சொல்லை அறிந்தேன்—சொல்லாகுபெயர்: 'சொல்' என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்காயிற்று.

12. கழல் பணிந்தான்—தானியாகுபெயர்: 'கழல்' என்னும் தானியின் பெயர் அக் கழலை யணிந்துள்ள பாதத்துக்காயிற்று.

13. திருக்குறள் படிக்கிறான்—கருவியாகுபெயர்: 'குறள்' என்னும் கருவியின் பெயர் அதனாலாகிய நூலுக்காயிற்று. (குறள் - குறள் வெண்பா. 1330 குறள் வெண்பாக்களாலாகியது திருக்குறள் என்னும் நூல்).

14. யாப்புப் படி—காரியவாகுபெயர்: யாப்பிலக்கணமாகிய காரியத்தின் பெயர் அதனை அறிவித்தற்குக் காரணமாகிய நூலுக்காயிற்று.

15. திருவள்ளுவர் கற்றான்—கருத்தாவாகுபெயர்: 'திருவள்ளுவர்' என்னும் கருத்தாவின் பெயர் அவர் இயற்றிய நூலாகிய திருக்குறளுக்காயிற்று.

16. காளை வந்தான்—உவமையாகுபெயர்: 'காளை' என்னும் உவமையின் பெயர் அதுபோன்ற இளைஞனாகிய பொருளுக்காயிற்று.

ந. சூ. பொருள்முத லாறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

## *பயிற்சி

1. விளி ஏலாத பெயர்கள் யாவை?

2. பெயர்ச்சொற்கள் விளி ஏற்கும்போது எவ்வெவ்வாறு மாறுபடும்?—உதாரணங் காட்டுக.

3. மக்காள், தாயே, அப்பா, குழந்தாய், அன்ப, புலவீர்காள், தம்பி, அம்மாவோ, ஐயே—இவ் விளிப்பெயர்களுள் ஒவ்வொன்றும் அடைந்துள்ள மாறுபாடு யாது?

4. ஆகுபெயர் என்றால் என்ன?

5. கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள ஆகுபெயர்களை எடுத்துக் காட்டி அவை இன்ன ஆகுபெயரெனவுங் கூறுக:

(1) செந்தாமரை போன்ற முகம் வாடிற்று.
(2) தீபாவளிக்கு உறையூர் வாங்கினான்.
(3) வண்ணான் வெள்ளை கொணர்ந்தான்.
(4) அரையில் ஆடை கட்டப்படும்.
(5) கண்ணன் துவையல் உண்டான்.
(6) இறைவன் கழல் பணிக.
(7) அதோ, காளை வருகின்றான், பார்.
(8) எனது சொல் விளங்குகின்றதா?
(9) திருவள்ளுவர் கற்றால் சிறந்த புலமை பெறலாம்.

## வினைச்சொல்

### செய்யும் என்னும் முற்று

**10.** 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று, பலர்பாற் படர்க்கையிடத்திலும், முன்னிலை தன்மை இடங்களிலும் வராது; எனவே, மற்றைய ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் பலவின் பாலாகிய படர்க்கையிடத்து நான்கு பால்களுக்கும் பொதுவாக வரும் என்க.

உதாரணம்

| | |
|---|---|
| கந்தன் பாடும்.<br>முருகன் பாடும். | ஆண்பாலில் வந்தது. |
| வள்ளி ஆடும்.<br>தேவி ஆடும். | பெண்பாலில் வந்தது |
| மான் தாவும்.<br>முயல் தாவும். | ஒன்றன்பாலில் வந்தது |
| ஆடுகள் மேயும்.<br>மாடுகள் மேயும். | பலவின்பாலில் வந்தது. |

நு. சூ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

## (2) பொதுவினை

**11.** பொதுவினையாவது தன்வினை - பிறவினை, செயப்படுபொருள் குன்றிய வினை - குன்றாவினை முதலிய பல வகை வினைகளில் ஒவ்வொரு வகைக்கும் பொதுவாக வரும் வினை.

### உதாரணம்

1. தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை : வெளுத்தான் ; படுத்தான்.

இவை, முறையே, 'தான் (உடல்) வெளுத்தான்,' 'தான் படுத்தான்' எனப் பொருள்படும்போது தன் வினைகளாம்; 'ஆடையை வெளுத்தான்,' 'மரத்தை விழச் செய்தான்' என்றிங்ஙனம் பொருள்படும்போது பிறவினைகளாம்.

செயப்படுபொருள் குன்றிய வினை குன்றாவினைகட்குப் பொதுவான வினைக்கும் மேலே காட்டியவையே உதாரணமாம்.

2. விதிவினை மறைவினைகட்குப் பொதுவான வினை : கூறாய் ; உண்ணாய்.

இவை, முறையே, 'கூறு' 'உண்' என்றிங்ஙனம் பொருள் படும்போது விதிவினைகளாம்; 'கூறாதிருக்கிறாய்,' 'உண்ணாதிருக்கிறாய்' என்றிங்ஙனம் பொருள்படும்போது மறைவினைகளாம்.

3. செய்வினை செயப்பாட்டு வினைகட்குப் பொதுவான வினை : புலி கொன்ற யானை ; மீன் விழுங்கின பையன்.

இவை, முறையே, 'புலியைக் கொன்ற யானை' 'மீனை விழுங்கின பையன்' எனப் பொருள்படும்போது செய்வினைகளாம்; 'புலியால் கொல்லப்பட்ட யானை,' 'மீனால் விழுங்கப்பட்ட பையன்' எனப் பொருள்படும்போது செயப்பாட்டு வினைகளாம்.

**12.** இரு திணைக்கும் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான வினைகளும் உள.

இருதிணைப் பொதுவினைகளாவன தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வேறு இல்லை உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள், பெயரெச்சம், வினையெச்சம் என்பன.

## உதாரணம்

| | |
|---|---|
| யான் சென்றேன்.<br>யாம் சென்றோம்.<br>நீ சென்றாய்.<br>நீர் சென்றீர். | தன்மை வினைமுற்றும் முன்னிலை வினைமுற்றும் இரு திணைக்கும் பொது வாக வந்தன. |
| அவன் வாழ்க.<br>அவள் வாழ்க.<br>அவர் வாழ்க.<br>அது வாழ்க.<br>அவை வாழ்க. | வியங்கோள் வினைமுற்று இருதிணைக்கும் பொது வாக வந்தது. |
| அவன் வேறு.<br>அவள் இல்லை.<br>அவர் உண்டு.<br>அது வேறு.<br>அவை இல்லை.<br>அவை உண்டு. | வேறு இல்லை உண்டு என்பன இரு திணைக்கும் பொதுவாக வந்தன. |
| ஓடின பையன்.<br>ஓடின மாடு.<br>விழுந்து எழுந்தான்.<br>விழுந்து எழுந்தது. | பெயரெச்சமும் வினையெச்சமும் இரு திணைக் கும் பொதுவாக வந்தன. |

ந. சூ. தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை. சு

ஐம்பால் மூவிடப் பொதுவினைகளாவன :—வியங்கோள் வினைமுற்று, வேறு இல்லை உண்டு யார் தகும் படும் வேண்டும் எனும் குறிப்பு வினைமுற்றுக்கள், பெயரெச்சம், வினையெச்சம் என்பன.

உண்டு, தழைப்ப, ஓடிய முதலிய சொற்களும் பொது வினையாக வரும்.

[இவற்றிற்கெல்லாம் உதாரணம் வந்துழி ஆங்காங்கே கண்டுகொள்க.]

## எச்சத்திரிபு

**13.** வினையெச்சங்கள் சொல் மாறுபட்டு நின்றாலும் பொருளில் மாறுபடா.

தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடிதற்கேற்ற வினையெச்சங்கள் வேறு கருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்தால் அவ்விடங்களில் அவற்றை வேறு கருத்தாவின் வினையையுங் கொண்டு* முடிதற்கேற்ற வினையெச்சங்களின் திரிபாகக் கொள்ளவேண்டும். இதுவே 'எச்சத்திரிபு' என்பது.

### உதாரணம்

மழை பெய்து நெல் விளைந்தது.

வறியவன் கொள்வான் வள்ளல் பொருள் கொடுத்தான்.

இவற்றில், 'பெய்து' 'கொள்வான்' என்பவை வேறு வினை கொண்டு முடிதற்கு ஏலாமையால், அவற்றை, முறையே, பெய்ய, கொள்ள என்னும் 'செய' வென்னும் எச்சத்தின் திரிபாகக் கொள்க.

இனி, எவ்வகை வினையெச்சமும் பொருளுக்கு இயையாமல் மாறி வருமாயின் அதனைப் பொருளுக்கியைந்த வினையெச்சம் திரிந்து வந்ததாகக் கொள்ளுதலும் ஈண்டே அமையும். "இல்லாகியாங்கு" என்பதில் ஆனால் என்னும் எதிர்கால வினையெச்சம் 'ஆகி' எனத் திரிந்து நின்றமை காண்க.

இவ் வினையெச்சத் திரிபு உருபு மயக்கம் போல்வது.

ந. சூ. சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை. எ

## உளப்பாட்டுப் பன்மை

### வினைமுற்று

**14.** வினைமுற்றுக்கள் பன்மையைக் குறிக்கும் போது தனிப்பன்மை வினைமுற்று எனவும் உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று எனவும் இருவகைப்படும்.

தனிப்பன்மை வினைமுற்றுவது சிறப்பின் பொருட்டு ஒருவரைக் குறிக்கும் பன்மை வினைமுற்று. உளப்பாட்டுப் பன்மை வினைமுற்றுவது பிறரையும் உட்படுத்திப் பலரைக் குறிக்கும் பன்மை வினைமுற்று.

**15.** தன்மைப் பன்மை வினைமுற்றானது முன்னிலை படர்க்கையாகிய ஈரிடத்துள்ளாரையும் உளப்படுத்திக் கூறும்போது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று என்று கூறப்படும். முன்னிலைப் பன்மை வினைமுற்றானது படர்க்கையிடத்தையும் உளப்படுத்திக் கூறும்போது உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று எனப்படும்.

உதாரணம்

| | |
|---|---|
| நானும் நீயும் உண்டோம்.<br>நானும் அவனும் சென்றோம்.<br>நானும் நீயும் அவனும் படித்தோம். | உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று. |

நீயும் அவனும் ஓடினீர்—உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று.

பயிற்சி

1. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று எங்கெங்கே வரும்? எங்கெங்கே வராது?

2. காணும், பேசும், உண்ணும், உறங்கும்—இச்செய்யும் என்னும் முற்றுக்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

3. பொதுவினைகள் என்பவை யாவை? சில பொது வினைகளை வாக்கியங்களில் அமைக்க.

4. எச்சத்திரிபு என்றால் என்ன?

5. நீர் பாய்ந்து நெல் விளைந்தது; மழை பெய்து குளம் நிறைந்தது—இவற்றுள் எச்சத்திரிபு எவை? ஏன்?

6. உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று என்பது யாது?

7. கீழ்க்காணும் வாக்கியங்களுள் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று, உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று இவற்றைக் குறிக்க.

(1) கம்பர் தமிழில் இராமாயணம் இயற்றினார்.

(2) யானும் அவனும் படம் பார்க்கச் சென்றோம்.
(3) நீயும் உன் தந்தையும் எங்கே போனீர்கள் ?
(4) எனது அருமை ஆசிரியர் வருகிறார்.
(5) நானும் நீயும் அவனும் நாளைத் திருவரங்கம் போவோம்.
(6) நீயும் நானும் நாளைக்குக் கண்காட்சி செல்வோம்.
(7) தாயார் குழந்தைக்கு அன்னம் ஊட்டுகிறார்.

## இடைச்சொல்

### ' மன் '

**16.** மன் என்னும் இடைச்சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருளில் வரும்.

#### உதாரணம்

1. கண்டது **மன்**னும் ஒரு நாள்—இதில், மன் என்பது, வேறு பொருளின்றி அசைத்து நிற்றலால், அசைநிலைப் பொருளில் வந்தது.

2. கூரியதோர் வாள் **மன்**—இதில், ' இப்பொழுது ஒடிந்து விட்டது ' எனும் ஒழிந்த சொற்களைத் தருதலால், ஒழியிசைப் பொருளில் வந்தது.

3. பண்டு காடு **மன்**—இதில், 'இப்பொழுது நாடாயிற்று' என்னும் பொருளைத் தருதலால், ஆக்கப்பொருளில் வந்தது.

4. சிறியகட் பெறினே எமக்கீயு **மன்**னே—இதில், ' இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக் கள் ஈதல் ஒழிந்ததே ' என்னும் பொருள்படுதலால், கழிவுப் பொருளில் வந்தது.

5. எம்பிரான் எமக்கருளும் **மன்**—இதில், ' எம்பிரான் எமக்கு மிகுதியும் அருள் புரிவான் ' எனப் பொருள்படுதலின், மிகுதிப் பொருளில் வந்தது.

6. **மன்**ற வுலகத்து **மன்**னியது புரிமோ—இதில், 'மன்' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த ' மன்ற ', ' மன்னியது ' என்பன நிலைபெறாத, நிலைபெற்றது எனப் பொருள்படுதலால், நிலைபெறுதற் பொருளில் வந்தது.

ந. சூ. மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும். அ

### ‘ என ’

**17.** என என்னும் இடைச்சொல் எண்ணுப் பொருளில் வரும். ஆகவே, ‘என’ என்பது எண்ணிடைச் சொல் ஆம்.

#### உதாரணம்

1. முருகனென வேலனெனக் கந்தனென மூவர் உளர்.
2. நிலனென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங்கள் ஐந்து.

### ‘ தில் ’

**18.** தில் என்னும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருளில் வரும்.

#### உதாரணம்

1. அரிவையைப் பெறுகதில் லம்ம யானே—இதில், அரிவையைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தை உணர்த்துதலால், விழைவு.
2. பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே—இதில், பெற்ற காலத்தி லறிகவெனக் காலத்தை யுணர்த்துதலால், காலம்.
3. வருகதில் லம்மவெம் சேரி சேர—இதில், ‘வந்தால் இன்னது செய்வேன்’ என ஒழிந்த சொல்லைத் தருதலால், ஒழியிசை.

ந. சூ. விழைவே காலம் ஒழியிசை தில்லே.

### ‘ அம்ம ’

**19.** அம்ம என்னும் இடைச்சொல் உரையசைப் பொருளிலும் ‘ஒன்று சொல்லுவேன் கேண்மின்’ என்னும் ஏவற் பொருளிலும் வரும்.

#### உதாரணம்

1. அது மற் றம்ம—இதில், வேறு பொருளின்றிக் கட்டுரையில் வருதலால், உரையசை. [உரை - பேச்சு].

2. அம்ம வாழி தோழி—இதில், 'ஒன்று சொல்வேன், கேள்' என்னும் ஏவற் பொருளில் வந்தது.

ந. சூ. அம்ம உரையசை கேண்மினென் றாகும். ௪0

## 'மோ', 'மதி'

**20.** மோ, மதி என்னும் இடைச்சொற்கள் முன்னிலையில் வரும் அசைச்சொற்களாகும்.

### உதாரணம்

1. காமஞ் செப்பாது கண்டது மொழிமோ.
2. சென்மதி பெரும.

'மொழி', 'செல்' என்னும் முன்னிலையில், முறையே, மோ, மதி என்பன அசையாக வந்தன.

## 'மாது', 'போலும்' முதலியன

**21.** மாது, போலும், ஆம், தான், தாம் என்பவை மேலே கூறியவை போலன்றி, எல்லாவிடங்களிலும் வரும் அசைநிலை இடைச்சொற்களாம்.

### உதாரணம்

1. விளிந்தன்று மாதோ.
2. மகிழ்ந்தனை போலும்.
3. பணியுமாம் என்றும் பெருமை.
4. நீ தான்; அவன் தான், நான்தான்.
5. நீர் தாம்; அவர் தாம்; நாம் தாம்.

### பயிற்சி

1. மன் என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருளில் வரும்?

2. தில், அம்ம இவ்விடைச் சொற்கள் என்னென்ன பொருளில் வரும்? உதாரணங் காட்டுக.

3. முன்னிலை யசையாக வரும் இடைச்சொற்கள் யாவை?

4. மாது போலும் முதலிய இடைச்சொற்கள் எவ்வெவ் விடத்து அசையாக வரும்?—உதாரணம் தருக.

## உரிச்சொல்

### கெழு மல்லல் முதலிய உரிச்சொற்கள்

**22.** 1. கெழு என்பது நிறத்தை உணர்த்தும்.

(உ - ம்.) மாக் கேழ் மடநல்லாய்.

குறிப்பு: கெழு என்பது கேழ் எனத் திரிந்து நின்றது.

2. மல்லல், என்பது வளம் எனும் குணத்தை உணர்த்தும்.

(உ - ம்.) மல்லலோங் கெழில் யானை.

3. கூர், கழி என்பன மிகுதி என்னும் குணத்தை உணர்த்தும்.

(உ - ம்.) அன்பு கூர் மனம்; கழி கண்ணோட்டம்.

4. தட என்பது பெருமையை உணர்த்தும்.

(உ - ம்.) வலிதுஞ்சு தடக்கை வாய்வாள் குட்டுவன்.

5. வை என்பது கூர்மையை உணர்த்தும்.

(உ - ம்.) வை நுனைப் பகழி.

#### பயிற்சி

1. கெழு, மல்லல் இவை எவ்வெப்பொருளில் வரும்?

2. கூர், கழி இவை எப்பொருளை உணர்த்தும்?—உதாரணம் காட்டுக.

3. தட, வை இவற்றின் பொருளுக்கேற்ப இவற்றைப் பெயர்களோடு பொருத்தி வாக்கியங்களில் அமைக்க.

## III பொது

### தொகையிற் பொருள் சிறந்து நிற்கும் இடம்

**23.** வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்னும் தொகைநிலைத் தொடர் மொழிகள் முன்னுள்ளமொழி, பின்னுள்ளமொழி,

(தொடரிலுள்ள) பல மொழிகள், (இவையல்லாத) இவற்றின் புறத்தில் வரும் மொழி என்னும் நான்கிடங்களில் பொருள் சிறந்து நிற்கும்.

இங்ஙனம் பொதுப்படக் கூறப்பட்டதேனும் உம்மைத் தொகை பலமொழியிலும், அன்மொழித்தொகை புறமொழியிலும் பொருள் சிறக்கும்; மற்றைய நான்கு தொகையும் இடத்துக்கு ஏற்ற வண்ணம் முன்மொழியிலேனும் பின்மொழியிலேனும் பொருள் சிறந்து நிற்குமெனக் கொள்க.

### உதாரணம்

1. பானை வனைந்தான், குவிபூ, வெண்டாமரை, வாட்கண்.

பானை முதலிய முன்மொழிகள் குடம் முதலிய தம் இனத்தை விலக்கி நிற்றலால் முன்மொழியிற் பொருள் சிறந்தன.

2. நிலம் உழுதான், சுடு தீ, வெண்ணிலா, புலி பாய்ந்தான்.

உழுதான் முதலிய பின்மொழிகளைக் கூறியவுடனே நிலம் முதலிய முன்மொழிகள் தாமே வந்து இயைதலாற் பின்மொழியிற் பொருள் சிறந்தன.

3. கபில பரணர், சேர சோழ பாண்டியர்.

உம்மைத் தொகைகள் எல்லா மொழிகளிலும் பொருள் சிறந்தன.

4. தாழ்குழல் (வந்தனன்), பெருந்தகை (பேசினன்.)

இவைகளில், சொல்லுவோனது கருத்து இவ்விருமொழிகள் மேலன்றி 'உடையான்' முதலிய புறமொழிப் பொருள்மேல் நிற்றலால் புறமொழியிற் பொருள் சிறந்தன.

ந. சூ. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும்நான் கிடத்தும் சிறக்கும் தொகைப்
பொருள். கக

## மரபு

**24.** மரபென்பது எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எவ்வாறு அறிவுடையோர் கூறினரோ அவ்வாறே கூறுதலாம்.

### உதாரணம்

குதிரைக்குட்டி, பசுவின்கன்று, வாழையிலை, பனையோலை, கருப்பந்தோகை, தென்னம்பிள்ளை, வாழைக்கன்று, மாந்தளிர், பனங்குருத்து என்றிங்ஙனம் கூறுதல் மரபு.

இவ்வாறன்றி குதிரைக்கன்று, பசுவின்குட்டி, வாழையோலை, பனந்தோகை, கரும்பிலை, தென்னங்கன்று, மாம்பிள்ளை, வாழைத்தளிர், மாங்குருத்து என்றிங்ஙனம் கூறுதல் மரபன்று.

ந. சூ. எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. கஉ

## கால மரபு வழுவமைதிகள்

### காலவழுவமைதி

**25.** இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் காலம் மூன்றிலும் தம் தொழில் இடையறாது ஒரு தன்மையாக நிகழ்தற்குரிய பொருள்களை நிகழ்காலத்திற் சொல்லுவர். அங்ஙனம் சொல்லுதல் காலவழுவமைதியாம்.

### உதாரணம்

கடவுள் அளிக்கின்றார்; மலை நிற்கின்றது; கதிரவன் கிழக்கே உதிக்கின்றான்; மீன்கள் (நட்சத்திரங்கள்) மின்னுகின்றன;—கடவுளுக்கு அளித்தலும், மலைக்கு நிற்றலும், கதிரவனுக்குக் கிழக்கே உதித்தலும், மீன்களுக்கு மின்னுதலும், முக்காலத்திலும் உளவாதல் காண்க.

ந. சூ. முக்கா லத்திலும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே. கங

**26.** விரைவு மிகுதி தெளிவு என்னும் காரணம் பற்றியும் யாதொரு காரணமின்றி இயல்பாகவும் முக் காலங்களில் ஒன்றை மற்றொன்றாக, ஏற்குமிடத்தில், மாற் றிச் சொல்லுதலும் உண்டு. இதுவும் காலவழுவமைதி யாம்.

### உதாரணம்

1. உண்பதற்கிருப்பவனை விரைவில் உடனழைத்துச் செல்ல வேண்டியவன் 'இன்னும் உண்ணவில்லையா?' வென்றால் அவன் 'உண்டேன், உண்டேன்,' என்பான். உண்கின்ற வனை அவ்வாறு வினவினால், அவனும் 'உண்டேன், உண் டேன்,' என்பான்—இங்கே, விரைவினால், எதிர்காலமும் நிகழ் காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.

2. 'அவ்வழியே சென்றாற்பொருளைப் பறிகொடுத்தாய்; பொருளைப் பறி கொடுக்கின்றாய்,' 'குற்றம் செய்தால், தண் டனை அடைந்தான்; தண்டனை அடைகிறான்'—இவற்றுள், மிகுதியினால், எதிர்காலம் இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. பறி கொடுத்தலும் தண்டனை அடைதலும் சிறுபான்மை தப்பினும் தப்பு மாதலின், 'மிகுதி' எனப்பட்டன.

3. 'அறஞ் செய்தால் துறக்கம் புகுந்தான்; துறக்கம் புகு கின்றான்,' 'எறும்புகள் முட்டையை எடுத்துக்கொண்டு மேடே றினால் மழை பெய்தது; மழை பெய்கின்றது'—இவற்றுள் தெளிவினால், எதிர்காலம் இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. துறக்கம் புகுதற்கு அறஞ்செய்தல் காரண மென்பதும், மழை பெய்தற்கு எறும்புகள் முட்டையைக் கௌவிக் கொண்டு மேடேறுதல் அறிகுறி என்பதும் தெளியப்பட்டமை யால் தெளிவாயின.

4. 'யாம் முன்னே விளையாடுகிறது இச்சோலை; விளையாடு வது இவ்விடம்'—இங்கே, யாதொரு காரணமின்றி இயல்பி னால் இறந்தகாலம் நிகழ்காலமும் எதிர்காலமுமாகச் சொல்லப் பட்டது.

ந. சூ. **விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும் பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி.** கச

## மரபு வழுவமைதி

**27.** செயப்படுபொருளைக் கருத்தாவைப் போல வைத்து அதன்மேல் அக் கருத்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும் பேச்சுவழக்கத்துக் குரியது.

கருவி நிலம் செயல் காலங்களைக் கருத்தாவாகச் சில இடங்களிற் கூறுதலையும் ஈண்டே கொள்க.

இது மரபு வழுவமைதி யாம்.

### உதாரணம்

1. இம் மாடு யான் வாங்கியது—செயப்படுபொருள்.
2. இவ் வெழுதுகோல் யான் எழுதியது—கருவி.
3. இவ் வூர் கம்பர் வாழ்ந்தது—நிலம்.
4. இத் தையல் வேலன் தைத்தது—செயல்.
5. இந் நாள் காந்தியடிகள் பிறந்தது—காலம்.

இவற்றுள், முறையே, செயப்படுபொருள் கருவி முதலியவை கருத்தாவாகக் கூறப்பட்டமை காண்க.

ந. சூ. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே.
கசு

**28.** கேளாதவற்றைக் கேட்பவை போலவும் பேசாதவற்றைப் பேசுபவை போலவும் நடவாதவற்றை நடப்பவை போலவும் (இவையல்லாத) வேறு தொழில் செய்யாதவற்றை அத்தொழில் செய்பவை போலவும் அஃறிணையிடத்தும் உயர்திணைபோல வைத்துக் கூறப்படும்.

இதுவும் மரபு வழுவமைதி யாம்.

### உதாரணம்

1. நெஞ்சமே, அஞ்சாதே நீ.
2. பகைமையும் கேண்மையுங் கண் உரைக்கும்.
3. இவ் வழி உறந்தைக்குப் போகும்.
4. நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்.

இவற்றுள், நெஞ்சம் கண் வழி முகம் என்பவை, முறையே, கேட்பது போலவும் பேசுவது போலவும் இயங்குவது போலவும் இயற்றுவது போலவும் கூறப்பட்டமை காண்க.

ந. சூ. கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே. கசு

## ஒரு பொருட் பன்மொழி

**29.** ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள் ஒரு பொருட் பன்மொழி எனப்படும்.

அவை அவ்வாறு வருவதற்கு ஓர் காரணமின்றேனும் செவிக்குச் சொல்லின்பந் தோன்ற நிற்றலால் வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

### உதாரணம்

**மீ மிசை** ஞாயிறு; **புனிற்** றிளங் கன்று, **நாகிளங்** கமுகு; **குழிந் தாழ்ந்த** கண்; **வெங் கொடும்** போர்.

இவற்றில், மீ என்பதும் மிசை என்பதும் 'மேல்' என்னும் ஒரே பொருளைத் தரும் மொழிகளாதலின் மீமிசை என்பவை ஒரு பொருட் பன்மொழி. பிறவும் இன்ன. இவ்வாறு வரும் ஒரு பொருட் பன்மொழிகள் '**மீமிசைச் சொல்**' என்னும் வாய்பாட்டாற் கூறப்படும்.

ந. சூ. ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா. கஎ

## இரட்டைக் கிளவி

**30.** சில சொற்கள் தனித்து வராது இரட்டைச் சொற்களாகவே வரும். அவை **இரட்டைக் கிளவி** எனப் படும். [கிளவி - சொல்.]

இரட்டைக் கிளவி இரட்டித்து வருமே யன்றிப் பிரிந்து தனித்து ஒலிக்கமாட்டா; வலிந்து பிரித்துக் கூறின் இரட்டைச் சொல்லான போதுள்ள பொருள் தரா; ஆதலின், இரட்டித்துக் கூறுதலே மரபென்க.

### உதாரணம்

குறுகுறு நடந்து சிறுகை நீட்டின; கந்தன் கலகல வென்று பேசினான்; வற்றிய ஓலை சலசலக்கும்; துடிதுடித்துத் துள்ளி வந்தான்.

ந. சூ. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா. கஅ

## அடுக்குத் தொடர்

**81.** அடுக்குத் தொடராவது ஒரு சொல் மீண்டும் வந்து அடுக்காகத் தொடர்வது.

ஒரு மொழி அசைநிலைக்கும் விரைவு வெகுளி மகிழ்ச்சி அச்சம் முதலிய பொருள் நிலைக்கும் இசையை நிறைப்பதற்கும், முறையே, இரண்டு மூன்று நான்கு என்னும் அளவுவரை அடுக்கி வரும்.

அசைநிலைக்கு இருமுறையும் பொருணிலைக்கு இருமுறை மும்முறையும் இசைநிறைக்கு இருமுறை மும்முறை நான்முறையும் ஒரு சொல் அடுக்காக வருமென்க.

### உதாரணம்

1. அன்றே யன்றே —அசை நிலை.
2. உண்டேன் உண்டேன்; போ போ போ—விரைவு
   உதை உதை; அடி அடி அடி - வெகுளி
   வருக வருக; வாழ்க வாழ்க வாழ்க - மகிழ்ச்சி
   பாம்பு பாம்பு; தேள் தேள் தேள் - அச்சம் } பொருள் நிலை.
3. ஏ ஏ இவளொருத்தி பேடியோ
   நல்குமே நல்குமே நல்குமே நாமகள்
   பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ } இசை நிறை.

ந. சூ.

அசைநிலை பொருணிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும். கக

இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத் தொடருக்குமிடையே உள்ள வேறுபாடு: இரட்டைக்கிளவி பிரிந்து

ஒலியா; அடுக்குத்தொடர் பிரிந்தொலித்துத் தனித்தனி பொருள் தரும். இரட்டைக்கிளவியில் ஒருசொல் இருமுறைக்கு மேல் வராது; அடுக்குத்தொடரில் ஒருசொல் நான்கு முறை வரை அடுக்கி வரும்.

## 5. உபலட்சணம்

### ஒருமொழி தன் இனத்தையும் தழுவல்

**82.** ஒரு சொல் தன்னை உணர்த்துவதோடு ஒழிந்து நின்ற தன் இனத்தையும் தழுவிக்கொள்ளுதற்கு உரியதாம்.

#### உதாரணம்

சோற்றை உண்டான்; வெற்றிலை தின்றான்; நஞ்சுண்டவன் சாவான்.

இவற்றுள், சோறு என்பது கறிகாய் முதலியவற்றையும், வெற்றிலை என்பது பாக்குச் சுண்ணாம்பு முதலியவற்றையும், நஞ்சுண்டவன் என்பது நஞ்சுண்டவள் நஞ்சுண்டவர் முதலிய மற்றைய பெண்பால் பலர்பால் முதலியவற்றையும் தழுவிக் கொள்ளுதல் காண்க.

இதனை வடநூலார் உபலட்சணம் என்பர்.

**ந. சூ. ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே. உ௦**

#### பயிற்சி

1. அறுவகைத் தொகையுள் முன்மொழியிற் பொருள் சிறக்கும் தொகை யாது? பின்மொழியிற் பொருள் சிறக்கும் தொகை யாது? இருமொழியிலும் பொருள் சிறக்கும் தொகை எது? புறமொழியிற் பொருள் சிறக்கும் தொகை எது?

2. கீழ்வரும் தொகைகள் எவ்வெவ் விடத்திற் பொருள் சிறந்தன?

செந்தாமரை; ஆடுபாம்பு; விடுகணை; சுடுசோறு; செஞ்ஞாயிறு; பூங்குழல் (வருகிறாள்); செடிகொடி; சேலைநெய்; வேற்கண்.

3. மரபு என்றால் யாது? நான்குதாரணம் தருக.

4. வழுவமைதி யென்றால் என்ன? கால வழுவமைதிக்கும் மரபு வழுவமைதிக்கும் நந்நான்கு உதாரணம் காட்டுக.

5. மீமிசைச் சொல் என்பதை விளக்குக.

6. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கு மிடையே யுள்ள வேறுபாடு யாது?

7. கீழ்க் காண்பவற்றுள் ஒருபொருட்பன்மொழி, இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் இவற்றைக் குறிக்க:

வெங்கொடுஞ்சொல்; துடிதுடித்தான்; நெருப்பு நெருப்பு; வருக வருக வருக; விரிந்தகன்ற காது; வா வா வா; உலர்ந்த ஓலை சலசலக்கும்.

8. உபலட்சணம் இன்னதென்பதை உதாரணத்துடன் விளக்கிக் காட்டுக.

# IV புணர்ச்சி

## உயர்திணைப் பெயர்கள்முன் வல்லினம்

**38.** பொதுப்பெயர்கட்கும் உயர்திணைப் பெயர்கட்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வருமொழி முதலில் வல்லினம் வரின் இயல்பாம்; அப்பெயர்களின் ஈற்றிலுள்ள உயிரின் முன்னும் யகர ரகரமெய்களின் முன்னும் வருகின்ற வல்லெழுத்துக்கள் மிகா; இங்ஙனமன்றிச் சில உயர்திணைப் பெயர்கள் நாற்கணமும் வரத் தமக்கு ஏற்றவாறு விகாரப்படுதலும் உண்டு.

### உதாரணம்

#### அல்வழி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) ஆண் | + | குறியன் | = | ஆண்குறியன். |
| பெண் | + | குறிது | = | பெண்குறிது. |
| சாத்தன் | + | பெரியன் | = | சாத்தன் பெரியன். |
| சாத்தன் | + | பெரிது | = | சாத்தன் பெரிது. |

### வேற்றுமை

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண் | + கை | = | ஆண் கை. |
| பெண் | + செவி | = | பெண் செவி. |
| சாத்தன் | + தலை | = | சாத்தன் தலை. |
| சாத்தன் | + புறம் | = | சாத்தான் புறம். |

பொதுப்பெயர் ஈற்றுமெய்கள் வலிவர இயல்பாயின. [சாத்தன் என்பது மனிதர்க்கும் விலங்குக்கும் பெயராக இடப்படுதலால் திணைப் பொதுப்பெயராம்.]

### அல்வழி

(2)

| | | | |
|---|---|---|---|
| அவன் | + குறியன் | = | அவன் குறியன். |
| குரிசில் | + பெரியன் | = | குரிசில் பெரியன். |
| மகன் | + சிறியன் | = | மகன் சிறியன். |

### வேற்றுமை

| | | | |
|---|---|---|---|
| தையல் | + கற்பு | = | தையல் கற்பு. |
| மகன் | + பெருமை | = | மகன் பெருமை. |
| வேள் | + சிறுமை | = | வேள் சிறுமை. |

உயர்திணைப் பெயரீற்று மெய் வலிவர இயல்பாயின.

### அல்வழி

(3)

| | | | |
|---|---|---|---|
| பின்னை | + பெரியன் | = | பின்னை பெரியன். |
| பின்னை | + சிறிது | = | பின்னை சிறிது. |
| நீ | + குறியை | = | நீ குறியை. |
| நீர் | + தீரர் | = | நீர் தீரர். |

### வேற்றுமை

| | | | |
|---|---|---|---|
| சாத்தி | + கை | = | சாத்தி கை. |
| சாத்தி | + செவி | = | சாத்தி செவி. |
| தாய் | + தலை | = | தாய் தலை. |
| தாய் | + பொருள் | = | தாய் பொருள். |

பொதுப்பெயரீற்று உயிர் ய ர முன் வன்மை மிகாவாயின.

### அல்வழி

(4) தம்பி + சிறியன் = தம்பி சிறியன்.
சேய் + பெரியன் = சேய் பெரியன்.
அவர் + புலவர் = அவர் புலவர்.

### வேற்றுமை

தங்கை + தலை = தங்கை தலை.
சேய் + பெருமை = சேய் பெருமை
வள்ளுவர் + புலமை = வள்ளுவர் புலமை.

உயர்திணைப் பெயரீற்று ஆவி ய ர முன் வன்மை மிகா வாயின.

| | | | | |
|---|---|---|---|---|
| (5) கபிலன் | + பரணன் | = | கபில பரணர் | அல்வழி |
| விராடன் | + அரசன் | = | விராடவரசன் | |
| வடுகன் | + நாதன் | = | வடுகநாதன் | |
| அரசன் | + வள்ளல் | = | அரச வள்ளல் | |
| தம்பி | + பயல் | = | தம்பிப் பயல் | |
| மக்கள் | + பண்பு | = | மக்கட் பண்பு | வேற்றுமை |
| நளன் | + வெண்பா | = | நளவெண்பா | |
| வள்ளுவர் | + குறள் | = | வள்ளுவர் குறள் | |
| வேளாளர் | + மரபு | = | வேளாள மரபு / வேளாளர் மரபு | |
| குமரன் | + கோட்டம் | = | குமரகோட்டம் / குமரக் கோட்டம் | |

உயர்திணைப் பெயர்கள் சில தமக்கு ஏற்றவாறு விகாரமாயின.

குறிப்பு :—உயர்திணைப் பெயரோடிணைத்துப் பொதுப் பெயரும் கூறப்பட்டிருத்தலின் அதுவும் இங்கே காட்டப்பட்டது.

நூ. ௬.

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ; ஆவி ய ர முன்
வன்மை மிகா ; சில விகாரமாம் உயர்திணை ௨௧

# உயிரீற்றில் இயல்பாக நிற்பவை

## வினாவின் முன்னும் விளிப்பெயர் முன்னும் வல்லினம்

33. சொல்லிறுதியில் வருகின்ற ஆ ஓ ஏ என்னும் வினா வெழுத்துக்களுக்கும் 'யா' என்னும் வினாப் பெயர்க்கும் விளி வேற்றுமைப் பெயர்கட்கும் முன் வருகின்ற வல்லினம் இயல்பாக நிற்கும்.

### உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| கந்தனா + கண்டான் | = கந்தனா கண்டான்? | | ஈற்று வினா |
| முருகனோ + சென்றான் | = முருகனோ சென்றான்? | | முன் வலி |
| நீயே + தின்றாய் | = நீயே தின்றாய் | | இயல்பு. |

| | | |
|---|---|---|
| யா + சிறியன | = யா சிறியன | யா வினா முன் |
| யா + தந்தான் | = யா தந்தான் | வலி இயல்பு |
| தம்பீ + போ | = தம்பீ போ | விளி முன் வலி |
| மகனே + செல் | = மகனே செல் | இயல்பு |

ந. சூ. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி இயல்பே. உ௨

## இடைச்சொல் ஏ ஓ முன் வல்லினம்

35. இடைச் சொற்களாகிய ஏ ஓ என்பவற்றின் முன் வல்லினம் வரின் இயல்பாம்.

### உதாரணம்

சாத்தனே + பேசினான் = சாத்தனே பேசினான்.
நீயோ + பாடினாய் = நீயோ பாடினாய்.

ஏகார ஓகார இடைச் சொற்களின்முன் வலி இயல்பு.

குறிப்பு: இங்கே காட்டப்பெற்றுள்ள ஏகார ஓகாரங்கள் வினாப் பொருள்களில் வந்தவை அல்ல.

ந. சூ. இடைச்சொல் ஏ ஓ முன்வரின் இயல்பே. உ௩

## சில அகரவீற்றின்முன் வலி

**36.** 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துக்கும் பலவகைப்பட்ட அகரவீற்றுப் பெயரெச்சங்கட்கும் அகரவீற்று வினைமுற்றுகட்கும் ஆறும் வேற்றுமை அகரவுருபுக்கும் அகரவீற்றுப் பலவின்பாற் பெயர்களுக்கும் 'அம்ம' என்னும் உரையசை இடைச்சொல்லுக்கும் முன்னே வருகின்ற வல்லினம் இயல்பாம்.

### உதாரணம்

உண்ணிய + தந்தான் = உண்ணிய தந்தான்—செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

உண்ட + குதிரை = உண்ட குதிரை
ஓடுகிற + காளை = ஓடுகிற காளை } தெரிநிலைப் பெயரெச்சம்.

படிக்காத + பையன் = படிக்காத பையன்—எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்.

அரிய + பொருள் = அரிய பொருள்—குறிப்புப் பெயரெச்சம்.

இல்லாத + பொருள் = இல்லாத பொருள்—எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்.

ஓடின + குதிரைகள் = ஓடின குதிரைகள்—தெரிநிலை வினைமுற்று.

சிறியன + பூனைகள் = சிறியன பூனைகள்—குறிப்பு வினைமுற்று.

தன + கைகள் = தன கைகள்—ஆறனுருபு.

பல + பிள்ளைகள் = பல பிள்ளைகள்
சில + கொடுத்தார் = சில கொடுத்தார் } அஃறிணைப்பன்மை.

அம்ம + கொற்று = அம்ம கொற்று—அம்ம என்னும் இடைச்சொல்.

[அம்மா கொற்று என உரையசை நீண்டு வரினும் இயல்பே.]

ந. சூ. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றாறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே. ௨௧

## சில முற்றியலுகரத்தின்முன் வலி

87. 'ஒடு' என்னும் மூன்றும் வேற்றுமையுருபுக்கும் 'அது' என்னும் ஆறும் வேற்றுமை யுருபுக்கும் எண்ணுப் பெயர்கட்கும் வினைத்தொகைக்கும் சுட்டுப் பெயர்கட்கும் இறுதியிலுள்ள முற்றியலுகரத்தின் முன்னே வருகின்ற வல்லினம் இயல்பாகும்.

### உதாரணம்

*தந்தையொடு + சென்றான் = தந்தையொடு சென்றான்—மூன்றனுருபு.*

முருகனது + துணி = முருகனது துணி—ஆறனுருபு.

| | | |
|---|---|---|
| ஏழு + கல் = ஏழு கல் | | |
| ஒரு + கால் = ஒரு கால் | | |
| இரு + செவி = இரு செவி | எண்ணுப் பெயர்கள். | |
| எழு + பிறப்பு = எழு பிறப்பு | | |
| அடு + களிறு = அடு களிறு | வினைத்தொகை. | |
| விரவு + படை = விரவு படை | | |
| அது + கண்டேன் = அது கண்டேன் | சுட்டுப்பெயர். | |
| இது + சிறிது = இது சிறிது | | |

எது கண்டான் எது பெரிது என வினாவீற்று முற்றியலுகரத்தின் பின் வலி இயல்பாதலும் ஈண்டே கொள்க.

ந. சூ. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகும் உகர முன்னர் இயல்பே. உஉ

### பயிற்சி

1. *நளவெண்பா, கம்பன் கவி, மக்கட்பேறு, சேய்பெரியன், நங்கைபண்பு, குரிசில்பெரியன், விசயதிவிட்டர், சோழமன்னன், கபிலர்பாடல், பாண்டிய மன்னர்*—இத்தொடர்களுக்குப் புணர்ச்சி விதி கூறுக.

2. *கீழ் வருவன எவ்வாறு புணரும்? விதி கூறுக :*

*முருகனு + சென்றான் ; அன்ப + பாடுக ; சாத்தனே + பேசினான் ; உண்கிற + பிள்ளை ; அரிய + செயல்; சிறியன + பூனைகள்; சில + பெரியோர் ; ஒரு + கால் ; ஏழு + கடல் ; மகனொடு + சென்றான் ; கண்ணனது + குழல் ; சுடு + சோறு ; இது + சிறிது ; அது + சொன்னேன் ; இரு + செவி.*

# V யாப்பு

## 1. சீர் பிரித்து வாய்பாடு கூறல்

**88.** செய்யுளின் அடிகளிலுள்ள ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர் முதலியவற்றைப் பிரித்து அவற்றிற்குரிய வாய்பாட்டைக் கூறிப் பழகுதல் வேண்டும். இங்ஙனம் சீர் பிரித்து வாய்பாடு கூறுதலுக்கு 'அலகிடல்' எனவும் 'அலகூட்டல்' எனவும் பெயர் வழங்கும்.

சீர் பிரித்து வாய்பாடு கூறுதற்குச் சீரிலுள்ள அசை தோன்றுமாறு கூறிப் பழகுதல் வேண்டும்.

### உதாரணம்

1. அறஞ்செய விரும்பு

| | |
|---|---|
| அறஞ் செய | விரும் பு |
| நிரை நிரை | நிரை நேர் |
| கரு விளம் | புளி மா |

2. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

| | | | |
|---|---|---|---|
| அன் னையும் | பிதா வும் | முன் னறி | தெய் வம் |
| நேர் நிரை | நிரை நேர் | நேர் நிரை | நேர் நேர் |
| கூ விளம் | புளி மா | கூ விளம் | தே மா |

3. அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அக | ர | முத | ல | வெழுத் | தெல் | லாம் | ஆ | தி |
| நிரை | நேர் | நிரை | நேர் | நிரை | நேர் | நேர் | நேர் | நேர் |
| புளி | மா | புளி | மா | புளி | மாங் | காய் | தே | மா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பக | வன் | முதற் | றே | யுல | கு |
| நிரை | நேர் | நிரை | நேர் | நிரை | நேர் |
| புளி | மா | புளி | மா | புளி | மா |

4. உலகம் யாவையும் தாமுள வாக் கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவினை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

உல கம் யா வையும் தா முன வாக் கலும்
நிரை நேர் நேர் நிரை நேர் நிரை நேர் நிரை
புளி மா கூ விள கூ விள கூ விள

நிலை பெ றுத் தலும் நீக் கலும் நீங் கலா
நிரை நேர் நேர் நிரை நேர் நிரை நேர் நிரை
புளி மா கூ விள கூ விள கூ விள

அல கி லா விளை யாட் டுடை யா ரவர்
நிரை நேர் நேர் நிரை நேர் நிரை நேர் நிரை
புளி மா கூ விள கூ விள கூ விள

தலை வ ரன் னவர்க் கே சரண் நாங் களே
நிரை நேர் நேர் நிரை நேர் நிரை நேர் நிரை
புளி மா கூ விள கூ விள கூ விள

## தளையும் அதன் வகையும்

**39.** தளை என்பது மொழிகள் நிலைமொழியும் வருமொழியுமாகப் புணர்தல் போலச் சீர்கள் ஒன்றோடொன்று சேரும்போது முன்னின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை கூடுங்கால் உளதாகும் இசைப் பிணிப்பு. [தளை - பிணிப்பு, கட்டு, பந்தம்.]

'கல்விக் கழகு கசடற மொழிதல்' — இவ்வடியைக் கல்விக் கழகு, கழகு கசடற, கசடற மொழிதல் எனச் சீர் பிரித்துக் கூறி நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ் சீரின் முதலசை கூடுங்கால் உண்டாகும் தளையை (இசைப் பிணிப்பை)ச் செவி கருவியாக உணர்ந்து கொள்க. பிறவும் இன்ன.

**40.** தளையானது வெண்டளை, ஆசிரியத் தளை, கலித்தளை, வஞ்சித்தளை என நால்வகைப்படும்.

### வெண்டளை

**41.** வெண்டளை என்பது பெரும்பாலும் வெண்பாவில் வருதற்குரிய தளை. அது வெண்சீர் வெண்டளை எனவும் இயற்சீர் வெண்டளை எனவும் இருவகைப்படும்.

**42. வெண்சீர் வெண்டளை :** வெண்சீர் வெண்டளையாவது மூவசைச் சீராகிய காய்ச்சீரின்முன் வருஞ்சீரின் முதலசை நேரசையாக நிற்பது. இவ்வாறு நிற்றல் **'காய் முன் நேர்'** வருதல் எனப்படும்.

**உதாரணம்**

> யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு.

இவ்வடிகளில் 'காய் முன் நேர்' வருதலால் வெண்சீர் வெண்டளைகள் உளவாயின.

**43. இயற்சீர் வெண்டளை :** இயற்சீர் வெண்டளையாவது ஈரசைச்சீர்களாகிய மாச்சீர் விளச்சீர்களின்முன் வருஞ்சீரின் முதலசை, முறையே, நிரையசையாகவும் நேரசையாகவும் நிற்பது. இவ்வாறு நிற்றல் **'மா முன் நிரை'** வருதல் எனவும் **'விள முன் நேர்'** வருதல் எனவும் கூறப்படும்.

**உதாரணம்**

> கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க வதற்குத் தக.

இவ்வடிகளில் 'மா முன் நிரை'யும் 'விள முன் நே'ரும் வர இயற்சீர் வெண்டளைகள் உளவாயின.

'காய் முன்நேரும் மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது வெண்டளை' என்பதை வெண்டளையை அறிதற்குத் துணையாகக் கொள்க.

## ஆசிரியத்தளை

**44.** ஆசிரியத்தளை என்பது பெரும்பாலும் ஆசிரியப்பாவில் வருதற்குரிய தளை. அது நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை என இருவகைப்படும்.

நேரொன்றாசிரியத் தளையாவது 'மா முன் நேர்' வருதல்; நிரையொன்றாசிரியத் தளையாவது 'விள முன் நிரை' வருதல்.

(உ - ம்.) "பாரி பாரி என்றுபல வேத்தி"—பாரி பாரி என்பதில் மாமுன் நேர் வர 'நேரொன்றாசிரியத்தளை' உளதாயிற்று.

"அமிழ் தினு மினிய தமிழ் மொழி யதனில்" இவ்வடியில் 'தினு மினி' என்பதிலும் 'மொழி யத' என்பதிலும் விளமுன் நிரைவர 'நிரையொன்றாசிரியத் தளைகள்' உளவாயின.

## தளை கூறப் பழகுதல்

**45.** தளையை எளிதின் அறிந்து கொள்ளுதற்கு நின்ற சீரின் வாய்பாட் டிறுதியசையோடு வருஞ் சீரின் முதலசையின் பெயரைப் பொருத்திக் கூறி அதனால் ஆகும் தளை இன்னதெனச் சொல்லிப் பழகுதல் வேண்டும்.

### உதாரணம்

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரி மாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

கைம்மாறு வேண்டா—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
வேண்டா கடப்பாடு—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
கடப்பாடு மாரிமாட்—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
மாரிமாட் டென்னாற்றுங்—விளமுன்நேர் : இயற்சீர் வெண்டளை.
டென்னாற்றுங் கொல்லோ—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
கொல்லோ வுலகு—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.

2. சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே.

சந்தனப் பொதியச்—விளமுன்நிரை : நிரையொன்றாசிரியத் தளை.
பொதியத் தடவரை—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
தடவரைச் செந்தமிழ்ப்—விளமுன்நேர் : இயற்சீர் வெண்டளை.
பரமா சாரியன்—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத் தளை.

சாரியன் பதங்கள்—விளமுன்நிரை : நிரையொன்றுசிரியத் தளை.
சிரமேற் கொள்ளுதும்—மாமுன்நேர்: நேரொன்றுசிரியத்தளை.
கொள்ளுதும் திகழ்தரற்—விளமுன்நிரை : நிரையொன் றுசிரி யத்தளை.
திகழ்தரற் பொருட்டே—விளமுன்நிரை : நிரையொன்றுசிரியத் தளை.

குறிப்பு :—கலித்தளை என்பது காய்ச்சீருக்கு முன்னே நிரை வருதல். வஞ்சித்தளை என்பது கனிச்சீருக்கு முன்னே நிரையேனும் நேரேனும் வருதல். இவற்றின் விவரமெல்லாம் உயர்நிலைப் பள்ளி மாணவர் நிலைமைக்கும் தகுதிக்கும் மிகை யானவை யாதலின் அவை இங்கே விரிவாகக் கூறப்பட்டில.

## வெண்பா

**46.** வெண்பா அமைப்பைப்பற்றிப் பொதுவாக அறியவேண்டுவன அடி, சீர், தளை, முடிபு, எதுகை மோனை என்பவையாம்.

வெண்பாவுக்குரிய அடி முதலியன வருமாறு :—

அடி : ஈற்றடி சிந்தடி ; மற்றை அடி அளவடி.
சீர் : காய்ச்சீர், மாச்சீர், விளச்சீர்.
தளை : வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை.
முடிபு : ‘நாள்’ ‘மலர்’ ‘காசு’ ‘பிறப்பு’ என்னும் வாய்பாட்டுச் சீர்களால் முடிதல்.
மோனை எதுகைகள் ஏற்றபெற்றி வரும்.

குறிப்பு : சீர்களிலும் அடிகளிலும் முதலெழுத்து ஒன்றுபட்டிருத்தல் மோனை ; இரண்டாமெழுத்து ஒன்றுபட்டிருத்தல் எதுகை.

வெண்பாவில் பிற தளைகள் விரவி வருதல் இல்லை.

## வெண்பாவின் வகை

**47.** வெண்பாவானது குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என ஐவகைப்படும். இவற்றுள்,

குறள் வெண்பா இரண்டடிகள் உள்ளது; சிந்தியல் வெண்பா மூன்றடிகள் உள்ளது; நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும் நான்கடிகள் உள்ளவை; பஃறொடை வெண்பா ஐந்தடி முதலாகப் பலவடிகள் உள்ளது.

## உதாரணம்

### குறள் வெண்பா

1. *யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
   *சாந்துணையுங் கல்லாத வாறு.*

இது முற்றும் வெண்சீர் வெண்டளை பெற்றுக் 'காசு' என்னும் வாய்பாட்டு ஈரசைச் சீரால் முடிந்த குறள்வெண்பா.

2. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
   *நிற்க வதற்குத் தக.*

இது முற்றும் இயற்சீர் வெண்டளை பெற்று 'மலர்' என்னும் வாய்பாட்டு ஓரசைச் சீரால் முடிந்த குறள்வெண்பா.

3. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
   வேளாண்மை செய்தற் பொருட்டு.

இது இருவகை வெண்டளைகளும் பெற்றுப் 'பிறப்பு' என்னும் வாய்பாட்டு ஈரசைச்சீரால் முடிந்த குறள்வெண்பா. [குறள்—குறுகியது.]

### சிந்தியல் வெண்பா

1. *அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து*
   *சிறந்தார்க்குச் செவ்வன் உரைப்ப—சிறந்தார்*
   *சிறந்தமை ஆராய்ந்து கொண்டு.*

இது இருவகை வெண்டளைகளும் பெற்று இரண்டாமடியின் இறுதியில் தனிச்சீர் உடையதாய்க் காசு என்னும் வாய்பாட்டுச் சீரால் முடிந்தது. இஃது நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப் படும்.

2. *சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய*
   *யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப*
   *கானக நாடன் சுனை.*

இதுவும் இருவகை வெண்டளைகளும் பெற்று மலர் என்னும் வாய்பாட்டுச் சீரால் முடிந்தது.

இதில் இரண்டாமடியின் இறுதிச் சீர் தனிச்சீராக அமைய வில்லையாதலின் இஃது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப் படும். [சிந்து—குறளினும் சிறிது நெடியது.]

## நேரிசை வெண்பா

1. எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம்—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்ருன் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து.

இது முன்னிரண்டடி ஒரு எதுகையும் பின்னிரண்டடி மற்ருெரு எதுகையுமாய் இரண்டாமடியின் இறுதியில் தனிச் சீருடையதாய் முற்றும் வெண்சீர் வெண்டளை பெற்றுக் 'காசு' என்னும் வாய்பாட்டுச் சீரால் முடிந்தது.

2. வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனுல் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியர் கோ.

இது நான்கடிகளும் ஒரே எதுகையாய் இரண்டாமடியின் இறுதியில் தனிச்சீர் உடையதாய் இருவகை வெண்டளைகளும் பெற்று 'நாள்' என்னும் வாய்பாட்டுச் சீரால் முடிந்தது.

எனவே, வெண்பாவுக்குரிய பொதுவிலக்கணத்தோடு இரண்டாமடியில் மாத்திரம் தனிச்சீருடையதாய் முன்னிரண்டடி ஒரு எதுகையும் பின்னிரண்டடி மற்ருெரு எதுகையுமாக வேனும் நான்கடிகளும் ஒரே எதுகையாக வேனும் வருவது நேரிசை வெண்பா என்க. தனிச்சீர் என்பது முதலிரண்டடிகளின் எதுகையுடையதாய் முதலெழுத்து அளவொத்து நிற்க விட்டிசைப்பது. நேரிசை - சிறந்த ஓசை. நேரிசை வெண்பாவுக்கு ஒவ்வோரடியிலும் மூன்ருஞ் சீரில் மோனை அமைதல் சிறப்பு.

### இன்னிசை வெண்பா

துகடீர் பெருசெல்வந் தோன்றியக்காற் றெட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோடு டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

இது இருவகை வெண்டளையு முடையதாய்த் தனிச்சீரின்றி மோனைகள் ஏற்றப் பெற்றி அமைய 'மலர்' என்னும் வாய் பாட்டுச் சீரால் முடிந்து நின்றது. [மேலும், நான்கடிகளும் ஒரே எதுகையாக அமைந்திருத்தலும் காண்க.] எனவே, வெண்பாவின் பொதுவிலக்கணத்தோடு இரண்டாமடியில் தனிச் சீரின்றி மோனை எதுகை நியமமுமின்றி நான்கடிகளால் ஆகிய வெண்பா இன்னிசை வெண்பா என்க. [இன்னிசை—இனிய ஓசை.]

### பஃறொடை வெண்பா

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொலோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.

இது இருவகை வெண்டளைகளு முடையதாய்த் தனிச்சீரும் மோனை யெதுகை நியமமுமின்றி ஐந்தடிகள் கொண்டதாய்க் காசு என்னும் வாய்பாட்டுச் சீரால் முடிந்தது. எனவே, வெண் பாவின் பொதுவிலக்கண முடையதாய் ஐந்தடி முதல் பலவடி களைக் கொண்டு முடிவது பஃறொடை வெண்பா என்க. [பல் + தொடை = பஃறொடை.]

## ஆசிரியப்பா

**48.** ஆசிரியப்பாவின் அமைப்பைப்பற்றிப் பொது வாக அறியவேண்டுவன அடி, சீர், தளை, முடிபு என்பன.

ஆசிரியப்பாவுக்குரிய அடி முதலியன வருமாறு :—

அடி : குறளடி, சிந்தடி, அளவடி.
சீர் : மாச்சீர், விளச்சீர்.

தளை : ஆசிரியத் தளை.

முடிபு : ' ஏ ', ' என் ' முதலியவற்றில் முடிதல்.

எதுகை மோனைகள் ஏற்றபெற்றி அமையும்.

குறிப்பு :—ஆசிரியப்பாவிற் சிறுபான்மை காய்ச்சீரும் பிற தளைகளும் விரவி வருதல் உண்டு. ஆசிரியப்பாவுக்கு அடி வரையறை இல்லை; மூன்றடி முதல் பலவடிகளைக் கொண்டு முடியும். ஆசிரியப்பா அகவற்பா எனவும் கூறப்படும்.

## ஆசிரியப்பாவின் வகை

**49.** ஆசிரியப்பாவானது நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டல ஆசிரியப்பா, அடிமறிமண்டல ஆசிரியப்பா என நால்வகைப்படும்.

### உதாரணம்

### நேரிசையாசிரியப்பா

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

இது ஈற்றயலடி சிந்தடியும் மற்றையடிகள் அளவடியும் உடையதாய் ஆசிரியத்தளையும் பிறதளையும் விரவி வரப்பெற்று இறுதி ஏகாரத்தால் முடிவுற்றது. எனவே, ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தோடு ஈற்றயலடி சிந்தடியும் மற்றையவடிகள் அளவடியும் கொண்டது நேரிசையாசிரியப்பா. [நேரிசை—சிறந்த ஓசையும் சொல்லும்.]

### இணைக்குறளாசிரியப்பா

*நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்*
*சாரச் சார்ந்து*
*தீரத் தீரும்*

சார ளுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இது முதலடியும் இறுதியடியும் அளவடியாக இடையடிகள் குறளடியும் சிந்தடியுமாய் ஆசிரியத்தளையோடு பிறதளை விரவி வரப்பெற்று இறுதி ஏகாரத்தால் முடிவுபெற்றது. எனவே, ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தோடு இடையடிகள் குறளடி சிந்தடிகளாக இணைந்து வருவது இணைக்குறள் ஆசிரியப்பா என்க. [குறள் என்பது, இங்கே, அளவடியிற் குறைந்த சிந்தடி குறளடிகள்.]

## நிலைமண்டலவாசிரியப்பா

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார ளுட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

இது எல்லா அடிகளும் அளவடியாய்ப் பிறதளையும் விரவப் பெற்று இறுதி ஏகாரத்தால் முடிந்தது. எனவே, ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தோடு எல்லாவடிகளும் அளவடியாய் வருவது நிலைமண்டலவாசிரியப்பா வாகும். [நிலைமண்டலம் - நிலையையுடைய நாற்சீரடி விடாது பொருந்தப் பெற்றது.]

## அடிமறி மண்டல வாசிரியப்பா

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரலை யெனினே யானஞ் சுவலே
சார ளுட நீவர லாறே.

இது ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தோடு எல்லா அடிகளும் அளவடியாய் ஏகாரத்தில் முடியப்பெற்று ஒவ்வோரடியும் மற்றையடிகளை நோக்காது ஆங்காங்கே பொருள் முடிவதாக அமைந்தது. எனவே, ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தோடு ஓரடி நின்றவிடத்தில் மற்றையடி மறிந்து சென்று பொருந்தி நிற்றற் கியைந்த அளவடிகளால் வருவது அடிமறி

மண்டலவாசிரியப்பா வாகும். [மறித்தல் - மடங்குதல்; மண்டலம் - அடிகளைக் கவர்தல்.]

## ஆசிரிய விருத்தம்

50. வெண்பா முதலிய நால்வகைப் பாக்களில் ஒவ்வொன்றுக்கும் தாழிசை துறை விருத்தம் என மும்மூன்று இனம் உண்டு. இவை பாவினம் எனப்படும். ஆகவே, 'ஆசிரிய விருத்தம்' என்பது ஆசிரியப்பாவின் இனமாகிய செய்யுள்.

ஆசிரிய விருத்தமானது ஆசிரியப்பாவுக்குரிய இலக்கணங்கள் பெரிதும் பெற்று, அறுசீரடி, எழுசீரடி, எண்சீரடி முதலிய கழிநெடிலடிகள் நான்கு கொண்டதாய் நான்கடியும் ஒரே யெதுகையுடையதாய்ச் சீரினளவினால் ஒத்து முடிவதாம்.

ஆசிரியவிருத்தம் தான் கொண்டுள்ள அடிக்கேற்ப 'அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்' 'எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்' என்றிங்ஙனம் பெயர் பெறும்.

### உதாரணம்

### அறுசீர் விருத்தம்

1. அரக்கரோ ரழிவு செய்து
 கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல
 மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தாய் என்பால்
 எப்பிழை கண்டா யப்பா
பரக்கழி விதுநீ பூண்டாற்
 புகழையார் பரிக்கற் பாலார்.

இது, முதலும் நான்கும் விளச்சீரும் இரண்டும் ஐந்தும் மாச்சீருமாக, மூன்றும் ஆறும் தேமாவேயாய்க் கொண்டு முடிந்த அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

### . எழுசீர் விருத்தம்

2. இணங்குரு வாய்மை மெய்ம்மையே யெனினும்
இயம்பொணு திணங்குவ தெனினும்
அணங்குநோய் செய்யும் பொய்சொலா தொழிக
அறிஞரோ டிணங்குக நாளும்
குணங்களே மொழிக வுளத்திலெஞ் ஞான்றும்
நன்மையே குறிக்கொளல் வேண்டும்
பிணங்குவெஞ் சூதிற் குறளையிற் றீதிற்
பெறுபொருள் கோடறீங் குறுமால்.

இது முதலும் மூன்றும் ஐந்தும் ஆறும் விளச்சீராக மற்றைய மூன்றும் மாச்சீராகி வந்த எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

### எண்சீர் விருத்தம்

3. ஓருரு மொருகுலமு மில்லா வென்னை
உங்கள்குலத் துள்ளோரி லொருவ னுக்கித்
தேருரு மவர்மனைக்கே வாழ்ந்த வென்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி யம்பு ராசி
நீருரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினுஞ்சீர் பெறவைத்தாய் நினக்கே யன்றி
ஏருருங் கதிர்முடியாய் உற்ற போரில்
யார்க்கினியென் னுயிரளிப்ப தியம்பு வாயே.

இது முதலும் இரண்டும் ஐந்தும் ஆறும் காய்ச்சீராக மூன்றும் நான்கும் ஏழும் எட்டும் மாச்சீராகி வந்த எண்சீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆசிரிய விருத்தத்தின் பேதங்கள் இன்னும் பலவுள. அவை வந்துழி ஆங்காங்கே காண்க.

### பயிற்சி

1. "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

—இச்செய்யுளை அலகிடுக.

2. "உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

—இதனை அலகிட்டுத் தளை கூறுக.

3. "உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

இதிலுள்ள ஆசிரியத் தளைகளைக் குறிப்பிடுக.

4. நேரிசை வெண்பாவுக்கும் இன்னிசை வெண்பாவுக்கும் ஒவ்வோருதாரணம் காட்டுக.

5. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?

6. வெண்பா, ஆசிரிய விருத்தம் இவற்றின் பொது விலக்கணங்கள் யாவை?

7. கீழ் வருவன என்ன பாக்கள்?

(1) இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(2) அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றன வென்றெண்ணி
இகழின் இழுக்கந் தரும்.

(3) பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

(4) அல்லையாண் டமைந்த மேனி
யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்.

# VI அணி

## வேற்றுமை யணி

**51.** வேற்றுமையணியாவது உபமான உபமேயங்களை முதலில் ஒற்றுமை தோன்ற ஒன்றுபடக் கூறிப் பின்னர் அவற்றினிடையே வேற்றுமை காட்டுதல் ஆம்.

உதாரணம்

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

இச் செய்யுளில், உவமை - திங்கள்; பொருள் - சான்றோர். இவ்வுவமையும் பொருளும் 'ஒப்பர்' என முதலில் ஒன்றுபடக் கூறப்பட்டன. பின்னர் உவமையாகிய திங்கள் தன்னிடத்தில் களங்க முடையதாய் அதனைப் பொறுத்துக் கொண்டிருக்குமெனவும் சான்றோர் தம்மிடத்திற் குற்றம் ஒரு சிறிதுண்டாயினும் அதனைப் பொறுக்காது வருந்தி அதைப் போக்க முயல்வரெனவும் கூறி வேற்றுமை காட்டி உவமையினும் பொருளுக்குச் சிறப்புக் கூறப்பட்டிருத்தல் காண்க.

## வஞ்சப் புகழ்ச்சி யணி

**52.** வஞ்சப்புகழ்ச்சியணி யென்பது பழிப்பினாற் புகழ்ச்சியாவது புகழ்ச்சியாற் பழிப்பாவது தோன்றக் கூறுதல் ஆகும்.

உதாரணம்

பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே.

இதனில், பாரி என்னும் வள்ளலைப் பழிப்பது போல, அவன் கைம்மாறு கருதாது மழை வழங்கும் மேகத்துக் கொப்

பானவன் என அவன் புகழ்தோன்றக் கூறப்பட்டிருத்தல் காண்க.

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

இதனில், கீழ்மக்கள் தேவரைப் போலத் தாம் விரும்பிய வற்றையெல்லாம் செய்யும் ஆற்றலுடையவரென அவரைப் புகழ்வதுபோல இகழ்ந்திருத்தல் காண்க.

## நிரனிறை யணி

**58.** நிரல் நிறை யணியாவது பெயர் வினைகளாகிய சொற்களையும் அவை கொண்டு முடியும் பயனிலைகளையும் வேறு வேறாக வரிசைப்பட நிறுத்தி முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கு இது பயனிலையாகும் என்பது தோன்ற அமைக்கப்படுவதாகும்.

இவ்வணி 'முறைநிரனிறையணி' யெனவும் 'எதிர் நிரனிறையணி' யெனவும் இருவகைப்படும்.

'முறை நிரல் நிறை'யாவது முன்னுள்ள சொல் முன்னுள்ள பயனிலையும் பின்னுள்ள சொல் பின்னுள்ள பயனிலையும் கொள்ளுமாறு முறைமுறையாக அமைவது. 'எதிர் நிரல் நிறை'யாவது முன்னுள்ள சொல் பின்னுள்ள பயனிலையும் பின்னுள்ள சொல் முன்னுள்ள பயனிலையும் கொள்ளுமாறு எதிரெதிராக அமைவது [நிரல் - வரிசை ; நிறை - நிற்பது.]

உதாரணம்

முறைநிரனிறை

1. உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியைப்—படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்ஆ வரைஇலைகாய் பூ.

இதனில், 'உடுத்தது - பொன், மேய்த்தது - ஆ, எடுத்தது - வரை, படுத்தது - இலை, எறிந்தது - காய், இரந்தது - பூ' எனப் பெயர்களும் பெயர்ப்பயனிலைகளும் முறைமுறையாக

நிற்றலால் முறைநிரனிறையணி அமைந்துள்ளமை காண்க.
[பொன் - பொன்னுடை ; ஆ - பசு ; வரை - மலை ; பூ - பூமி.]

## எதிர்நிரனிறை

2. ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு.

இதனில் 'வெஃகா - கிடந்தான், பாடகம் - இருந்தான், ஊரகம் - நின்றான்' எனப் பெயர்களும் வினைப்பயனிலைகளும் எதிரெதிராக நிற்றலால் எதிர்நிரனிறையணி அமைந்துள்ளமை காண்க. [பஞ்சரம் - வாழிடம். வெஃகா, பாடகம், ஊரகம் என்பன காஞ்சிமாநகரிலுள்ள திருமால் கோயில்கள். திருமால், அவற்றுள், வெஃகாவில் பள்ளிகொண்ட திருக்கோல மாகவும் பாடகத்தில் இருந்த திருக்கோலமாகவும் ஊரகத்தில் நின்ற திருக்கோலமாகவும் எழுந்தருளியுள்ளார். ஆதலின், முறையே பொருள் கொள்ளாமல் எதிராக மாறி இயைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.]

## பயிற்சி

1. வேற்றுமையணி என்பது யாது?—உதாரணங் காட்டுக.

2. வஞ்சப் புகழ்ச்சி யணி இத்தகையது என்பதை விளக்கிக் கூறுக.

3. கீழ் வருவனவற்றுள் அமைந்துள்ள அணிகள் யாவை? விளக்கிக் காட்டுக :

(1) நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்.

(2) உவர்க்கட லன்ன செல்வரு முளரே
கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே.

(3) களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்
தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே.

(4) பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனில் மூப்பிற் பல்சான் றீரே.

# VII பொருளிலக்கணம்

**54.** பொருளிலக்கணம் என்பது தமிழிலுள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களுள் பொருளைப் பற்றியது. பொருள் என்பது, இங்கே, அறமும் பொருளும் இன்பமும் ஆகும். இம் மூன்று பொருளும் அகப்பொருள் புறப் பொருள் என இரண்டு வகையாகக் கூறப்படும்.

## அகப்பொருளும் புறப்பொருளும்

**55.** பண்டைத் தமிழ்ச் சான்றோர் அறம் பொருள் இன்பம் என்னும் இம் மூன்று உறுதிப் பொருள்களுள் அறத்தையும் பொருளையும் புறப்பொருள் எனவும் இன் பத்தை அகப்பொருள் எனவும் பாகுபடுத்தினர்.

புறப்பொருளென்பது இத்தகையதென வுணர்ந்து புறத்தார்க்குச் சொல்லுமாறு யாவர்க்கும் புலனாவது. அகப்பொருளென்பது புறத்தார்க்குப் புலனாகாது உள் ளத் துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம். இன் பம் பல வகைப்படுமேனும் ஒருவனும் ஒருத்தியும் தலை வனுந் தலைவியுமாகக் கூடிவாழும் வாழ்க்கையின்பமே சிறப்புடைய இன்பமாகக் கருதப்படும். அதுவே அகப் பொருளென்று கூறப்படுவது. அகம் - உள்; புறம் - வெளி; அகம்பற்றிய பொருள் - அகப்பொருள்; புறம் பற்றிய பொருள் புறப்பொருள்.

பத்துப் பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்கள் யாவும் அகப்பொருள் புறப்பொருள்களுள் ஏதேனும் ஒன்றைப் பற்றியதாகவே இருக்கும்.

### உதாரணம்

### அகப்பொருள்

1. ***யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்***
***தானோக்கி மெல்ல நகும்.***

2. முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇ
குவளை யுண்கண் குய்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.

இச் செய்யுட்கள் இரண்டனுள் முன்னது தலைவனுந் தலைவியும் ஒருவரை யொருவர் கண்டு மகிழ்தல் பற்றியது; பின்னது தலைவி தான் அட்ட உணவைக் கணவன் இனிதென உண்டமை குறித்து மகிழ்தல் பற்றியது.

## புறப்பொருள்

3. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

4. கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்.
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

இவற்றுள், முன்னையது ஒரு வீரன் தன் தலைவனது பேராண்மை இத்தகையதெனக் கூறுதல் பற்றியது; பின்னையது கபிலர் வேள்பாரியின் பெருவீரத்தையும் வரையாது வழங்கும் பேரறத்தையும் பற்றி மூவேந்தர்க்கும் எடுத்துரைத்தல் பற்றியது.

## பயிற்சி

பின்வரும் செய்யுட்களில் அமைந்துள்ள அகப்பொருள் புறப்பொருள்களை எடுத்துக் காட்டுக.

1. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

2. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

3. எண்ணரு நலத்தின ளிளையள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவும் நிலைபெரு துயிரு மொன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்.

4. ஆலை யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூலை யாயின கண்டலை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

5. களம்புக லோம்புமின் தெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு வீரன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே.

# ஆறும் படிவம்

## I எழுத்து

### ஐகார ஒளகாரக் குறுக்கங்கள்

1. ஐகாரக் குறுக்கம் என்பது ஓசை குறைந்த ஐகாரம். அஃதாவது இரண்டு மாத்திரை ஒலிக்க வேண்டிய ஐகாரம் அவ்வளவிற் குறுகியொலித்தல். ஒளகாரக் குறுக்கமும் இரண்டு மாத்திரை ஒலிக்க வேண்டிய ஒளகாரம் அவ்வளவிற் குறுகியொலித்தலே.

இவற்றுள், ஒவ்வொன்றும் தன்னைச் சுட்டுமிடமும் அளபெடையாக வருமிடமும் தவிர மற்றைய இடங்களிற் குறுகும். அங்ஙனங் குறுகுங்கால் ஐகாரம் மொழி முதல் இடை கடை ஆகிய மூன்றிடத்திலும் ஒளகாரம் மொழி முதலில் மாத்திரமும் குறுகும். தன்னைச் சுட்டுதல் - தன் பெயரைக் கூறுதல்.

ஐகாரம் மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரை யாகவும் மற்றையிடங்களில் ஒரு மாத்திரையாகவும் குறுகும் என்பதும் ஒளகாரமும் மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரையாகக் குறுகுமென்பதும் நுண்ணிதாக அவற்றை ஒலித்து உணரத்தக்கவை.

உதாரணம்

| | |
|---|---|
| ஐயன், வைகல்<br>வளையல், நுழைதல்<br>எருமை, குவளை | ஐகாரம் மூன்றிடத்திலும் குறுகிற்று. |

ஒளவை, வெளவால்—ஒளகாரம் மொழி முதலிற் குறுகிற்று.

ந. சூ. தற்சுட் டளபெழி ஐமூ வழியும்
நையும் ஒளவும் முதலற் றாகும்.

## மகரக் குறுக்கம்

**2.** மகரக் குறுக்கம் என்பது ஓசை குறுகிய மகரம். அஃதாவது, அரை மாத்திரை ஒலிக்கவேண்டிய மகரமெய் அவ்வளவிற் குறுகிக் கால் மாத்திரையாக ஒலித்தல்.

மகரமெய் (ளகர லகரந் திரிந்ததனாலாகிய) ணகர னகரங்களின் முன்னும், (வருமொழி முதலில் நின்ற) வகர உயிர்மெய்யின் பின்னும் வரின் தனக்குரிய அரை மாத்திரையிற் குறுகும்.

### உதாரணம்

1. மருளினு மெல்லாம் மருண்ம்.
2. திசையறி மீகானும் போன்ம்.
3. தரும் வள்ளல்; வரும் வளவன்.

இவற்றுள், 'மருண்ம்' 'போன்ம்' என்பவை 'மருளும்' 'போலும்' என்னும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்றுக்கள் திரிந்ததனா லாகியவை.

**ந. சூ. ணன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும். உ**

## ஆய்தக் குறுக்கம்

**3.** ஆய்தக் குறுக்கம் என்பது ஓசை குறுகிய ஆய்தம். அஃதாவது, அரைமாத்திரை ஒலிக்கவேண்டிய ஆய்தம் அவ்வளவிற் குறுகிக் கால் மாத்திரையாக ஒலித்தல்.

ஆய்தம், தனிக்குறிலடுத்த லகர ளகர வீற்றுப் புணர்ச்சியில் வருமொழி முதலிலுள்ள தகரம் திரிந்ததனா லாகியதாயின், தனக்குரிய அரை மாத்திரையிற் குறுகும்.

### உதாரணம்

அல் + திணை = அஃறிணை; பல் + தொடை = பஃறொடை.
முள் + தீது = முஃடீது; கள் + தீது = கஃடீது.

இவற்றுள், 'முள் தீது' என்பது 'முட்டீது' எனவும் 'கள் தீது' என்பது 'கட்டீது' எனவும் வரும்.

ந. சூ. ல ள வீற் றியைபினும் ஆய்தம் அஃகும். ௩

குறிப்பு : இக் குறுக்கங்களை யெல்லாம் நுணுக்கமாக ஒலித்துச் செவி கருவியாக உணர்தல் வேண்டும்.

## எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

4. எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பாவது மார்பு கழுத்து மூக்கு இவற்றை இடமாகக் கொண்டு பிறக்கும் முப்பது முதலெழுத்துக்களும் தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் ஆய்தமும் உதடு, நாக்கு, பல், அண்ணம் ஆகிய இவற்றின் பல்வேறு முயற்சிகளால் பல வகைப்பட்ட எழுத்துக்களாய் ஒலித்தலாகும். அண்ணம் - மேல்வாய்.

### அ ஆ

5. முதலெழுத்துக்களுள், அ ஆ என்னும் இரண்டு உயிர்களும் முன் கூறிய முயற்சிகளில் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும். அங்காத்தல் - வாய்திறத்தல்.

இவ் வங்காத்தல் எல்லாவெழுத்துக்கும் வேண்டிய பொது முயற்சி.

அ ஆ என உச்சரித்து இவற்றிற்கு வேண்டிய முயற்சியைக் கண்டு கொள்க. பிறவெழுத்துக்களுக்கும் இங்ஙனமே.

ந. சூ. அவற்றுள்,
முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய.

### இ ஈ எ ஏ ஐ

6. இ ஈ எ ஏ ஐ என்னும் இவ்வைந்தெழுத்தும் வாய் திறத்தலுடன் அண்பல்லை (மேல்வாய்ப்பல்லை) அடி நாக்கினது விளிம்பு பொருந்துதலாற் பிறக்கும். அண்பல் - நாவின் விளிம்பால் அணுகப்படும் பல்.

ந. சூ. இ ஈ எ ஏ ஐ அங் காப்போ
டண்பல் முதல் நா விளிம்புற வருமே.

### உ ஊ ஒ ஓ ஔ

7. உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வைந்தெழுத்தும் பிறத்தற்குக் காரணமாகிய முயற்சி உதடுகளின் குவிதலாம்.

ந. சூ. உ ஊ ஒ ஓ ஔ விதழ் குவிவே. சு

### க ங ச ஞ ட ண

8. ககர ஙகரங்களும் சகர ஞகரங்களும் டகர ணகரங்களும், முறையே, நாவின் அடியும் நடுவும் நுனியும் மேல்வாயின் அடியையும் நடுவையும் நுனியையும் பொருந்துதலாற் பிறக்கும்.

அஃதாவது, ககர ஙகரங்கள் அடிநாக்கு அடியண்ணத்தைப் பொருந்துதலாலும், சகர ஞகரங்கள் நடுநாக்கு நடுவண்ணத்தைப் பொருந்துதலாலும், டகர ணகரங்கள் நுனிநாக்கு நுனியண்ணத்தைப் பொருந்துதலாலும் பிறக்கும் என்க.

ந. சூ. க ங வும் ச ஞ வும் ட ண வும் முதலிடை
நுனிநா வண்ணம் உறமுறை வருமே. எ

### த ந

9. தகர நகரங்கள் மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்துதலால் தோன்றும்.

ந. சூ. அண்பல் லடிநா முடியுறத் தநவரும் அ

### ப ம

10. பகரமும் மகரமும் மேலிதழும் கீழிதழும் தம்மிற் பொருந்துதலாற் பிறக்கும். இதழ் - உதடு.

ந. சூ. மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும். கூ

### யகரம்

11. நாவின் அடி மேல்வாயின் அடியைப் பொருந்துதலால் யகரம் தோன்றும்.

ந. சூ. அடிநா வடியணம் உறயத் தோன்றும். க0

## ர ழ

**12.** ரகரமும் ழகரமும் மேல்வாயை நாவின் நுனி தடவுதலாற் பிறக்கும்.

**ந. சூ. அண்ணம் நுனிநா வருட ரழவரும்.** கக

## ல ள

**13.** லகர ளகரங்கள் இவ்விரண்டும் மேல்வாய்ப் பல்லின் அடியையும் மேல்வாயையும், முறையே, நாவின் விளிம்பானது தடித்து ஒற்றுதலாலும் தடவுதலாலும் பிறக்கும்.

அஃதாவது, மேல்வாய்ப்பல்லின் அடியை நாவின் விளிம்பு தடித்து ஒற்றுதலால் லகரமும், மேல்வாயை நாவின் விளிம்பு தடித்துத் தடவுதலால் ளகரமும் பிறக்கும் என்க.

**ந. சூ. அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**
**நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.** கஉ

## வகரம்

**14.** மேல்வாய்ப்பல் கீழுதட்டைப் பொருந்துதலால் வகரம் தோன்றும்.

**ந. சூ. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.** கா

## ற ன

**15.** றகரமும் னகரமும் மேல்வாயை நாவின் நுனி நன்கு பொருந்துதலால் உளவாகும்.

**ந. சூ. அண்ணம் நுனிநா நனியுறிற் றனவரும்.** கச

## சார்பெழுத்துக்கள்

**16.** சார்பெழுத்துக்களுள் ஆய்தத்துக்குப் பிறப்பிடம் தலை; முயற்சி அங்காத்தல். மற்றைய சார்பெழுத்துக்களெல்லாம் பிறப்பிடம் முயற்சி வகைகளினால் தத்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாகும்.

ந. சூ. ஆய்தக் கிடந்தலை, அங்கா முயற்சி ;
சார்பெழுத் தேனவும் தம்முத லனைய. கசு

## மெய்ம்மயக்கம்

**17.** மெய்ம்மயக்கமாவது மொழிக்கிடையில் மெய்யெழுத்துக்கள் தனிமெய்யாகவும் உயிர்மெய்யாகவும் இணைந்து வருதல். அது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனவும் உடனிலை மெய்ம்மயக்கம் எனவும் இருவகைப்படும்.

வேற்றுநிலை மெய்ம்மயக்கமென்பது தம் முன் பிற மெய்கள் மயங்குவது. உடனிலை மெய்ம்மயக்கமென்பது தம் முன் தாமே வந்து இணைந்து நிற்பது.

[பதினெட்டு மெய்களுள் க ச த ப வென்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்குமென்பதும் ர ழ வென்னும் இரண்டும் தம்மொடு பிறவே மயங்குமென்பதும் மற்றைய பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்குமென்பதும் இந்நூலின் ஐந்தாம் படிவப் பகுதியில் விளக்கப் பெற்றுள்ளன. இனி, அவை பற்றிய விவரங்களை ஈண்டுக் காண்போம்.]

## வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

**18.** தம் முன் பிறமெய்கள் மயங்கும்போது ஙகர மெய்யின் முன் ககரமும் வகர மெய்யின் முன் யகரமும் மயங்கும்.

இதுவும் அடுத்துவரும் ஆறு விதிகளும் தனிமெய்யோடு உயிர்மெய்யாக வந்து மயங்குவனவற்றைப் பற்றியன.

உதாரணம்

தெங்கு, பொங்கல், செங்கை, பூங்கா—ஙம்முன் க.
அவ் யாது, இவ் யாது, தெவ் யாது—வம்முன் ய.

ந. சூ. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே. கசு

**19.** ஞகர நகர மெய்களின் முன் அவற்றுக்கின மாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும்.

அஃதாவது, ஞகர மெய்யின் முன் சகரமும் யகரமும் நகர மெய்யின்முன் தகரமும் யகரமும் இணையும்.

உதாரணம்

தஞ்சம், பஞ்சு, வஞ்சி, உரிஞ் யாது } ஞ ந முன் இனமும் யகரமும்.
பந்தர், கந்து, மந்தை, பொருந் யாது

ந. சூ. ஞநமுன் தம்மினம் யகரமொ டாகும். கஎ

**20.** டகர றகர மெய்களின் முன் க ச ப என்னும் மூன்று மெய்களும் கூடி மயங்கும்.

உதாரணம்

வெட்கம், ஆட்சி, நுட்பம்—ட முன் க ச ப.
நிற்க, பயிற்சி, வெற்பு—ற முன் க ச ப.

ந. சூ. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும். கஅ

**21.** ணகர னகர மெய்களின் முன் அவற்றுக்கின மாகிய டகர றகரங்களும் க ச ஞ ப ம ய வ எனும் இவ்வேழு மெய்களும் மயங்கும்.

அஃதாவது, ணகர மெய்யின் முன் டகரமும் க ச ஞ ப ம ய வ என்பவையும் னகர மெய்யின் முன் றகரமும் க ச ஞ ப ம ய வ என்பவையும் மயங்கும் என்க.

உதாரணம்

கண்டு, உண்க, வெண் சோறு, வெண் ஞமலி
பண்பாடு, மண் மலை, மண் யாது, கண் வலி
கன்று, புன்கு, நன்செய், புன் ஞமலி
அன்பு, தன்மை, பொன் யாது, என் வேலை
} ணன முன் இனமும் க ச ஞ ப ம ய வவ்வும்

ந. சூ. ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும். கசு

**22.** மகர மெய்யின்முன் ப ய வ இம் மூன்று மெய்களும் இணைந்து வரும்.

### உதாரணம்

அம்பு, நம்பி, நிலம் யாது, கலம் வலிது—மம் முன் ப ய வ.

ந. சூ. மம்முன் பயவ மயங்கும் என்ப. ௫௦

**23.** ய ர ழ இம் மூன்று மெய்களின் முன் மொழிக்கு முதலா மென்ற பத்து மெய்களும் வந்து மயங்கும்.

மொழிக்கு முதலாக வருமென்ற மெய்களாவன க ச த ந ப ம வ ய ஞ ங என்பன.

### உதாரணம்

| | |
|---|---|
| செய்கை, கொய்சகம், எய்து, செய்நர், செய்பு, வாய்மை, ஆய்வு, பாய்ஞமலி | யகரத்தின் முன் மொழி முதல் மெய்கள். |
| ஓர்க, வார்சிலை, சேர்தும், ஓர்நர், சார்பு, சீர்மை, ஆர்வம், போர் யானை, நேர்ஞெகிழி | ரகரத்தின் முன் மொழி முதல் மெய்கள். |
| சூழ்க, வீழ் சிலை, போழ்தல், வாழ்நன், வாழ்ப, கீழ்மை, தாழ்வு, வீழ் யானை, வாழ் ஞெண்டு | ழகரத்தின் முன் மொழி முதல் மெய்கள். |

ஙகரம் 'ஙனம்' என்பது தவிர பிறமொழிகளுக்கு முதலாகாமையின் இவற்றின் முன் உயிர்மெய்யாக வந்து மயங்குதற்கு உதாரணம் இல்லை. 'வெய்யன்' என யகரத்தின்முன் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாதலின் அது இங்குக் காட்டப்படவில்லை.

ந. சூ. ய ர ழ முன்னர் மொழிமுதன் மெய்வரும். ௫௧

**24.** லகர ளகர மெய்களின் முன் க ச ப வ ய இவ்வைந்து மெய்களும் வந்து இணையும்.

### உதாரணம்

| | |
|---|---|
| நல்கு, வல்சி, சால்பு, செல்வம், கொல் யானை<br>மீள்க, நீள்சிலை, கொள்ப, கேள்வி, வெள் யானை | ல ள முன் க ச ப வ ய |

ந. சூ. ல ள முன் கசப வயவொன் றும்மே. ௫௨

## உடனிலை மெய்ம்மயக்கம்

**25.** பதினெட்டு மெய்களுள் ரகர ழகரமல்லாத மற்றைப் பதினாறுமெய்களும் தம்முன் தாமே வந்து உடன் நின்று மயங்கும்.

'உடனிலை மயக்கமாவது தனக்கு முன் தான் உடனின்று மயங்குதல்' என்பது இங்கு விளக்கப்பட்டமை காண்க.

### உதாரணம்

| | |
|---|---|
| நோக்கு, இங்ஙனம், எச்சம், மஞ்ஞை, கூட்டு, எண்ணம், கூத்து, வெந்நீர், அப்பன், செம்மை, வெய்யன், புல்லியர், தெவ்வர், வெள்ளம், காற்று, அன்னை | பதினாறு மெய்களும் தம்முன் தாம் வந்து உடனின்று மயங்கின |

ந. சூ. ர ழ வல் லன தம்முற் றுமுட னிலையும். ௩௩

## தனிமெய்யுடனே தனிமெய்யாக மயங்குதல்

**26.** ய ர ழ என்னும் மூன்று மெய்களின் முன்னே க ச த ப ங ஞ ந ம எனும் இவ்வெட்டு மெய்களும், முன்னே கூறிய வண்ணம் உயிர் ஏறிய மெய்யாகி மயங்குதலே யன்றித் தாமும் மெய்யாக நின்று இரண்டு ஒற்றாகவும் மயங்கும்; இனி ரகர ழகர மெய்கள் மொழிக்கு உறுப்பாகத் தனிக் குற்றெழுத்தின் பின்னே வந்து மயங்கா.

### உதாரணம்

| | |
|---|---|
| காய்க்கும், பாய்ச்சு, தேய்த்தல், வாய்ப்பு, வேய்ங்குழல், தேய்ஞ்சது, காய்ந்த, மொய்ம்பு | யம் முன் ஈரொற்று. |
| தீர்க்கும், உணர்ச்சி, பேர்த்தல், கார்ப்பு, ஆர்ங்கோடு, கூர்ஞ்சிறை, சேர்ந்தன, ஈர்ம்பணை | ரம் முன் ஈரொற்று. |
| வாழ்க்கை, சூழ்ச்சி, வாழ்த்து, காழ்ப்பு, பாழ்ங்கேணி, பாழ்ஞ்சுனை, வாழ்ந்தனர், பாழ்ம்பதி | ழம் முன் ஈரொற்று. |

'மயங்கா' என்ற ஆகாதனவற்றிற் குதாரணம் காட்டலா காமை உணர்க.

ந. சூ. ய ர ழ வொற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றும்ரழத் தனிக்குறி லணையா. ௩௪

## செய்யுளில் ஈரொற்றாய் மயங்குவன

**27.** செய்யுளில் லகர ளகர மெய்கள் திரிந்ததனு லாகிய னகர ணகர மெய்களின் முன்னர் வருகின்ற மகர மெய்யானது (முன் கூறியவாறு) குறுகி, அம்மெய்களு டனே ஈரொற்றிணைந்த மயக்கமாகும்.

### உதாரணம்

திசையறி மீகானும் போன்ம்.
மயிலியல் மாதர் மருண்ம்.

'போலும்' என்பது போன்ம் எனவும், 'மருளும்' என்பது மருண்ம் எனவும் ஆயின. இவை செய்யுளில் இங்ஙனமாகும். எனவே முன்னே கூறிய மயக்கங்கள் செய்யுள் உரைநடை இரண்டிலும் வருவனவாமென்று உணர்க.

ந. சூ. லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாம் செய்யு ளுள்ளே. ௩௫

### பயிற்சி

1. ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் என்பவை யாவை? மும்மூன்று உதாரணம் காட்டுக.

2. க ங ச ஞ ட ண இவை பிறத்தற்கு வேண்டிய முயற்சி கள் யாவை?

3. லகர ளகர ழகரங்கள் எவ்வாறு பிறக்கும்?

4. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் பிறத்தற்குக் கூறப் பட்டுள்ள மூவகை முயற்சிகள் யாவை?

5. உடனிலை மெய்ம்மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இவற்றை உதாரணங் காட்டி விளக்குக.

6. 'ஐகாரம் ஔகாரம் இவை இரண்டுக்கும் தனித்தனி மாத்திரை இரண்டு'—இவ்வாக்கியத்திலுள்ள ஐகாரங்களுக்கும் ஔகாரத்துக்கும் மாத்திரை எவ்வளவு?

7. கீழ்க்காண்பவற்றிலுள்ள உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம், ஈரொற்றுமயக்கம் இவற்றை எடுத்துக் காட்டுக.

பங்கு, செங்கல், நெஞ்சு, அம்பு, அப்பன், அம்மை, சால்பு, செல்வம், காய்ச்சு, ஆர்த்தல், வீழ்த்தல், அச்சு, நாக்கு, பண்ணை, தண்ணீர், ஈர்க்கு, வாழ்ச்சி, பாழ்ங்கிணறு, ஈர்ங் கோதை, புணர்ச்சி, செந்நாய், வன்னல், விண்மீன், வெட்கம், வெல்லம்.

# II சொல்

## ஓரெழுத் தொருமொழி

**28.** எழுத்துக்கள் சொல்லாகும்பொழுது ஒரே எழுத்து நின்று ஒரு சொல்லாதலும் இரண்டெழுத்து நின்று ஒரு சொல்லாதலும் மூன்றெழுத்து முதல் பல வெழுத்துக்கள் நின்று ஒரு சொல்லாக வருதலும் ஆம். இவை, முறையே, 'ஓரெழுத்தொருமொழி', 'ஈரெழுத் தொரு மொழி', மூவெழுத்தொருமொழி' என்றிங்ஙனம் கூறப்படும்.

இவற்றுள், சிறப்புடைய ஓரெழுத்தொரு மொழிகள் நாற்பத்திரண்டு. அவை உயிர்வகையிலும் மவ்வகை யிலும் அவ்வாறும், த ப ந இவ்வகையில் அவ்வைந்தும், க வ ச இவ்வகையில் நந்நான்கும் யவ்வில் ஒன்றுமாக நாற்பது நெடிலும், 'நொ' 'து' இவ்விரண்டு குறிலும் ஆகும்.

நாற்பது நெடில்களாவன :—

| | | | |
|---|---|---|---|
| 1. | உயிர் வகை : | | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ. |
| 2. | ம | ,, | மா, மீ, மூ, மே, மை, மோ. |
| 3. | த | ,, | தா, தீ, தூ, தே, தை. |
| 4. | ப | ,, | பா, பூ, பே, பை, போ. |
| 5. | ந | ,, | நா, நீ, நே, நை, நோ. |
| 6. | க | ,, | கா, கூ, கை, கோ. |
| 7. | வ | ,, | வா, வீ, வை, வௌ. |
| 8. | ச | ,, | சா, சீ, சே, சோ. |
| 9. | ய | ,, | யா. |

இவை சிறப்புடையன வெனவே அ, இ, உ, எ, ஒ, ஔ, கௌ, சை, பீ எனச் சிறப்பில்லாதனவும் சில உள்ளன எனக் கொள்க.

ந. சூ. உயிர்மவி லாறுந் தபநவி லைந்தும்
கவசவில் நாலும் யவ்வி லொன்றும்
ஆகும் நெடில் நொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத்தியல் பதம் ஆறேழ் சிறப்பின. ௱௬

## இலக்கணை

**29.** இலக்கணை என்பது ஒருவகை ஆகுபெயரே. ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன் றைக் குறிப்பது இலக்கணை என்க.

இது வடமொழியில் 'லக்ஷணு' என வழங்கும். லக்ஷணு என்பது தமிழில் 'இலக்கணை' எனத் திரிந்து தற்பவ வடசொல்லாக வழங்கிவருகிறது.

இவ்விலக்கணையானது, விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை யென மூவகைப் படும்.

**30.** விட்ட விலக்கணை : ஒரு பொருளின் பெயர் அப்பொருளை விட்டு அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைக் குறிப்பது 'விட்ட இலக்கணை'யாம்.

(உ - ம்.) கங்கையின்கண் இடைச்சேரி.

இதனில் 'கங்கை' என்பது கங்கை நீரைக் குறிக்காது விட்டு அதனை யடுத்துள்ள கங்கைக் கரையைக் குறித்தல் காண்க.

**31.** விடாத விலக்கணை : ஒரு பொருளின் பெயர் அப்பொருளுக்கு இனமான பிற பொருளையும் விடாது தழுவிக்கொள்வது 'விடாத இலக்கணை'யாம்.

உ - ம். குற்றஞ் செய்தவன் தண்டிக்கப்படுவான்—இதனில், 'குற்றஞ் செய்தவன்' என்னும் ஆண்பாற் பெயர்

குற்றஞ் செய்தவன் குற்றஞ் செய்தவர் முதலிய மற்றைய பாலையும் விடாது தழுவிக் கொள்ளுதல் காண்க.

இது 'உபலட்சணம்' எனவுங் கூறப்படும்.

**82. விட்டும் விடாத விலக்கணை:** ஒரு வகையில் விட்டும் மற்றொரு வகையில் விடாதும் வருவது 'விட்டும் விடாத இலக்கணை'யாம்.

(உ - ம்.) எனக்கு உதவி செய்த நண்பர் இங்கே வருகிறார்.

இதனில் 'உதவி செய்தமை' முன்பே நிகழ்ந்தது என்னும் வகையில் விட்டதையும் 'வருதல்' இப்பொழுது நிகழ்கிறது என்னும் வகையில் விடாததையும் குறித்தல் காண்க.

இனி, யாவும் நிரம்பியிருத்தல் என்று பொருள்படும் 'நிரப்பு' என்னுஞ் சொல் ஒன்றுமில்லாமையாகிய வறுமை யெனவும், குற்றத்தை நீக்குதல் என்று பொருள்தரும் 'அழுக் கறுத்தல்' என்னுஞ்சொல் பெருங் குற்றமாகிய பொறாமைப் படுதலெனவும் இங்ஙனம் 'ஒரு சொல் தனக்கு எதிர்மறையான யான பொருளை உணர்த்துதலும் இலக்கணையாம். இது எதிர் மறை யிலக்கணை என்று கூறப்படும்.

## பயிற்சி

1. ஓரெழுத் தொருமொழி என்பது யாது?

2. உயிர், ம, ப, ந, க இவற்றில் ஒவ்வொரு வகையிலும் ஓரெழுத் தொருமொழிகளாக மும்மூன்று காட்டுக.

3. ஆ, மா, தீ, பூ, நீ, கை, வை, அ, இ, எ என்னும் இவற்றை ஓரேழுத் தொருமொழிகளாக வாக்கியங்களில் அமைத் துக் காட்டுக.

4. இலக்கணை என்பது தமிழில் என்ன பெயர் பெறும்?

5. விட்ட இலக்கணைக்கும் விடாத இலக்கணைக்கும் ஒவ் வொரு உதாரணம் தருக.

## பெயர்ச்சொல்

### விளிவேற்றுமையில் அமையும் விகாரங்கள்

**33.** விளியேற்கும் பெயர்களுள் உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்னும் இம் மூவகைப் பெயர்கட்கும் பொதுவாகவும் தனித்தனியே சிறப்பாகவும் விளிவேற்றுமை விகாரங்கள் அமையும். [பொதுப்பெயர்—உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான பெயர்.]

### மூவகைப் பெயர்க்கும் பொது விளியுருபு

**34.** உயர்திணைப்பெயர், பொதுப்பெயர், அஃறிணைப்பெயர் ஆகிய இம்மூவகைப் பெயர்க்கும் இயல்பாதலும் ஏகாரம் மிகுதலும் இகாரம் ஈகாரமாக நீளுதலும் பெரும்பான்மையாக வரும் விளியுருபுகளாம்.

உதாரணம்

| | |
|---|---|
| நம்பி கூறுய் ; மாதர் வாரீர்—இயல்பு<br>கோவே வருக ; மக்களே வெல்க—ஏ மிகல்<br>தம்பீ செல்க ; தோழீ வருக—இ நீளல் | உயர்திணைப் பெயர் |
| அன்னை தருக ; ஆண் கூறுய்—இயல்பு<br>பிதாவே வாராய் ; பெண்ணே பேசாய்—ஏ மிகல்<br>சாத்தீ செல்லாய் ; கொற்றீ வாராய்—இ நீளல் | பொதுப் பெயர் |
| மான் செல்க ; கிளி பேசுக—இயல்பு<br>மயிலே ஆடாய் ; குயிலே கூவாய்—ஏ நீளல்<br>மந்தீ கொடியாய் ; தும்பீ ஊதாய்—இ நீளல் | அஃறிணைப் பெயர் |

### ஐகாரவீற்றுப் பெயர்களின் விளியுருபு

**35.** ஐகாரவீற்றுப் பொதுப்பெயர்க்கு இயல்பும் ஏ மிகுதலுமன்றி ஐகாரம் 'ஆய்' ஆகவும் 'ஆ' ஆகவும் திரியும் ; மற்றை உயர்திணை அஃறிணைப் பெயர்கட்கு இயல்பும் ஏ மிகுதலுமின்றி ஐகாரம் 'ஆய்' ஆகத் திரியும்.

உதாரணம்

| மு. வே. | வி. வே. | |
|---|---|---|
| அன்னை | அன்னாய் | பொதுப்பெயர் |
| அம்மை | அம்மா | பொதுப்பெயர் |
| விடலை | விடலாய் | உயர்திணைப்பெயர் |
| நாரை | நாராய் | அஃறிணைப்பெயர். |

அன்னை—அன்னே, அம்மை—அம்மே எனச் சிறுபான்மை பொதுப் பெயரின் ஈற்று ஐகாரம் ஏகாரமாகத் திரிதலும் உண்டே கொள்க.

## ணகரவீற்று உயர்திணைப் பெயர்களின் விளியுருபு

86. சில னகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் இயல்பும் ஏகாரம் மிகுதலுமேயன்றி அளபெடுத்தலும், ஈறு கெடுதலும், ஈற்றயல் நீளுதலும், ஈற்றயல் நீண்டு ஈறு கெடுதலும், ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும், ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும், ஈற்று னகர மெய் யகரமெய்யாகத் திரிதலும், ஈற்று னகர மெய் யகர மெய்யாகத் திரிந்து அதன் அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகி ஏகாரம் மிகுதலும், ஈறுகெட்டு அதன் அயலில் நின்ற அகரம் ஏகரமாதலும் விளியுருபுகளாம்.

உதாரணம்

| மு. வே. | வி. வே. | |
|---|---|---|
| சேக்கிழான் | சேக்கிழாஅன் | —அளபெடுத்தது. |
| அன்பன் | அன்ப | —ஈறுகெட்டது. |
| நம்பன் | நம்பான் | —ஈற்றயல் நீண்டது. |
| அண்ணன் | அண்ணா | —ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டது. |
| ஐயன் | ஐயாவோ | —ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டு ஓகாரம் மிக்கது. |
| ஐயன் | ஐயவோ | —ஈறுகெட்டு ஓ மிகுந்தது. |
| கோயிலான் | கோயிலாய் | —ஈற்று னகரமெய் யகரமெய்யாயிற்று. |

| | | |
|---|---|---|
| வாயிலான் | வாயிலோயே | —இறுதி னகரம் யகரமாகி அதனயல் ஆ ஓ ஆ கி ஏ மிகுந்தது. |
| ஐயன் | ஐயே | —ஈறு கெட்டு அயலகரம் ஏகாரமாயிற்று. |

## ளகரவீற்று உயர் திணைப்பெயர்களின் விளியுருபு

**87.** சில ளகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்கட்கு (பொது விதியே யன்றி) அளபெடுத்தலும், ஈறு கெடுதலும், ஈற்றயல் நீளுதலும், ஈற்று ளகரமெய் யகரமெய்யாதலும், ஈற்றயலகரம் ஏகாரமாதலும் விளியுருபுகளாம்.

உதாரணம்

| மு. வே. | வி. வே. | |
|---|---|---|
| வேள் | வேஎள் | —அளபெடுத்தது. |
| எல்லாள் | எல்லா | —ஈறு கெட்டது. |
| மக்கள் | மக்காள் | —ஈற்றயல் நீண்டது. |
| குழையாள் | குழையாய் | —ளகரமெய் யகரமெய்யாயிற்று. |
| அடிகள் | அடிகேள் | —ஈற்றயல் அகரம் ஏகாரமாயிற்று. |

## ரகர வீற்று உயர்திணைப் பெயர்களின் விளியுருபு

**88.** சில ரகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்கட்கு (பொது விதியே யன்றி) அளபெடுத்தலும், ஈற்றயல் அகரம் இ ஈ யாதலும், ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும், சில ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகி ஏகாரமேற்றலும், ஈற்றில் ஏகாரம் மிகுந்து அயலில் 'யா' கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும், இறுதியில் 'ஈர்' அடைதலும் விளியுருபுகளாம்.

உதாரணம்

| மு. வே. | வி. வே. | |
|---|---|---|
| சிறார் | சிறாஅர் | —அளபெடுத்தது. |
| தெவ்வர் | தெவ்விர் | —ஈற்றயல் அகரம் இகரமாயிற்று. |

| | | |
|---|---|---|
| வணிகர் | வணிகீர் | —ஈற்றயல் அகரம் ஈகாரமாயிற்று. |
| சான்றார் | சான்றீர் | —ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயிற்று. |
| கணியார் | கணியீரே | —ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் மிக்கது. |
| நம்பியார் | நம்பீரே | —ஈற்றில் ஏகாரம் மிக்கு அயல் 'யா' கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாயிற்று. |
| நண்பர் | நண்பரீர் | —இறுதியில் 'ஈர்' ஏற்றது. |

## லகர யகர வீற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு

**39.** *சில லகர யகர மெய்யீற்று உயர்திணைப் பெயர் கட்கு (பொதுவிதியே யன்றி), முறையே, அளபெடுத் தலும் ஈற்றயல் நீளுதலும், அளபெடுத்தல் மாத்திரமும் விளியுருபுகளாம்.*

### உதாரணம்

| மு. வே. | வி. வே. | |
|---|---|---|
| மால் | மாஅல் | —அளபெடுத்தல். |
| மடவரல் | மடவரால் | —ஈற்றயல் நீட்சி. |
| சேய் | சேஎய் | —அளபெடுத்தல். |

தாஅய்', 'பேஎய்' என யகரவீற்றுப் பொதுப்பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் அளபெடுத்தல் விளியுருபாதலையும் ஈண்டே கொள்க.

## ணகர லகர ளகரவீற்று அஃறிணைப் பெயர் பொதுப் பெயர்களின் விளியுருபு

**40.** (பொது விதியேயன்றி) *சில ணகரவீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்கட்கும் லகர ளகர வீற்று அஃறிணைப்பெயர் பொதுப் பெயர்கட்கும், முறையே ஈறு கெடுதலும் ஈறுகெட்டயல் நீளலும், ஈற்றயல் நீட்சி மாத்திரமும் விளியுருபுகளாம்.*

உதாரணம்

| மு. வே. | வி. வே. | | |
|---|---|---|---|
| அலவன் | அலவ —ஈறு கெடுதல் | | அஃறிணைப் பெயர். |
| | அலவா —ஈறு கெட்டு அயல் நீளல் | | |
| சாத்தன் | சாத்த —ஈறு கெடுதல் | | பொதுப் பெயர். |
| | சாத்தா —ஈறு கெட்டயல் நீட்சி | | |
| முயல் | முயால் | ஈற்றயல் நீட்சி—அஃறிணைப் பெயர். | |
| கிளிகள் | கிளிகாள் | | |
| தூங்கல் | தூங்கால் | ஈற்றயல் நீட்சி—பொதுப்பெயர். | |
| பிள்ளைகள் | பிள்ளைகாள் | | |

## ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள்

**41.** ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், பலர் பாற் பெயர், ஒன்றன்பாற் பெயர், பலவின்பாற் பெயர் ஆகிய ஐம்பாற் பெயர்களுக்கும் உரிய விகுதிகளாவன அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், து, அ, இ என்பனவாம். மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் முதலியனவும் சிறுபான்மை ஐம்பாற் பெயர் விகுதிகளாக வரும்.

**42.** அவற்றுள்,

ஆண்பாற்பெயர் விகுதிகள் அன், ஆன், மன், மான், ன் என்பன.

(உ - ம்.) அறிஞன், உறையூரான், வடமன், கோமான், பிறன்.

பெண்பாற்பெயர் விகுதிகள் அள், ஆள், ள், இ என்பன.

(உ - ம்.) குழையன், தாமரையாள், பிறள், பொன்னி.

பலர்பாற்பெயர் விகுதிகள் அர், ஆர், மார், கள், ர் என்பன.

(உ - ம்.) நண்பர், பெரியார், தேவிமார், கோக்கள், பிறர்.

ஒன்றன்பாற்பெயர் விகுதி து என்பது.

(உ - ம்.) அது.

பலவின்பாற்பெயர் விகுதிகள் அ, வை, கள் என்பன.

(உ - ம்.) நல்லன, தீயவை, கிளிகள்.

மேலும், தை, பி, முன், அல் என்பன எந்தை, எம்பி, எம்முன், தோன்றல் என ஆண்பாலிலும், கை என்பது எங்கை யெனப் பெண்பாலிலும், வ் என்பது இவ் [இவ் - இவை] எனப் பலவின்பாலிலும் விகுதியாக வருதலும் பிறவுங் கொள்க.

## பயிற்சி

1. மூவகைப் பெயர்க்கும் பொதுவாக வரும் விளியுருபுகள் யாவை?

2. னகர வீற்றுப்பெயர்கள் விளியேற்கும்போது என்னென்ன உருபுகளை யடையும்? உதாரணம் காட்டுக.

3. அன்னை, அம்மை, விடலை, நாரை—இப்பெயர்கட்குச் சிறப்பாக அமையும் விளியுருபுகள் யாவை? அவ்வுருபுகளுடன் இவைகளை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

4. சான்றோர், நண்பர், அடிகள், மக்கள், மடவரல், பிள்ளைகள், முயல், சாத்தன் இச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சிறப்புடைய விளியுருபுகள் யாவை? உதாரணம் தருக.

5. ஐம்பாற்பெயர்கள் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் உரிய விகுதிகள் யாவை?

6. கீழ்க்காணும் பெயர்ச்சொற்களில் அமைந்துள்ள விகுதிகளைக் குறிக்க:

கவிஞன், கோமான், ஆரூரான், பண்டையன், இல்லான், பிறர், தம்பி, தோன்றல், எங்கை, அவ், குருக்கள், தோழிமார், அன்பர், சிறியர், இது, தீயன, நல்லவை, பிறன், எந்தை, மாடுகள், வடமன், வலையர், பெண்டிர், பகவன்.

## வினைச்சொல்

### ஐம்பால் வினைமுற்று

**43.** ஐம்பால் வினைமுற்று என்பன ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்துபாலிலும் வரும் வினைமுற்றுக்கள்.

**44.** ஆண்பால் வினைமுற்று: அன் ஆன் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய சொற்கள் உயர்திணை யாண்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

இவ்விதி தெரிநிலை வினைக்கும் குறிப்பு வினைக்கும் ஏற்கும். பின்வருவனவும் இங்ஙனமே.

உதாரணம்

| இறப்பு | நிகழ்வு | எதிர்வு | குறிப்பு | |
|---|---|---|---|---|
| வந்தனன் | வருகின்றனன் | வருவன் | குழையன் | —அன் விகுதி. |
| உண்டான் | உண்கின்றான் | உண்பான் | குழையான் | —ஆன் விகுதி. |

ந. சூ. அன் ஆன் இறுமொழி யாண்பாற் படர்க்கை. ௩எ

**45.** பெண்பால் வினைமுற்று: அள் ஆள் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய சொற்கள் உயர்திணைப் பெண்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உதாரணம்

| இ. கா. | நி. கா. | எ. கா. | குறிப்பு | |
|---|---|---|---|---|
| சென்றனள் | செல்கின்றனள் | செல்வள் | குழையள் | —அள் விகுதி. |
| கண்டாள் | காண்கின்றாள் | காண்பாள் | குழையாள் | —ஆள் விகுதி. |

ந. சூ. அள்ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை. ௩அ

**46.** பலர்பால் வினைமுற்று: அர் ஆர் ப மார் என்னும் நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய சொற்கள் உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உதாரணம்

| இ. கா. | நி. கா. | எ. கா. | குறிப்பு | |
|---|---|---|---|---|
| நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | குழையர் | - அர் விகுதி |
| நின்றார் | நிற்கின்றார் | நிற்பார் | குழையார் | - ஆர் ,, |
| நடப்ப | —— | நடப்ப | —— | - ப ,, |
| —— | —— | கொண்மார் | —— | - மார் ,, |

'உண்மார் வந்தனர்' என மார் விகுதிபெற்ற வினைமுற்று மற்றொரு வினைமுற்றோடு முடிந்தது. [உண்மார் - உண்பார்.] இவ்வாறு வருதல் சிறுபான்மை.

ந.சூ. அர்ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையொடு முடிமே. ரகக

47. ஒன்றன் பால் வினைமுற்று: து று டு என்னும் குற்றியலுகர வீற்று மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய வினைச்சொற்கள் அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம். இவற்றுள் டு என்னும் விகுதி குறிப்பு வினைமுற்றில் வரும்; தெரிநிலை வினை முற்றில் வராது.

உதாரணம்

| இ. கா. | நி. கா. | எ. கா. | குறிப்பு | |
|---|---|---|---|---|
| நடந்தது | நடக்கிறது | நடப்பது | குழையது | - து விகுதி |
| ஆயிற்று | —— | —— | குழையிற்று | - று ,, |
| —— | —— | —— | குண்டுகட்டு | - டு ,, |

று விகுதி நிகழ்கால எதிர்காலங்களுக்கு வராது. கட்டு-கண்ணையுடையது. குண்டு கட்டு-குண்டுகண்ணையுடையது.

ந. சூ. துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பின் ஆகும். ௪௦

48. பலவின்பால் வினைமுற்று: அ ஆ என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைச்சொற்கள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம். இவற்றுள் ஆ என்னும் விகுதி எதிர்மறையில் மாத்திரமே வரும்; உடன்பாட்டில் வராது.

### உதாரணம்

| இ. கா. | நி. கா. | எ. கா. | குறிப்பு | |
|---|---|---|---|---|
| பறந்தன | பறக்கின்றன | பறப்பன | குழையன | —அ விகுதி |
| பறவா | பறவா | பறவா | —— | —ஆ ,, |

ஆ விகுதி பெற்ற தெரிநிலை எதிர்மறை வினைமுற்று முக்காலத்துக்கும் பொதுவாக வந்தது.

**ந. சூ. அ ஆ வீற்ற பலவின் படர்க்கை**
**ஆவே எதிர்மறைக் கண்ண தாகும். சசு**

## முதல், சினை

**49.** முதல் என்பது முழுப் பொருள்; சினை யென்பது அம் முழுப்பொருளின் உறுப்பு. [வண்டி - முதற்பொருள்; அதனுடைய சக்கரம் அச்சு முதலியவை சினைப்பொருள்கள். மனிதன்—முதற்பொருள்; அவனுடைய கை கால் முதலியன சினைப்பொருள்கள்.]

## சினைவினையின் முடிபு

**50.** *சினைவினை வினையெச்சமா யிருப்பின், அது அச்சினையின் வினையோடு முடிதலேயன்றி அதன் முதலின் வினையோடும் முடியும்.*

அஃதாவது தன் முடிபு கொள்ளவேண்டிய வினை சினைவினையாயிருப்பின் பிறமுடிபும் கொள்ளும் என்க.

### உதாரணம்

| | | |
|---|---|---|
| 1. | கால் ஒடிந்து விழுந்தது.<br>சக்கரம் நொறுங்கிச் சாய்ந்தது.<br>கிளை முறிந்து தொங்கிற்று. | சினைவினை அச்சினையின் வினையொடு முடிந்தது. |
| 2. | கண்ணன் காலொடிந்து விழுந்தான்.<br>வண்டி சக்கரம் நொறுங்கிச் சாய்ந்தது.<br>கந்தன் வயிறு வீங்கிச் செத்தான். | சினைவினை அச்சினைக் குரிய முதலின் வினையோடு முடிந்தது. |

**ந. சூ. சினைவினை சினையொடும் முதலொடுஞ்**
**செறியும். சஉ**

## ஆக்கவினை

**51.** ஆக்கவினை யென்பது ஆதலாகிய ஆக்கத்தைக் கொண்ட குறிப்புவினை. அஃது அவ்வாக்கத்தைக் குறிக்குஞ் சொல் இல்லாமல் இயலாது. [ஆக்கம் - உளதாதல்.]

அஃதாவது, பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்கும் பொழுது அவ்வேற்றுமையுருபு விரிந்தேனும் மறைந்தேனும் நிற்பதுபோல ஆக்கவினைக்குறிப்புக்கு அவ்வாக்கச் சொல் விரிந்தாயினும் மறைந்தாயினும் உரிமையாய் நிற்கும்.

உதாரணம்

| | |
|---|---|
| கல்வியாற் பெரியன் ஆயினுன்<br>பகைவன் நல்லன் ஆயினுன் | ஆக்கச்சொல் விரிந்து நின்றது. |
| ஒழுக்கத்தாற் பெரியன்<br>இழுக்கத்தாற் சிறியன் | ஆக்கச்சொல் மறைந்துநின்றது—பெரியனுயினுன், சிறியனுயினுன் என விரித்துக்கொள்க. |

ந. சூ. ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா. சகூ

பயிற்சி

1. ஐம்பால் வினைமுற்றுக்கள் யாவை? அவை ஒவ்வொன்றுக்கும் உரிய விகுதிகளைக் கூறுக.

2. படித்தான், பாடினன், நடந்தார், உண்டனன், ஓடிற்று, குரைத்தன, தேடினுள், பேசுவர், கூறுப, வந்தது, பொருட்டு, வாணுதலாள், குழையன், பொருநன், பெரியர்—இவை ஒவ்வொன்றும் என்ன வினைமுற்று?

3. சினைவினை, முதல்வினை—இவற்றை விளக்குக.

4. வண்டி அச்சு முறிந்து விழுந்தது—இவ்வாக்கியத்தில் உள்ள முதல்வினை சினைவினைகள் யாவை? சினைவினை எவ்வாறு முடிகின்றது?

5. கால் இற்றது; சக்கரம் சுழன்றது—இவற்றிலுள்ள சினைவினைகளை வாக்கியங்களில் அமைத்து முதல் வினையோடு முடித்துக் காட்டுக.

6. கல்வியாற் கம்பன் பெரியன்; தீய பழக்கத்தாற் சாத்தன் சிறியன்; தம்பி இப்பொழுது நல்லன்—இவற்றிலுள்ள ஆக்கச்சொல்லை விரித்து வாக்கியங்களைப் படிக்க.

# இடைச்சொல்

## 'அந்தில்', 'ஆங்கு' எனும் இடைச்சொற்கள்

**52.** அந்தில் ஆங்கு இவ்விரண்டு சொற்களும் அசை நிலைப்பொருளிலும் இடப்பொருளிலும் வரும்.

### உதாரணம்

1. அந்திற் கழலினன் கச்சினன்—இதில், வேறு பொருளில்லாமையால், அசைநிலை.
2. வருமே சேயிழை அந்திற் கொழுநற் காணிய—இதில், அவ்விடம் என்னும் பொருளைத் தருதலால், இடம்.
3. ஆங்கத் திறனல்ல யாங்கழற—இதில், வேறு பொருள் இல்லாததனால், அசைநிலை.
4. ஆங்காங் காயினும் ஆக—இதில், அவ்விடம் என்னும் பொருளைத் தருதலால், இடம்.

ந. சூ. அந்திலாங் கசைநிலை இடப்பொரு ளவ்வே
சச

## 'மா' என்னும் இடைச்சொல்

**53.** மா வென்னும் சொல் வியங்கோள் வினையிடத்து வருகிற அசைச்சொல் ஆகும்.

(உ - ம்.) புற்கை யுண்கமா கொற்கை யோனே.—இதில் வியங்கோளை யடுத்து அசையாய் வந்தமை காண்க.

இனி, இவ்விடைச்சொல், 'ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே' என வேறு வினையை அடுத்து வருதலும் 'விசயமா தேவி' 'உறந்தைமா நகர், எனப் பெயர்களை யடுத்து இசை நிறையாக வருதலும் ஈண்டே கொள்க.

ந. சூ. மா வென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.
சரு

## முன்னிலை அசைச் சொற்கள்

**54.** மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் இப் பத்து இடைச்

சொற்களும் முன்னிலை யிடத்தில் வருகிற அசைச்சொற்களாம்.

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| கேண்மியா | — மியா. | நீ யொன்று பாடித்தை | —இத்தை. |
| காணிக | — இக. | கணிய வா வாழிய | —வாழிய. |
| மொழிமோ | — மோ. | தவிர்ந்தீக மாள | —மாள. |
| செல்மதி | — மதி. | சென்றீ பெரும | —ஈ. |

சொல்லியரத்தை— அத்தை. நீயேசெலவயர்ந்தியாழ—யாழ.

ந. சூ. மியாயிக மோமதி அத்தை இத்தை
வாழிய மாளஈ யாழமுன் னிலையசை. சக

# III பொது

## இடைப் பிற வரல்

**55.** இடைப் பிற வரல் என்பது தொடர்ந்து செல்லும் சொற்களினிடையிற் பிற சொற்கள் வருதல்.

வேற்றுமையுருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய இவற்றுக்கும் இவை கொண்டு முடியும் பெயர்ச்சொல் வினைச்சொற்களுக்கும் நடுவில் அவ்வவ்விடத்துக்குப் பொருந்துவனவாகிய வேறு சொற்கள் வருதலும் உண்டு.

உதாரணம்

1. (1) முருகன் வயிறார உண்டான்.
(2) வீட்டை அழகு பெறக் கட்டினான்.
(3) வாளால் மாய வெட்டினான்.
(4) பள்ளிக்குப் படிக்கச் சென்றான்.
(5) மலையினின்று உருண்டு விழுந்தான்.
(6) வேலனது வெள்ளிய ஆடை.
(7) சபையிற் சிறக்கப் பேசினான்.
(8) கண்ணா இங்கே விரைந்து வா.

} எட்டு வேற்றுமை யுருபுகள்.

2. வந்தான் தஞ்சை சென்ற கந்தன். —வினைமுற்று.
3. வெட்டிய மருதூர் வாய்க்கால். —பெயரெச்சம்.
4. படித்துத் தேர்வில் தேறினன். —வினையெச்சம்.

மேலேகாட்டிய உதாரணங்களுள் தடித்த எழுத்துள்ளவை இடைப்பிறவரல் என்பதைக் கண்டு கொள்க.

ந. சூ. உருபு முற்றீ ரெச்சம் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன. சஎ

## அறுவகை வினா

**56.** அறிதல், அறியாமை, ஐயுறல், கொள்ளுதல், கொடுத்தல், விளைவுதல் என்னும் அறுவகைப் பொருளை யும் தருதற்குரியனவாகிய வினாக்கள் ஆறுவகைப்படும். இவற்றைத் தவறாமற் மேற்கொள்ளுவர் அறிஞர்.

### உதாரணம்

1. ஆசிரியர் 'இச் செய்யுளுக்குப் பொருள் யாது?' எனல் அறிவினா.
2. மாணவன் 'இச் சூத்திரப் பொருள் யாது?' எனல் அறியா வினா.
3. 'அது பழுதையோ பாம்போ?' எனல் ஐய வினா.
4. 'வணிகரே, உழுந்து உளதோ?' எனல் கொளல் வினா.
5. 'உனக்குப் பணம் இல்லையோ?' எனல் கொடை வினா.
6. 'மைந்தா, இன்னும் உண்ண வில்லையா?' எனல் ஏவல் வினா.

[அறி வினா—தான் அறிந்த பொருளைப் பிறர் அறிந்துள்ளாரா எனத் தெரிதற் பொருட்டு அவரைக் கேட்பது. அறியா வினா—தான் அறியாத பொருளை அறிந்து கொள்ளும் பொருட்டுப் பிறரைக் கேட்பது. ஐய வினா—ஒன்றைப் பற்றித் தனக்குள்ள சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளப் பிறரைக் கேட்பது. கொளல் வினா—தான் ஒரு பொருளை வாங்கும் பொருட்டு அப்பொருள் இருத்தலைப் பற்றிப் பிறரைக் கேட்பது. கொடை வினா—தான் ஒரு பொருளைக் கொடுத்தற் பொருட்டு அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரைக் கேட்பது. ஏவல்

விஞ—தான் ஒரு செயலைச் செய்யுமாறு பிறரை ஏவுதற் பொருட்டு அச்செயலின் நிகழ்ச்சி பற்றி அவரைக் கேட்பது.]

ந. சூ. அறிவறியாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவல் தரும்விஞ ஆறும் இழுக்கார். சஅ

## எண்வகை விடை

**57.** சுட்டிக் கூறுதல், எதிர்மறுத்தல், உடன்படல், எதிராக ஏவுதல், எதிராக விஞவுதல், நேர்ந்ததைக் கூறுதல், இனி நேர்வதையுரைத்தல், இனமானதைச் சொல்லுதல் என விடை எட்டு வகைப்படும். இவற்றுள் இறுதியிலுள்ள ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருத லால் அவற்றையும் விடைகளென்று தழுவிக்கொள்வர்.

### உதாரணம்

1. 'உறந்தைக்கு வழி யாது?' என்ருல், 'இது' என்பது சுட்டு விடை.

2. 'பாடுவாயா?' என்ருல், 'பாடேன்' என்பது மறை விடை.

3. 'இது செய்வாயா? என்ருல், 'செய்வேன்' என்பது நேர் விடை.

4. 'இது செய்வாயா'? என்ருல், 'நீ செய்' என்பது ஏவல் விடை.

5. 'இது செய்வாயா?' என்ருல், 'செய்வேஞே' என்பது விஞ வெதிர் விஞதல் விடை.

6. 'இது செய்வாயா?' என்ருல், 'தலை வலிக்கிறது' என்பது உற்றதுரைத்தல் விடை.

7. 'இது செய்வாயா'? என்ருல், 'தலை வலிக்கும்' என் பது உறுவது கூறல் விடை.

8. 'இது செய்வாயா?' என்ருல், 'மற்றையது செய்வேன்' என்பது இனமொழி விடை.

இவற்றுள், முதல் மூன்றும் வெளிப்படை விடைகள்; மற் றைய ஐந்தும் எதிர்மறைப் பொருள்தரும் குறிப்பு விடைகள்.

ந. சூ. சுட்டு மறைநேர் ஏவல் விஞதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி யெனுமெண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையின் நேர்ப. சகூ

## அடைமொழி

**58.** அடைமொழி என்பது ஒரு சொல்லை அடுத்து அதற்கு முன்னே வருவது. அடுத்து வருவது அடை. அடைமொழியால் அணையப்படும் மொழி அடைகொளி எனப்படும். அடையைக் கொள்வது அடைகொளி. 'நெய்க் குடம்' என்னுந் தொடரில் 'நெய்' என்பது அடைமொழி; 'குடம்' என்பது அடைகொளி.

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும் அறுவகைப் பெயர்கள் அடைமொழியாக வர அவற்றால் அடுத்துவரப்பட்ட சொற்கள், செய்யுள் வழக்கு உரை நடை வழக்கு ஆகிய இருவழக்கினும், இனமுள்ளனவா யும் இனமில்லாதனவாயும் வரும்.

### உதாரணம்

[உரைநடை வழக்கில் வருவன]

**இனமுள்ளன**

| | |
|---|---|
| தயிர்க்குடம், பாற் குடம் | —பொருள். |
| உறையூர்ச் சேலை, பூவாளூர்ச் சேலை | —இடம். |
| கார்த்திகை விளக்கு, தை விளக்கு | —காலம் |
| பூ மரம், காய் மரம் | —சினை. |
| செந் தாமரை, வெண் டாமரை | —குணம். |
| ஊன்று கோல், தூண்டு கோல் | —தொழில். |

**இனமில்லாதன**

| | | | |
|---|---|---|---|
| உப் பளம் | —பொருள். | இலை மரம் | —சினை. |
| ஊர் மன்று | —இடம். | செம் போத்து | —குணம். |
| நாளரும்பு | —காலம். | தோய் தயிர் | —தொழில். |

உப்பில்லாத அளமும் ஊரில்லாத மன்றமும் நாளிலரும் பாத அரும்பும் இலையில்லாத மரமும் செந்நிற மில்லாத போத்தும் தோய்தலில்லாத தயிரும் எங்குமில்லையாதலால் இவை இன மில்லாதன வாயின. இவை 'இயற்கை யடைமொழி' எனவும் கூறப்படும்.

இனி, மேற்கூறிய 'தயிர்க் குடம்' முதலிய இனமுள்ளவற்றை அடை கொடாமற் 'குடம்' முதலியனவாகக் கூறின், குறித்த பொருள் விளங்காது பொதுவாய் நிற்குமாதலால் அடை கொடுத்துக் கூறுதலே மரபென்க.

[செய்யுள் வழக்கில் வருவன]

இன முள்ளவை

| | |
|---|---|
| பொருட் பெண்டிர் | —பொருள். |
| கான்யாறு | —இடம். |
| முந்நாட் பிறை | —காலம். |
| கலவ மாமயில் | —சினை. |
| பெரும்பழம் | —குணம். |
| ஆடரவு | —தொழில். |

இன மில்லாதவை

| | |
|---|---|
| பொற்கோட் டிமயம் | —பொருள். |
| வட வேங்கடம் | —இடம். |
| கார் நறுங்கொன்றை | —காலம். |
| சிறகர் வண்டு | —சினை. |
| செஞ் ஞாயிறு | —குணம். |
| முழங்கு கடல் | —தொழில். |

ந. சூ. பொருள்முத லாறும் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆமிரு வழக்கினும். ௬௦

## பொருள்கோள்

**59.** பொருள்கோள் என்பது செய்யுளின் பொருளைக் கொள்ளும் முறை. இது வடமொழியில் 'அந்வயம்' எனக் கூறப்படும்.

பொருள்கோள் எட்டு வகைப்படும். அவை யாற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிப்பாப்பு, கொண்டுகூட்டு, அடிமறி மாற்று என்பனவாம்.

## (1) யாற்றுநீர்ப் பொருள்கோள்

**60.** யாற்றுநீர்ப் பொருள்கோளாவது முன்னும் பின்னுந் திரும்பாது ஒரே முகமாக ஓடுகின்ற ஆற்றின் நீரோட்டம் போலச் சொற்கள் முன்பின்னாக மாறாமல் நேராகவே பொருள்கொள்ளுமாறு அமைவது.

### உதாரணம்

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

[சொல் - நெற்பயிர்; சூல் - கருப்பம்; தலைநிறுவி - தலையெடுப்பாக நின்று; இறைஞ்சி - வணங்கி.]

இச் செய்யுளில், சொல் என்னும் எழுவாயை முதலில் எடுத்து, அதன் செயலைக் குறிக்கும் இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் ஒன்றை யொன்று தழுவும்படி இடையிலே முறையாக வைத்து, காய்த்த என்னும் பயனிலையை இறுதியிலே நிறுத்தி முடித்துள்ளமை காண்க.

## (2) மொழிமாற்றுப் பொருள்கோள்

**61.** மொழிமாற்றுப் பொருள்கோளாவது ஓரடியில் உள்ள சொற்களை மாற்றிப் பொருள் கொள்ளுமாறு அமைவது.

அஃதாவது, ஓர் அடியினுள்ளே ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தத்தக்க சொற்களை ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனியே கூட்டிச் சொல்வது 'மொழி மாற்றுப் பொருள்கோள்' என்க.

### உதாரணம்

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

[வரை - மலை ; நீத்து - நீந்தத்தக்கது ; நிலை - கால் நிலைக் கத்தக்கது.]

இச் செய்யுளில், ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்பி என்பதை மிதப்ப என்னும் பயனிலைக்கும், மிதப்ப என்னும் பயனிலைக்கியைந்த சுரை என்பதை ஆழ என்னும் பயனிலைக்கும், நீத்து என்னும் பயனிலைக் கியைந்த முயல் என்பதை நிலை யென்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக் கியைந்த யானை யென்பதை நீத்து என்னும் பயனிலைக்குமாக அந்தந்த அடிக்குள்ளேயே மாற்றியமைத்துள்ளமை காண்க.

## (3) நிரனிறைப் பொருள்கோள்

**62.** நிரல்நிறைப் பொருள்கோளாவது வரிசை முறைப்படிப் பொருள்கொள்ளுமாறு சொற்களை நிறுத்துவது.

அஃதாவது, பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொண்டு முடியும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறுவேறாக வரிசைப்பட நிறுத்தி முறை முறையாகவேனும் எதிர் முறையாகவேனும் 'இதற்கு இது பயனிலை' என்பது பட அமையும் பொருள்கோள் 'நிரனிறைப் பொருள்கோள்' என்க. [நிரல் - வரிசை ; நிறை நிற்பது, நிறுத்தப்படுவது.]

எனவே, இது முறை நிரனிறைப் பொருள்கோளெனவும் எதிர் நிரனிறைப் பொருள்கோளெனவும் இருவகைப்படும் என்பதாயிற்று.

### உதாரணம்

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.
2. வான் முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
   தானுங் குழலும் தனிவீழ்ந்தாள்.

இவற்றுள், முன்னதில் 'அன்பு - பண்பு ; அறன் - பயன்' என முறை முறையாகப் பொருள்படுதலால், 'முறை நிரனிறை';

பின்னதில், 'முகில்போலக் குழலும் மின்போலத் தாளும்' என எதிர்முறையாகப் பொருள்படுதலால் 'எதிர் நிரனிறை'.

குறிப்பு :—நிரனிறை பற்றி இப்புத்தகம் ஐந்தாம் படிவப் பகுதியில் அணி என்னுந் தலைப்பில் விரிவாகக் கூறியுள்ளோம். விரிவுவேண்டின் ஆங்கே காண்க. நிரனிறை என்பது அணி யாகவும் பொருள்கோளாகவும் வழங்கும் என்பதும் உணர்க.

## (4) விற்பூட்டுப் பொருள்கோள்

**63.** விற்பூட்டுப் பொருள்கோளாவது இரு நுனிகளி லும் நாண் பூட்டப்படும் வில்லைப்போலச் செய்யுளின் முதன்மொழியும் இறுதிமொழியும் பொருளிற் பொருந்து வது.

அஃதாவது, செய்யுளின் முதலிலும் இறுதியிலும் நிற்கின்ற சொற்கள் தமக்குள்ளே பொருள் நோக்க முடையது 'விற்பூட்டுப் பொருள்கோள்' என்க.

விற்பூட்டு, பூட்டுவில் எனவும் கூறப்படும். [பூட்டு - பூட்டுதல்; விற்பூட்டு - வில்லை வளைத்து நாணைப் பூட்டு தல்.]

### உதாரணம்

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடிற் பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பன் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

இதனில், 'திறந்திடுமின் கதவு' எனச் செய்யுளின் முதற் சொல்லும் இறுதிச் சொல்லும் தம்முள் பொருள் நோக்க முடையனவாதல் காண்க.

## (5) தாப்பிசைப் பொருள்கோள்

**64.** தாப்பிசைப் பொருள்கோளாவது ஒரு சொல் நடுவில் நின்று, ஊஞ்சற் கயிறுபோல முன்னும் பின் னும் செல்லுமாறு அமைக்கப்படுவது.

அஃதாவது, செய்யுளின் நடுவில் நிற்கும் மொழி அதன் முதல் இறுதியாகிய மற்றை இரண்டிடத்திலும் சென்று பொருள் தருவது 'தாப்பிசைப் பொருள் கோள்' என்க. [தாம்பு - கயிறு; இசை - சொல். தாப்பிசை . ஊஞ்சற் கயிறு போல முன்னும் பின்னுஞ் செல்லும் சொல்.]

உதாரணம்

உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

இதனில், நடுவில் நின்ற 'ஊன்' என்னுஞ் சொல் 'ஊன் உண்ணாமை' என முன்னும் 'ஊன் உண்ண' எனப் பின்னும் சென்று பொருள் படுதல் காண்க.

குறிப்பு :—இப் பொருள்கோள் அணிகளில் 'இடை நிலை விளக்கணி'யும் ஆகும்.

## (6) அளைமறிப்பாப்புப் பொருள்கோள்

**65.** அளை மறிப் பாப்புப் பொருள் கோளாவது புற்றிலே தலை வைத்து உள்ளே உடல்மடங்கும் பாம்பு போலச் செய்யுளின் இறுதியிலிருந்து பொருள் கொள்ளு மாறு அமைக்கப்படுவது.

அஃதாவது, செய்யுளின் ஈற்றில் நின்ற சொற்கள் செய்யுளின் இடையிலும் அதன்பின் முதலிலும் சென்று இயைந்து பொருள் தருவது 'அளை மறிப் பாப்புப் பொருள்கோள்' என்க. [அளை - புற்று, மறிதல் - மடங்குதல், பாப்பு - பாம்பு.]

பாம்பு புற்றில் தலை வைத்து நுழையும் போது தலை உள்ளே போகாது மேலாக இருக்குமாறு உடலை வளைத்து நிலைமாறுதல் இயல்பு; அங்ஙனமே செய்யுளின் இறுதி யிலிருந்து சொற்களை யெடுத்துக் கூட்டிப் பொருள் கொள்வதாகும் இது.

உதாரணம்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்தும்
நெறிமுன்னி முயலாதாரே.

இதில், 'வாழ்ந்த பொழுதினே வானெய்தும் நெறிமுன்னி முயலாதார் தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார்; மூழ்ந்தபிணி நலிய முன்செய்த வினையென்றே முனிவார்; சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார்' எனக் கீழ்மேலாய் இறுதியிலிருந்து இடையிலும் முதலிலும் சென்று பொருள் இயைதல் காண்க.

## (7) கொண்டுகூட்டுப் பொருள்கோள்

**66.** கொண்டு கூட்டுப் பொருள்கோளாவது செய்யுளின் அடிகளிலுள்ள சொற்களுள் ஏற்றவற்றை எடுத்துப் பிற இடத்திற் கூட்டிப் பொருள்கொள்ளுமாறு அமைக்கப் பெறுவது.

அஃதாவது, செய்யுளின் அடிகள் பலவற்றிலும் அமைந்துள்ள சொற்களை எடுத்துப் பொருளுக்கு ஏற்ற வாறு மற்றைய இடத்திற் கூட்டுவது 'கொண்டு கூட்டுப் பொருள்கோள்' என்க. [கொண்டு கூட்டு-ஓரிடத்தினின்று எடுத்துப் பிற இடத்திற் கூட்டுதல்.]

உதாரணம்

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இதனில், 'வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் (கூந்தலையுடையாளது) மாமேனி (மேலுள்ள) தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண்(மையான) கோழி முட்டை(யை) உடைத்தன்ன பசலை தணிவாம்' எனக் கொண்டு கூட்டிப்பொருள் கொள்ளுமாறு சொற்கள் நோக்கப்பட்டிருத்தல் காண்க.

குறிப்பு :—மொழி மாற்றுப் பொருள்கோளும் கொண்டு கூட்டுப் பொருள்கோளும் மொழிகள் முன்பின்னாக மாற்றப் படுதலில் ஒப்புமையுடையனவேனும், ஓரடியிலுள்ள சொற்களை அவ்வடிக்குள்ளேயே முன்பின்னாக மாற்றுவது மொழிமாற்று எனவும் பல வடிகளிலும் அமைந்துநின்ற மொழிகளை எடுத்துப் பொருளுக்கேற்ப வெவ்வேறடிகளில் கூட்டுவது கொண்டு கூட்டெனவும் உணர்க.

## (8) அடிமறிமாற்றுப் பொருள்கோள்

67. அடி மறி மாற்றுப் பொருள்கோளாவது, மொழி மாற்றிலும் கொண்டு கூட்டிலும் சொற்கள் மாற்றிப் பொருள்கொள்ளப்படுதல் போலச் செய்யுளின் அடி களையே முன்பின்னாக மாற்றிப் பொருள் கொள்ளுமாறு அமைவது.

அஃதாவது, பொருளுக்கியையச் செய்யுளின் ஓரிடத்தினின்று எடுத்து வேறோரிடத்திற் கூட்டப்படும் அடிகளை யுடையனவும் யாதாயினும் ஓரடியை யெடுத்து அச்செய்யுளின் இறுதியிலேனும் நடுவிலேனும் முதலி லேனும் கூட்டினும் செய்யுளின் பொருளும் ஓசையும் மாறா அடிகளையுடையனவுமாக அமைக்கப்படுவது அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்க.

உதாரணம்

1. நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

இதனில், ‘கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்; விடுக்கும் வினையுலந்தக்கால் மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்; (இதனை யறியாதார்) நடுக்குற்றுத் தற் சேர்ந்தார் துன்பம் துடையார்’ என அடிகள் பொருளுக்கு ஏற்ப எடுத்து ஏற்ற இடத்திற் கூட்டுமாறு அமைந்திருத்தல் காண்க. இது ‘ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்று’ எனப் படும்.

2. மாறுக் கர்தலர் மலைமறந் தனரே
யாறுக் கட்பனி வரலா றுவே
வேறு மென்றேள் வளைநெகி ழும்மே
கூறும் தோழியான் வாழு மாறே.

இதனில், எந்த அடியை எடுத்து எங்கே கூட்டினும் செய்யுளின்பொருளும் ஓசையும் மாறுபடாவாறு அடிகள் அமைந்திருத்தல் காண்க. இது ‘பொருளிசைமாறு அடிமறி மாற்று’ எனப்படும்.

## பயிற்சி

1. இடைப் பிறவரல் என்பது யாது? உதாரணத்துடன் விளக்கமாகக் கூறுக.

2. தன் குழந்தையின் மழலைச் சொல்லைக் காதாரக்கேட்டு மகிழ்ந்தான் - இதில் இடைப்பிறவரலாக உள்ளவை யாவை?

3. அறிவினு, ஐயவினு, அறியாவினு, கொடைவினு இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணம் காட்டுக.

4. விடை எத்தனை வகைப்படும்? அவற்றுள் வெளிப்படை விடைகள் எவை? குறிப்பு விடைகள் எவை?

5. தஞ்சைக்கு வழி யாது? இதற்குச் சுட்டு விடை தருக.

6. உணவளிப்பாயா? இதற்கு ‘மறை’யாகவும் நேராகவும் விடை கூறுக.

7. பாடம் படித்தாயா?—இதற்கு உற்றது உரைத்தலாக வும் உறுவது கூறலாகவும் விடை கொடுக்க.

8. கீழ்க் காண்பனவற்றுள் இனமுள்ள அடை இனமில் லாத அடை இவற்றை எடுத்துக்காட்டுக:

(1) உப்பளம். (2) தயிர்க்குடம். (3) நானரும்பு. (4) சிறு பழம். (5) தென் குமரி. (6) வெண்டிங்கள். (7) ஆடு பாம்பு.

(8) பூ மரம். (9) செந்தாமரை. (10) வெண் பொங்கல். (11) சுடு சோறு. (12) தேமா.

9. பொருள்கோள் என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

10. கீழ் வருஞ் செய்யுட்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய பொருள்கோள் எது?—விளக்கிக் கூறுக:

(1) மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(2) ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு.

(3) உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

(4) மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கானெண்ணெய்விற்பான் வண்ணான்
பரும்புடைவை தப்பும் பறை.

(5) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(6) தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரே
றருளுடை யொருவன் நீக்க அப்பிணி யவிழ்ந்த தொத்
தான்.

(7) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

# IV புணர்ச்சி

## மெய்யீற்றில் இயல்பு

### மெய்ம்முன் உயிர்

**68.** நிலைமொழியின் இறுதியில் நின்ற மெய்யெழுத்தோடு வருமொழி முதலிலுள்ள உயிரெழுத்து வந்து கூடி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| பால் + அருந்து = பாலருந்து | வேற்றுமைப் புணர்ச்சி. | |
| பழம் + உண்ணு = பழமுண்ணு | | |
| வேல் + ஆயுதம் = வேலாயுதம் | அல்வழிப் புணர்ச்சி. | |
| புகழ் + அழியாது = புகழழியாது | | |

ந. சூ. உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே. ௫௧

### மெய்ம்முன்மெய்

#### ணகர னகர வீறு

**69.** ணகர னகர மெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாகும்; அல்வழிப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வரினும் இயல்பேயாகும்.

**உதாரணம்**

| | |
|---|---|
| மண் + மாட்சி = மண்மாட்சி | வேற்றுமையில் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாயின. |
| பொன் + மாட்சி = பொன்மாட்சி | |
| மண் + வன்மை = மண்வன்மை | |
| பொன் + வன்மை = பொன்வன்மை | |
| கண் + பெரிது = கண்பெரிது | அல்வழியில் மூவின மெய்களும் வர இயல்பாயின. |
| பொன் + பெரிது = பொன்பெரிது | |
| கண் + மாண்டது = கண்மாண்டது | |
| பொன் + மாண்டது = பொன்மாண்டது | |
| கண் + யாது = கண்யாது | |
| பொன் + யாது = பொன்யாது | |

## தேன்' என்பது

70. தேன் என்னும் சொல்லின் இறுதியிலுள்ள னகர மெய் மூவின மெய்களும் வரினும் இருவழியிலும் இயல் பாம்.

### உதாரணம்

| | | |
|---|---|---|
| தேன் + செம்மை | = தேன்செம்மை | வேற்றுமையில் மூவினமும் வர இயல்பாயிற்று. |
| தேன் + மாட்சி | = தேன்மாட்சி | |
| தேன் + யாப்பு | = தேன்யாப்பு | |
| தேன் + சிறந்தது | = தேன்சிறந்தது | அல்வழியில் மூவினமும் வர இயல்பாயிற்று. |
| தேன் + மலிந்தது | = தேன்மலிந்தது | |
| தேன் + யாது | = தேன்யாது | |

## யகர ரகர ழகர வீறு

71. யகர ரகர ழகர மெய்களின்முன் க ச த ப என்னும் மெய்கள்வரின் அல்வழியில் இயல்பாகும்.

### உதாரணம்

| | | |
|---|---|---|
| வேய் + கடிது | = வேய்கடிது | யகர வீற்றின் முன் க ச த ப இயல்பு. |
| வேய் + சிறிது | = வேய்சிறிது | |
| வேய் + தீது | = வேய்தீது | |
| வேய் + பெரிது | = வேய்பெரிது | |

வேர், வீழ் இவற்றின் முன்னும் இங்ஙனமே ஒட்டுக. இவை யெல்லாம் எழுவாய்த் தொடர்.

இகழ் + புகழ் = இகழ்புகழ்—உம்மைத்தொகையில் இயல்பு.
செய் + தொழில் = செய்தொழில்—வினைத்தொகையில் இயல்பு.

## லகர ளகர வீறு

72. லகர ளகர மெய்கள் வல்லினம் வரின் அல்வழி யில் இயல்பாம்; இடையினம் வரின் இரு வழியிலும் இயல்பாகும்.

### உதாரணம்

| | |
|---|---|
| கால் + குறிது = கால்குறிது<br>முள் + பெரிது = முள்பெரிது | ல ள அல்வழியில் வலி வர இயல்பு. |
| கால் + யாது = கால்யாது<br>முள் + வலிது = முள்வலிது<br>கல் + யானை = கல்யானை<br>தோள் + வலிமை = தோள்வலிமை | ல ள இரு வழியிலும் இடைவர இயல்பு. |

## எகரவினாவின் முன்னும் சுட்டின் முன்னும் நாற்கணம்

**73.** எகரவினாவிற்கும் அ இ உ என்னும் மூன்று சுட்டிற்கும் முன்னே உயிரும் யகரமும் வரின் வகரமெய்யும் பிறமெய்கள் வரின் அம்மெய்களும் மிகும்; செய்யுளிற் சுட்டெழுத்து நீண்டுவந்தால் யகரமெய் தோன்றும். இவையெல்லாம் இடைச்சொற்றொட ராதலால் அல்வழிப் புணர்ச்சி.

### உதாரணம்

| | |
|---|---|
| எ + அணி = எவ்வணி<br>எ + இடம் = எவ்விடம்<br>எ + யானை = எவ்யானை | எகர வினாமுன் உயிரும் யகரமும் வர வகரமெய் தோன்றியது. |
| அ + அரண் = அவ்வரண்<br>இ + இடம் = இவ்விடம்<br>உ + யானை = உவ்யானை | சுட்டின்முன் உயிரும் யகரமும் வர வகரமெய் தோன்றியது. |
| அ + குதிரை = அக்குதிரை<br>இ + மனை = இம்மனை<br>உ + விதம் = உவ்விதம் | சுட்டின்முன் மூவின மெய்களும் மிகுந்தன. |

ஆ + இடை = "ஆயிடை"—நீண்ட சுட்டின்முன் யகரம் தோன்றியது. [ஆயிடை - அவ்விடம்.]

ந. சூ. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே. ௭௨

## செய்யுளுக்கேற்ற சிறப்புவிதிகள் சில

### 'அது' முன் அன்று

**74.** 'அது' என்னும் சுட்டுப்பெயரின் முன்னே வருகின்ற 'அன்று' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றானது செய்யுளில் 'ஆன்று' என முதல் நீளும்.

(உ - ம்.) அது + அன்று = "அதான்று"

'அதன்று', 'அதுவன்று' என வருதலும் கண்டே கொள்க.

**ந. சூ. அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின். ௭௩**

### குறிலணைந்த ஆகாரம்

**75.** தனிக்குறிலின் முன்னே ஆகாரம் வரின் அவ்வாகாரம் அகரமாகக் குறுகுதலும், அதனோடு உகரம் பெறுதலும், அவ்விரண்டுமின்றித் தன்னியல்பிலே நிற்றலுமாகிய இம்மூன்று விதியும் செய்யுளில் ஆகும்.

குறியதன்கீழ் ஆவாக வருஞ் சொற்கள் நிலா, கனா, சுறா முதலியன.

உதாரணம்

"நிலவிரி கானல்"—குறியதன்கீழ்ஆக்குறுகிற்று.
என் செய்யுமோ நிலவு— ,, குறுகிஉகரமேற்றது.
"நிலா வணங்கு" ,, இயல்பாயிற்று.

செய்யுளில் இம்மூன்று விதிகளும் உளவாம் என்றதனால் உரைநடையில் இரண்டும் ஒன்றும் ஆமென்பது பெறப்பட்டது. குறுகி உகரமேலாது நிற்றல் உரைநடையில் இல்லை. 'நிலா', 'நிலவு', 'கனா', 'கனவு', 'சுறா-சுறவு' என்பன காண்க. கடா, மிடா முதலியன இயல்பாகவே நிற்கும்.

**ந. சூ. குறியதன் கீழாக் குறுகலும் அதனோ
டுகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின். ௭௪**

### 'அன்றி', 'இன்றி' என்பன

**76.** அன்றி, இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் இகரம், செய்யுளில், உகரமாகத்

திரிந்துவரின் வருமொழி முதலிலுள்ள வல்லினம் இயல் பாகும்.

உதாரணம்

1. "நாளன்றுபோகி........பதனன்றுபுக்கு"—'அன்றி' என்பது 'அன்று' எனத்திரிந்தவிடத்து வலி இயல்பாயின.

2. "உப்பின்று புற்கை யுண்க"—'இன்றி' என்பது 'இன்று' எனத்திரிந்தவிடத்து வலி இயல்பாயிற்று.

இகரம் உகரமாகத் திரியாவிடில், 'நாளன்றிப் போகி', 'உப்பின்றிப் புற்கை உண்க' எனப் பொதுவிதியால் வலி மிகுமெனக் கொள்க.

ந. சூ. அன்றி இன்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே. ௯௪

## செய்யும் எனும் வாய்பாட்டுச் சொல்

77. 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலும், செய்யுளிடத்து 'உம்' விகுதி 'உந்து' எனத் திரிதலும், 'செய்யும்' என்பது முற்றுயின் இறுதியிலுள்ள உயிரேனும் உயிர்மெய்யேனும் கெடுதலும் ஆகிய விதிகள் உள்ளன.

செய்யுளில் 'உம்' உந்தாம். எனவே மற்றைய விதிகள் உரைநடையிலும் செய்யுளிலும் ஏற்ற பெற்றி வருமெனக் கொள்க.

உதாரணம்

| | | |
|---|---|---|
| ஆகும் பொருள் | —ஆம்பொருள் | செய்யு மென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் உயிர்மெய் கெட்டது. |
| போகும் பொழுது | —போம்பொழுது | |
| தாவும் மரை | —தாமரை | |
| வாவும் புலி | —வாம்புலி | |

இவ்விதி செய்யுள் உரைநடை இரண்டுக்கும் கொள்க.

| | | |
|---|---|---|
| பாயும் | —"பாயுந்து" | செய்யுளிற் பெயரெச்சத்து 'உம்' 'உந்து' ஆயிற்று. |
| கூப்பெயர்க்கும் | —"கூப்பெயர்க்குந்து" | |

கலுழும் — "கலுழ்மே" } செய்யுளில் செய்யுமென்
போலும் — போல்ம் / — "போன்ம்" } முற்றின் உயிர் கெட்டது.

மொழியும் — "அவனொடு மொழிமே" } செய்யுளில் முற்றின்
முடியும் — "வினையொடு முடிமே" } உயிர்மெய் கெட்டது.
குறை போகும்—குறைபோம் } உரைநடையில் முற்றின் உயிர்
நலம் ஆகும் — நலம் ஆம் } மெய் கெட்டது.

நு. சூ. செய்யுமென் எச்சவிற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்முந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலு முளவே. ௬௬

## இரண்டாம் வேற்றுமைப் பெயர்

78. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாக வேண்டிய இடத்தில் விகாரப்பட்டு வருதலும் விகாரப்பட வேண்டிய இடத்தில் இயல்பாக வருதலும் உயர்திணைப் பெயரில் உருபு விரிந்தும் மறைந்தும் வருதலும் பொதுப் பெயரில் உருபு விரிந்தும் தொக்கும் வருதலும் அவைபோன்ற பிற வேறுபாடுகளும் உளவாகும்.

### உதாரணம்

*நின் + புறங் காப்ப = நிற் புறங்காப்ப*—"நின்னீறியல்பாம்" என்ற விதிப்படி இயல்பாக வேண்டிய இடத்தில் திரிதல் விகாரம் பெற்றது.

மண் + சுமந்தான் = மண் சுமந்தான்; பொன் + பெற்றான் = பொன் பெற்றான்—"ண ன வல்லினம் வரட்ட றவாகும்" என்னும் விதிப்படி விகாரப்பட வேண்டிய இடத்தில் இயல்பாயின.

நம்பியைக் கண்டான்—உயர்திணையில் உருபு விரிந்து நின்றது. ['நம்பி கண்டான்' எனக் கூறின் முதல் வேற்றுமையாகிவிடும்.]

பெரியோர்த்தொழுதான்; மகற் கண்டார்—உயர்திணையில் உருபு மறைந்து நின்றது; "உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம்" என்னும் விதிப்படி இயல்பாக

வேண்டிய இடத்தில் தோன்றலும் திரிதலுமாகிய விகாரங்கள் அடைந்தன.

சாத்தனைக் கொண்டுவா; ஆண்பெற்றாள்—பொதுப் பெயரிடத்தில் உருபு விரிந்தும் மறைந்தும் நின்றது.

தன் + கொண்டான் = தற்கொண்டான்—விகற்பித்து வர வேண்டிய இடத்தில் திரிந்தே வந்தது.

குறிப்பு :—'விறகு பிளந்தான்' என இயல்பில் இயல்பாகியும் 'பாக்குத்தின்றான்' என விகாரத்தில் விகாரமாகியும் வருதல் பெரும்பான்மை என வுணர்க.

ந. சூ. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்
அன்ன பிறவும் ஆகுமை யுருபே. ௫௭

## பயிற்சி

1. கீழ்க்காண்பவைகட்குப் புணர்ச்சி விதி கூறுக:

நீரோட்டம்; புகழுடம்பு; பாலூட்டு; தாலாட்டு; கண்வலி; பொன்மேனி; மண்வன்மை; தேன்சிறந்தது; வீழ்பெரிது; வேய்சிறிது; முள்கூரிது; அக்காலம்; இப்பொழுது; எவ்யானை; இவ்வணி; இவ்வாட்டம்; அம்மரம்; அதான்று.

2. கீழ்க்காண்பவை எவ்விதிபற்றி யமைந்தவை?

நிலா, நிலவு; புறா, புறவு; நாளன்றுபோகி; ஆயிடை; போம்பொழுது; செலவாம்; தாமரை; வாம்பரி; கலுழும்; முடிமே; கலி போம்; பொருளாம்;' தற்கொண்டாற் பேணி; மண் சுமந்து; பொன்கொடுத்து; பெற்றோர்த் தொழு; தம்பியைக் கண்டான்; பெண் பெற்றான்.

# V யாப்பு

## தளை

**79.** தளையாவது சீர்கள் ஒன்றோடொன்று சேரும் போது நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை கூடுங்கால் உளதாகும் இசைப் பிணிப்பாம். அது வெண்டளை, ஆசிரியத்தளை, கலித்தளை, வஞ்சித்தளை என நால்வகைப்படும்.

[தளை பற்றி இந்நூலின் ஐந்தாம் படிவப் பகுதியில் விளக்கமாகவும் விரிவாகவும் கூறியிருப்பதைக் காண்க.]

## சீர் பிரித்துத் தளைகூறுதல்

**80.** தளையை எளிதின் அறிந்துகொள்ளுதற்குச் செய்யுளடியின் சீர்களையும் சீரின் அசைகளையும் பிரித்து, நின்ற சீரின் வாய்பாட் டிறுதியசையோடு வருஞ்சீரின் முதலசையின் பெயரைப் பொருத்திக் கூறி, அதனால் உளதாகும் தளை இன்னதெனச் சொல்லிச் சொல்லிப் பழகுதல் வேண்டும்.

### உதாரணம்

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

அகர முதல—மாமுன் நிரை : இயற்சீர் வெண்டளை.
முதல வெழுத்தெல்லா—மாமுன் நிரை : இயற்சீர் வெண்டளை.
வெழுத்தெல்லா மாதி—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
மாதி பகவன்—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
பகவன் முதற்றே—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
முதற்றே யுலகு—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.

2. நின்றுபுயல் வானம் பொழிந்த நெடுந்தாரை
என்று மகில்கமழு மென்பரால்—தென்றல்
அலர்த்துங் கொடிமாடத் தாயிழையா ரம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.

நின்றுபுயல் வானம்—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
வானம் பொழிந்த—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
பொழிந்த நெடுந்தாரை—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
நெடுந்தாரை என்று—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
என்று மகில்கமழு—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
மகில்கமழு மென்பரால்—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
மென்பரால் தென்றல்—விளமுன்நேர் : இயற்சீர் வெண்டளை.
தென்றல் அலர்த்துங்—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
அலர்த்துங் கொடிமாடத்—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
கொடிமாடத் தாயிழையா—காய்முன்நேர் : வெண்சீர் வெண்டளை.
தாயிழையா ரைம்பால்—காய்முன்நேர் :வெண்சீர் வெண்டளை.
ரைம்பால் புலர்த்தும்—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
புலர்த்தும் புகைவான்—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
புகைவான் புகுந்து—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.

3. பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
யொருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.

பொன்னுந் துகிரும்—மாமுன்நிரை : இயற்சீர் வெண்டளை.
துகிரும் முத்தும்—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
முத்தும் மன்னிய—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
மாமலை பயந்த—விளமுன்நிரை :'நிரையொன்றாசிரியத்தளை.
பயந்த காமரு—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
காமரு மணியும்—விளமுன் நிரை : நிரையொன்றாசிரியத்தளை.
இடைபடச் சேய—விளமுன்நேர் இயற்சீர் வெண்டளை.
சேய வாயினுந்—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
வாயினுந் தொடைபுணர்ந்—விளமுன்நிரை : நிரையொன்றாசிரியத்தளை.
தருவிலை நன்கல—விளமுன்நேர் : இயற்சீர் வெண்டளை.
நன்கல மமைக்குங்—விளமுன்நிரை : நிரையொன்றாசிரியத்தளை.

மமைக்குங் காலே—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
யொருவழித் தோன்றியாங்—விளமுன்நேர் : இயற்சீர் வெண்டளை.
தோன்றியாங் கென்றுஞ்—விளமுன்நேர் : இயற்சீர்வெண்டளை.
கென்றுஞ் சான்றோர்—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
சான்றோர் பால—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
பால ராப—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
சாலார் சாலார்—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
சாலார் பாலரா—மாமுன்நேர் : நேரொன்றாசிரியத்தளை.
பாலரா குபவே—விளமுன்நிரை : நிரையொன்றாசிரியத்தளை.

குறிப்பு :—வெண்பா தவிர மற்றைய பாக்களில் ஒரு அடியின் இறுதிச் சீருக்கும் அடுத்த அடியின் முதற்சீருக்கு மிடையே யுள்ள தளையை நோக்க வேண்டுவதின்று.

## பயிற்சி

பின்னுள்ள செய்யுட்களுக்கு மேலே காட்டிய வண்ணம் அசை தோன்றுமாறு சீர்பிரித்துத் தளை கூறுக.

1. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.
2. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.
3. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரை தான்பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.
4. மீனுண் கொக்கின் தூவி யன்ன
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

## எதுகை மோனை வகைகள்

**81.** செய்யுளுறுப்புக்களில் தொடை என்பது ஒன்று. தொடையாவது எழுத்தும் சொல்லும் சீர்களிலும் அடிகளிலும் அழகுபெற அமையுமாறு தொடுக்கப்படுவதாம். [தொடை - தொடுப்பது.] இத் தொடை மோனை, எதுகை, முரண் முதலியனவாகப் பலவகைப்படும்.

### மோனை

**82.** மோனை என்பது செய்யுளின் அடிகளிலாவது அடிகளின் சீர்களிலாவது முதலெழுத்து ஒன்றுபட்டு வருதல். [மோனை - முதல்]

அவ்வாறு ஒன்றுபடுங்கால் ஒரு எழுத்துத் தானே பின்னும் வந்து ஒன்றுபடுதலும், அதற்குக் கிளையெழுத்து வர அக்கிளையெழுக்தோடு ஒன்றுபடுதலும் ஆம். [கிளை - பிறப்பு முதலியவற்றால் உளதாகும் தொடர்பு.]

கிளையெழுத்துக்களாவன :—

1. அ ஆ ஐ ஔ
2. இ ஈ எ ஏ ய
3. உ ஊ ஒ ஓ
4. ஞ ந
5. ம வ
6. த ச

கிளையெழுத்துக்கள் இன்னவை என நினைவூட்டுதற் குரிய வெண்பா :

அகரமோ டாகாரம் ஐகாரம் ஔகான்
இகரமோ டீகாரம் எஏ—உகரமோ
டூகாரம் ஒ ஓ ஞ ந ம வ த ச் ச கரம்
ஆகாத அல்ல அனு.

இவ்வறுவகையுள் ஒவ்வொரு வகையிலுமுள்ள எழுத்துக் கள் ஒன்றுக்கொன்று கிளையெழுத்தாகுமாதலின் மோனையாம் திற்றற்கு உரியனவாயின.

83. மோனை, பலவகைப்படுமாயினும் அவற்றுள் இன்றியமையாது அறியவேண்டுவன சீர்மோனை, அடி மோனை, முற்றுமோனை என்பனவாம்.

## சீர்மோனை

84. சீர்மோனையாவது அடியின் சீர்களில் அமைந்திருக்கும் மோனை.

### உதாரணம்

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முலைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

இச்செய்யுளுள் முதலடியின் முதற்சீரிலுள்ள 'கை' என்பதற்கு மூன்றாஞ்சீரிலுள்ள 'க' என்பது மோனை. இரண்டாமடியின் முதற்சீரிலுள்ள 'த' என்பதற்கு மூன்றாஞ்சீரிலுள்ள 'தா' மோனை; மூன்றாமடியின் முதற்சீரிலுள்ள 'மு' என்பதற்கு மூன்றாஞ்சீரிலுள்ள 'மு' மோனை; நான்காமடியின் முதற் சீரிலுள்ள 'வி' என்பதற்கு இறுதிச் சீரிலுள்ள 'மெ' மோனை. இவற்றுள், மூன்றாமடியில் மாத்திரம் முதலில் வந்த எழுத்தே மீண்டும் வந்து மோனையாயிற்று; மற்றைய அடிகளிலெல்லாம் கிளையெழுத்துக்கள் வந்து மோனையாயின. ஆகவே, இங்ஙனம் சீர்களில் மோனை அமைதல் 'சீர்மோனை' என்க.

## அடிமோனை

85. அடிமோனையாவது செய்யுளின் அடிகளில் அமைந்திருக்கும் மோனை.

### உதாரணம்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

இச்செய்யுளின் முதலடியில் முதலிலுள்ள 'செ' என்பதற்கு இரண்டாமடியின் முதலிலுள்ள 'செ' மோனையாயிற்று. ஆகவே, இங்ஙனம் அடிகளின் முதலில் மோனையமைதல் 'அடிமோனை' என்க.

## முற்றுமோனை

86. முற்றுமோனையாவது ஒரு அடியிலுள்ள சீர்கள் முழுதிலும் அமைந்திருக்கும் மோனை.

### உதாரணம்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

இச்செய்யுளில் முதலடியிலுள்ள சீர்களெல்லாம் மோனை பெற்று வந்தன. எனவே, இங்ஙனம் ஓர் அடியிலுள்ள சீர்கள் முற்றிலும் மோனை அமைதல் முற்று மோனை என்க.

குறிப்பு :—ஒரு அடியின் முதற் சீரின் முதலெழுத்தோடு மற்றைய சீர்களின் முதலெழுத்துக்கள் ஒன்றுபட்டு வந்தால் மாத்திரம் அவ்வடி மோனையுள்ளதாகக் கருதப்படும்.

## எதுகை

87. எதுகை யென்பது செய்யுளின் அடிகளிலாவது அடிகளின் சீர்களிலாவது முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டா மெழுத்து ஒன்றுபட்டு நிற்றல். அளவு - மாத்திரை ; எதுகை - பொருத்தம்.

எதுகையும் பலவகைப்படுமேனும், அவற்றுள் இன்றியமையாது அறியவேண்டுவன சீரெதுகையும் அடியெதுகையுமே.

## சீரெதுகை

88. சீரெதுகையாவது அடியின் சீர்களில் அமைந்திருக்கும் எதுகை.

### உதாரணம்

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

இச் செய்யுளில் முதலடியில் மூன்றுஞ் சீர் தவிர மற்றைய சீர்களின் இரண்டாமெழுத்தாகிய 'ழு' என்பது ஒன்றுபட்டு வர எதுகை உளதாயிற்று. ஆகவே இங்ஙனம் சீர்களில் எதுகை யமைதல் 'சீரெதுகை' யென்க.

## அடியெதுகை

**89.** அடியெதுகையாவது செய்யுளின் அடிகளில் அமைந்திருக்கும் எதுகை.

### உதாரணம்

1. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

இச்செய்யுளில் முதலிரண்டடிகளின் முதற்சீரின் இரண்டா மெழுத்தாக மகரவொற்றும் இறுதியிரண்டடிகளின் முதற்சீரின் இரண்டாமெழுத்தாக றகரவொற்றும் வர எதுகைகள் உளவாயின. இதனில் முன்னிரண்டடி ஒரு எதுகையும் பின்னிரண்டடி மற்றொரு எதுகையுமாக அமைந்தன.

2. உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

இச்செய்யுளில் நான்கடிகளிலும் முதற்சீரின் இரண்டா மெழுத்தாக 'ல'கரம் வர எதுகை உளதாயிற்று. இதனில் நான் கடிகளும் ஒரே யெதுகையாக அமைந்தன. எனவே, இங்ஙனம் அடிகளில் எதுகையமைதல் 'அடியெதுகை' என்க.

குறிப்பு :—செய்யுளில் மோனை எதுகைகளை நோக்கும் போது, பெரும்பாலும், *சீர்மோனையும்* அடியெதுகையுமே மோனை எதுகைகளாகக் கருதப்படும்.

### பயிற்சி

1. எதுகை மோனைகள் இன்னவையென விளக்குக.
2. 'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.'

இதிலமைந்துள்ள எதுகை மோனைகளின் சிறப்பை எடுத்துக் காட்டுக.

3. கீழ்வருஞ் செய்யுளிற் பொதுவாகவுள்ள எதுகை மோனைகளையும் சிறப்பாகவமைந்துள்ள முற்று மோனையையும் விளக்கிக் காட்டுக :

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்.

4. கீழ்க்காணுஞ் செய்யுளிலமைந்துள்ள ‘சீர்மோனை’ களையும் ‘அடியெதுகை’யையும் குறிப்பிடுக.

இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா !

## கலித்துறை

**90.** நால்வகைப் பாக்களுள் ஒவ்வொன்றுக்கும் தாழிசை துறை விருத்தம் என மும்மூன்று இனம் உண்டு என்பது ஐந்தாம் படிவப் பகுதியிலேயே குறிக்கப்பட்டது. பாவினத்தில் கலித்துறை என்பது கலிப்பாவின் இனமாகும். அது ஒரே எதுகையாகவுள்ள நெடிலடி நான்கு கொண்டது.

## கட்டளைக் கலித்துறை

**91.** கட்டளைக் கலித்துறை யென்பது கலித்துறையில் ஒரு வகை. அது ஒவ்வொரு அடிக்கும் இத்தனை இத்தனை யெழுத்து அமையவேண்டுமென எழுத்தளவு பெறுதலால் ‘கட்டளைக் கலித்துறை’ எனப் பெயர் பெற்றது. [கட்டளை - அளவு.]

கட்டளைக் கலித்துறை அமைப்புப்பற்றி அறிய வேண்டுவ்ன அடி, சீர், தளை, முடிபு, மோனை, எதுகை என்பனவாம். அவை வருமாறு :—

அடி : அடிகள் நான்கு ; நான்கும் நெடிலடிகள்.

சீர் : மாச்சீர் விளச்சீர்களும் காய்ச்சீரும் ; ஒவ்வொரு அடியிலும் இறுதிச் சீராகிய ஐந்தாஞ்சீர் காய்ச்சீராக இருத்தல் வேண்டும் ; விளங்காய்ச்சீர் இடையில் வருதலில்லை.

தளை : வெண்டளை - இருவகை வெண்டளைகள்.

முடிபு : இறுதி 'ஏ' காரத்தால் முடிதல்.

மோனை : மூன்றாஞ் சீரிலும் ஐந்தாஞ் சீரிலும் மோனை அமைதல் சிறப்பு.

எதுகை : அடியெதுகை—நான்கடிகளும் ஒரே எதுகை.

குறிப்பு :—கட்டளைக் கலித்துறையில் நேரசை முதலாகத் தொடங்கும் அடிக்கு எழுத்துப் பதினாறு ; நிரையசை முதலாகத் தொடங்கும் அடிக்கு எழுத்துப் பதினேழு. எழுத்துக்களைக் கணக்கிடுங்கால் ஒற்று நீக்கியே கணக்கிடுதல் வேண்டும். கட்டளைக் கலித்துறையில் ஒரு அடியின் இறுதிச் சீரோடு அடுத்த அடியின் முதற்சீருக்குள்ள தளையை நோக்க வேண்டுவதில்லை.

## உதாரணம்

1. உற்றா னலன்றவந் தீயினின் றானலன் ஊண்புனலா
அற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே.

இஃது நேரசை முதலாகத் தொடங்கும் கட்டளைக் கலித்துறையாகலின் ஒவ்வோரடிக்கும் பதினாறெழுத்துக்கள் உளவாயின.

இதனில், மூன்றாமடியின் இறுதிச் சீராகிய 'துன்பில் பதம்' என்பது கனிச்சீராக இருத்தலின் இதிலுள்ள லகரவொற்றை நீக்கிக் காய்ச்சீராகக் கொள்க.

2. குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்

இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்ருல்
மனித்த பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

இஃது நிரையசை முதலாகத் தொடங்கும் கட்டளைக் கலித் துறையாகலின் ஒவ்வோரடிக்கும் பதினேழு எழுத்துக்கள் உள வாயின.

இதனில், இரண்டாமடியின் இறுதிச்சீராகிய 'பால்வெண் ணீறும்' என்பதும் மூன்ருமடியின் இறுதிச்சீராகிய 'காணப் பெற்ருல்' என்பதும் நாலசைச்சீர்களாயிருத்தலின், இவை களில், முறையே, ணகரவொற்றையும் பகரவொற்றையும் நீக்கிக் கூவிளங்காய்ச் சீர்களாகக் கொள்க.

## தாழிசை

**92.** தாழிசை என்பது தரவு தாழிசை முதலியன வாக வரும் கலிப்பாவின் உறுப்புக்களில் இரண்டாவ தாகும். தாழம்பட்ட இசையையுடையதாகலின் 'தாழிசை' எனப்பட்டது. [தாழம் - தாழ்ச்சி, தாமதம், மந்தம்.] இது அடிகளால் தரவினின்று தொகை குறைந்து வரும்.

தாழிசைக்குரிய அடி சீர் முதலியன வருமாறு :—

அடி : அளவடி ; இரண்டேனும் மூன்றேனும் நான்கேனும் அமையும்.

சீர் : காய்ச்சீர் ; பெரும்பகுதியும் புளிமாங் காய்ச் சீரும் கருவிளங்காய்ச் சீரும் அமைந்திருக்கும்.

தளை : கலித்தளை ; சிறுபான்மை வெண்டளையும் விரவி வரும்.

எதுகை மோனைகள் ஏற்ற பெற்றி யமையும்.

## உதாரணம்

### ஈரடித்தாழிசை

[தமிழ்ச்சிறப்பு]

1. கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே.
2. ஒருபிழைக்கா அரனார்முன் னுரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைகுவதுமற் புதமாமே.
3. சதுமறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமே.
4. வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே.
5. கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தி லொருபிரதி கருதினதே.
6. தக்கவழி விரிந்திலங்குஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே.
7. வடமொழிதென் மொழியெனவே வந்தவிரு மொழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற் குணராரே.
8. வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியாநல்
கூறுவட மொழிவலமாகக் கொள்வர்குண திசையறியார்.
9. கலைமகடன் பூர்வதிசை காணுங்கா லவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார்.
10. பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே.
11. வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி. [கள்
12. மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.

மூவடி நாலடித் தாழிசைகள் வந்துழிக் காண்க.

### பயிற்சி

1. 'கட்டளைக் கலித்துறை' என்பதன் பெயர்க் காரணத்தை நன்கு விளக்குக.

2. கீழ்வருஞ் செய்யுட்களி லமைந்துள்ள கட்டளைக் கலித்துறை இலக்கணத்தை எடுத்துக் காட்டுக.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதரும் நாவர சாய பெருந்தகையோய்
கள்ளைக் குவளை யுமிழ்விழி மிழலையிற் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளன் கையிலென் வாங்கினையே.

3. தாழிசை என்பது யாது? அதன் இலக்கணத்தை விளக்கமாகக் கூறுக.

## பாவினங்கள்

98. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா வெனப் பாக்கள் நால்வகைப்படும். அவை ஒவ்வொன்றுக்கும் தாழிசை, துறை, விருத்தம் என மும்மூன்று இனம் உண்டு. இவற்றுள், வெண்பாவின் இனம் வெண்டாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம் என்பன; ஆசிரியப்பாவின் இனம் ஆசிரியத்தாழிசை, ஆசிரியத் துறை, ஆசிரியவிருத்தம் எனபன; கலிப்பாவின் இனம் கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்பன; வஞ்சிப்பாவின் இனம் வஞ்சித்தாழிசை, வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம் என்பன.

இப் பாவினங்கள் பொதுவாகச் சீர் அடி முதலியவற்றில் தத்தமக்குரிய பாவை ஒருவகையில் ஒத்துச் சில பல வேறுபாடுகள் உடையனவாய் அருகி வழங்கும். பாவினங்களுள் மிகுதியும் பயின்று வருவதாகிய ஆசிரிய விருத்தம் பற்றி இந்நூல் ஐந்தாம் படிவப் பகுதியிலும் கட்டளைக் கலித்துறை பற்றி இவ் வாறும் படிவப் பகுதியிலும் முன்னரே விளக்கிக் கூறியுள்ளோம். மற்றைய பாவினங்கள் பற்றிய விவரத்தை வேண்டும்போது பின்னர் அறிந்து கொள்ளலாம்.

# VI அணி

## பிறிது மொழிதல்

**94.** பிறிது மொழித லணியாவது கருதிய பொருளைக் கூறுது அதனைப் புலப்படுத்தற் கேற்ற வேறொரு பொருளை மொழிதல். அஃதாவது பொருளை அறிந்துகொள்ளுமாறு உவமையை மாத்திரம் கூறுதல்.

உதாரணம்

1. துள்ளின மாடு பொதி சுமக்கும்
2. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
   சால மிகுத்துப் பெயின்.

இவற்றுள், முன்னதால் 'குறும்பு செய்பவன் அடக்கப் படுவான்' என்பதும், பின்னதால் 'எளியார் பலர் கூடி எதிர்ப்பின் அவர்களால் வலியாரும் அழிவர்' என்பதும் அறியப் படுதல் காண்க.

## கருத்துடை யடைமொழி

**95.** கருத்துடை யடைமொழி யணியாவது ஒரு கருத்தை வலியுறுத்தற் கேற்ற அடைமொழியைச் சார்த் திக் கூறுதல்.

உதாரணம்

1. நான்கு கைகளையுடைய திருமால் அறம் பொருள் இன் பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் தருவான்.

2. மூன்று பகுதியர்கவுள்ள திருக்குறள் அறம் பொருள் இன்பமாகிய மூன்று பொருளையும் கூறும்.

இவற்றுள், 'நான்கு' 'மூன்று' எனும் அடைமொழிகள், முறையே, நாற்பொருளையும் முப்பொருளையும் கருதியமைந் துள்ளமை காண்க.

பயிற்சி

1. *கீழ்க்காண்பவற்றிலுள்ள அணிகள் யாவை? விளக்கிக் காட்டுக.*

(1) குரைக்கிற நாய் கடிக்காது.

(2) புலி பசித்தாலும் புல்லைத் தின்னது.
(3) ஒலித்தக்கா லென்றும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.
(4) ஐங்கரங்களையுடைய விநாயகன் ஐந்திலக்கணத்
தையும் அறிவுறுத்துவான்.

2. பிறிதுமொழித லணிக்கும் கருத்துடை யடைமொழி யணிக்கும் உரைநடையில் இரண்டிரண் டுதாரணம் தருக.

# VII பொருள்

96. பொருள் அகப்பொருளெனவும் புறப்பொருளெனவும் இருவகைப்படுதலை ஐந்தாம்படிவப் பகுதியிற் கூறியுள்ளோம்.

அகப்பொருளாவது ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் புறத்தார்க்குப் புலனாகாது உள்ளத்துணர்வாலேயே நுகரும் வாழ்க்கையின்பம். புறப்பொருளாவது மேற்கூறிய ஒத்த அன்பினராலேயே யன்றி யாவராலும் அறிந்தனுபவிக்கப்பட்டு 'இது இவ்வாறிருந்தது' எனப் புறத்தார்க்குக் கூறப்படும் அறமும் பொருளும்.

## அகப்பொருள்

97. அகப்பொருள் கைக்கிளைத்திணை, ஐந்திணை, பெருந்திணை என்னும் ஏழு பெரும்பிரிவுகளையுடையது. [திணை—ஒழுக்கம்; ஒழுக்கம் பற்றிய பிரிவு.] இவற்றுள், கைக்கிளை யென்பது ஒருவர்பால் நிகழும் காமம் பற்றியது. பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம் பற்றியது. ஐந்திணை யென்பது அன்புடைக் காமம் பற்றியது. "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" எனச் சிறப்பித்துக் கூறப்படுவது. எனவே, அகப்பொருளில் ஐந்திணையே சிறப்புடையதென்க. ஐந்திணையாவன குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

ஐந்திணை பற்றிய விவரம், சிறப்பியல்பு கருதி, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்று வகையால் உணர்த்தப்படும்.

## முதற்பொருள்

98. முதற்பொருள் என்பன முதன்மையான பொருள்கள்; அஃதாவது நிலையாகவுள்ள பொருள்கள். அவை நிலமும் பொழுதும் ஆம்.

நிலம்: குறிஞ்சிக்கு மலையும் மலைசார்ந்த இடமும், பாலைக்குச் சுரமும் சுரஞ்சார்ந்த இடமும், முல்லைக்குக் காடும் காடுசார்ந்த இடமும், மருதத்துக்கு நாடும் நாடு சார்ந்த இடமும், நெய்தலுக்குக் கடலும் கடல்சார்ந்த இடமும் நிலமாகும்.

பொழுது: பெரும் பொழுதெனவும் சிறுபொழுதெனவும் பொழுது இருவகைப்படும். பெரும்பொழுது ஒரு ஆண்டைப் பற்றியது; சிறுபொழுது ஒரு நாளைப் பற்றியது.

பெரும்பொழுதென்பன அறுவகைப் பருவங்கள். பன்னிரண்டு மாதங்களுள் சித்திரையும் வைகாசியும் இள வேனிற் பருவம்; ஆனியும் ஆடியும் முதுவேனிற் பருவம்; ஆவணியும் புரட்டாசியும் கார்ப்பருவம்; ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்ப்பருவம்; மார்கழியும் தையும் முன்பனிப் பருவம்; மாசியும் பங்குனியும் பின் பனிப்பருவம்.

சிறுபொழுதென்பன ஒரு நாளிலுள்ள ஆறு பிரிவுகள். அவை காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பன; இவை சூரியோதய காலமுதல் ஒவ்வொன்றும் பப்பத்து நாழிகையாக முறையே அமையும். [எற்பாடு - சூரியன் சாய்தல்; எல் - சூரியன்; பாடு - படுதல், சாய்தல்.]

இப் பொழுதுகளுள், குறிஞ்சிக்குக் கூதிரும் முன் பனியும், பாலைக்கு இருவகை வேனிலும், முல்லைக்குக்

காரும், மருதத்துக்கும் நெய்தலுக்கும் ஆறுபருவமும் உரிய பெரும் பொழுதுகளாம். குறிஞ்சிக்கு யாமமும், பாலைக்கு நண்பகலும், முல்லைக்கு மாலையும், மருதத் துக்கு வைகறை காலைகளும், நெய்தலுக்கு எற்பாடும் உரிய சிறுபொழுதுகளாம்.

## கருப்பொருள்

99. கருப்பொருளென்பவை உளவாகும் பொருள் கள்; அஃதாவது, ஆங்காங்கே தோன்றும் பொருள்கள். [கரு - தோற்றம்.]

கருப்பொருள்கள் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ் முதலியனவாகப் பல வகைப்படும்.

குறிஞ்சிக்குத் தெய்வம் - முருகன் ; உணவு - மலை நெல், தினை ; விலங்கு - புலி, கரடி, பன்றி முதலியன ; மரம் - அகில், சந்தனம், தேக்கு, வேங்கை, முதலியன ; பறவை - கிளி, மயில் ; பறை - வெறியாட்டு, தொண் டகம் ; தொழில் - தேனெடுத்தல், கிழங்ககழ்தல், குன்ற மாடுதல், கிளி கடிதல் ; யாழ் - குறிஞ்சியாழ் ; பண் - குறிஞ்சிப் பண் ; தலைமகன் - சிலம்பன், வெற்பன், பொருப்பன் ; தலைமகள் - கொடிச்சி, குறத்தி ; பூ - குறிஞ்சி, காந்தள், வேங்கை ; நீர் - அருவிநீர், சுனைநீர்; ஆடவர் - குறவர், குன்றவர் ; மகளிர் - குறத்தியர் ; ஊர்- சிறுகுடி.

பாலைக்குத் தெய்வம் - துர்க்கை, சூரியன்; உணவு - வழிப்பறி கொள்ளை இவற்றால் கிடைத்தவை ; விலங்கு - வலியழிந்த யானை, புலி, செந்நாய் ; மரம் - இருப்பை, பாலை ; பறவை - கழுகு, பருந்து ; பறை - போர்ப்பறை, ஊரெறிப்பறை, நிரைகோட்பறை ; தொழில் - நிரைகோள் ளுதல், சூறையாடுதல், சுரத்தெறிதல் ; யாழ் - பாலையாழ்; பண் - பஞ்சரம் ; தலைமகன் - மீளி, விடலை, காளை ; தலைமகள் - எயிற்றி, பேதை ; பூ - மராம், குராம், பாதிரி;

நீர் - வற்றின கிணறு, சுனை ; ஆடவர் - எயினர், மறவர்; மகளிர் - எயிற்றியர், மறத்தியர் ; ஊர் - கொல் குறும்பு.

முல்லைக்குத் தெய்வம் - மாயோன் ; உணவு - வரகு, சாமை ; விலங்கு - முயல், சிறுமான் ; மரம் - கொன்றை, காயா, குருந்து ; பறவை - கானங்கோழி, மயில் ; பறை- ஏறுகோட்பறை ; தொழில் - வரகு களைபறித்தல், நிரை மேய்த்தல், குழலூதல் ; யாழ் - முல்லையாழ் ; பண் - சாதாரி ; தலைமகன் - குறும்பொறைநாடன், தோன்றல்; தலைமகள் - கிழத்தி, மனைவி ; பூ - முல்லை, தோன்றி; நீர் - கான்யாறு ; ஆடவர் - இடையர், ஆயர் ; மகளிர் - இடைச்சியர், ஆய்ச்சியர் ; ஊர் - பாடி, சேரி.

மருதத்துக்குத் தெய்வம் - இந்திரன் ; உணவு - நெல் ; விலங்கு - எருமை, நீர்நாய் ; மரம் - வஞ்சி, காஞ்சி, மருதம் ; பறவை - நாரை, நீர்க்கோழி, தாரா ; பறை - மணமுழா, நெல்லரி கிணை ; தொழில் - நெல்லரி தல், வைக்கோல் துவைப்பித்தல், களைபறித்தல் ; யாழ் - மருதயாழ் ; பண் - மருதம் ; தலைமகன் - ஊரன், மகிழ் நன் ; தலைமகள் - கிழத்தி, மனைவி ; பூ - தாமரை, செங் கழுநீர், குவளை ; நீர் - மனைக்கிணறு, பொய்கை, யாறு; ஆடவர் - கடையர், உழவர் ; மகளிர் - கடைச்சியர், உழத்தியர் ; ஊர் - பேரூர், மூதூர்.

நெய்தலுக்குத் தெய்வம் - வருணன் ; உணவு - மீன் விலை, உப்புவிலை ; விலங்கு - சுறு, முதலை ; மரம்-புன்னை, தாழை ; பறவை - அன்னம், நீர்க்காக்கை, அன்றில் ; பறை - மீன்கோட் பறை, நாவாய்ப்பறை ; தொழில் - மீன் விற்றல், உப்பு விற்றல், அவற்றை ஈட்டல் ; யாழ் - விளரியாழ் ; பண் - செவ்வழி ; தலைமகன் - துறைவன் ; கொண்கன், சேர்ப்பன் ; தலைமகள் - நுளைச்சி, *பரத்தி ; பூ - தாழை, நெய்தல் ; நீர் - மணற்கிணறு, உவர்க்கழி ; ஆடவர் - பரதர், நுளையர் ; மகளிர் - பரத்தியர், நுளைச்சி யர் ; ஊர் - பட்டினம், பாக்கம்.

மற்றும் பொருந்துவனவெல்லாங் கொள்க. இவை பெரும்பான்மை பற்றியன.

## உரிப்பொருள்

**100.** உரிப்பொருள் என்பன அந்தந்த நிலத்துக்குச் சிறப்பாக உரிய நிகழ்ச்சிகள். இவை ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் சேர்க்கை பற்றியன. அவ்வந்நிலத்துக் குரிய பொருளாவன :

குறிஞ்சி - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.
பாலை - பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.
முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.
மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்.
நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.

இவற்றை நினைவூட்டுஞ் செய்யுள் வருமாறு :—

போக்கெல்லாம் பாலை புணர்த்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூடல் அணிமருதம்—நோக்குங்கால்
இல்லிருத்தல் முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருக்கும் ஐம்பாற் றுறைகை.

## புறப்பொருள்

**101.** புறப்பொருள் அறமும் பொருளும் பற்றிய தேனும் இங்கே கூறப்படுவன, அவற்றிற் கேதுவான போர் நிகழ்ச்சி பற்றிய செய்திகளேயாகும்.

புறப் பொருள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு திணைகளாகப் பிரிக்கப்படும். இவற்றுள்,

வெட்சியாவது பகைவருடைய பசுக்களைக் கவர்த லும் கவர்ந்த பசுக்களை மீட்டலும். இவற்றுள், மீட்டல் தனியே கரந்தை எனவும் கூறப்படும்.

வஞ்சியாவது பகைவருடைய நாட்டைக் கைப்பற்ற வெண்ணி அவர்மேற் போருக்குச் செல்லுதல்.

உழிஞையாவது பகைவருடைய மதிலை வளைத்துக் கொள்ளுதலும் தம் மதிலைக் காத்தலும். இவற்றுள், மதில் காத்தல் தனியே நொச்சி யெனவுங் கூறப்படும்.

தும்பையாவது பகைவரோடு போர் செய்தல்.

வாகையாவது பகைவரை வெல்லுதல்; அவரவர் தத்தம் இயல்பைச் சிறப்பித்துக் கூறுதலும் வாகை யென்பர்.

காஞ்சியாவது போருக்கு வந்த பகைவர்கட் கெதிரே சென்று ஊன்றி நிற்றல்; வீடுபேறு நிமித்தமாகப் பல வகை நிலையாமைகளைச் சான்றோர் எடுத்துக் கூறுதலும் காஞ்சி என்பர்.

வெட்சி, கரந்தை, வஞ்சி முதலிய நிகழ்ச்சிகளில் ஈடுபடும் வீரர், முறையே, வெட்சிப்பூ, கரந்தைப்பூ, வஞ்சிப்பூ முதலியவற்றாலாகிய பூமாலைகளைச் சூடுவர்.

குறிப்பு :—பண்டைத் தமிழர் போர் நிகழ்ச்சி வெட்சியில் தொடங்கி வாகையில் முடியும்.

இச்செய்திகளை நினைவூட்டுஞ் செய்யுள் வருமாறு :-

வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகும் உழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்.

பாடாணாவது ஒருவனுடைய புகழ் வலிமை கொடை முதலியவற்றை யாராய்ந்து சிறப்பித்துக் கூறுதல்.

மேற் கூறியவையே யன்றிக் கைக்கிளை பெருந்திணை யென்பனவும் ‘பொதுவியல்’ என்பதும் புறப்பொருளின் திணைகளாகக் கூறப்படும்.

அகப்பொருளும் புறப்பொருளும் பற்றிய திணைகள் பல்வேறு ‘துறை’களாகப் பகுக்கப்பட்டு நூல்களிற் பயின்றுவரும்.

## பயிற்சி

1. அகப்பொருள், புறப்பொருள் இவற்றை விளக்குக.

2. ஐந்திணையென்று கூறப்படுபவை யாவை? அவை ஒவ்வொன்றுக்கும் உரிய முதற்பொருளையும் உரிப்பொருளையும் குறிக்க.

3. கருப்பொருள் என்பவை யாவை?

4. ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும் உரிய தெய்வம், உணவு, தொழில், விலங்கு, பறவை, மரம், பூ, தலைமக்கள், நிலமக்கள், ஊர் இவற்றைக் கூறுக.

5. புறப்பொருட்டிணைகள் யாவை? அவை ஒவ்வொன்றையும் பற்றிய நிகழ்ச்சி யாது?

6. பண்டைத் தமிழர் போர் நிகழ்ச்சி எந்தத் திணையில் தொடங்கும்? எதனில் முடியும்?

7. ஒவ்வொரு திணைக்கும் உரிய அடையாளப் பூமாலை யாது?